# ஞானச்சுடர்

## சந்நிதியான் ஆச்சிரமம்.

மாசி

2013




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள்வழி



**செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்**
**தாற்றின் அடங்கப் பெறின்.**

**பொருள் :** அறிய வேண்டியவைகளை அறிந்து ஒருவன் அடங்கி நடந்தால் அவனுடைய அடக்கம் பிறரால் மதிக்கப்பட்டு அவனுக்குச் சிறப்பைத் தரும். (123)

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது.**

**பொருள் :** நல்லொழுக்கம் தவறாது ஐம்புலன்களை அடக்கி இருப்பவனின் பெருமை மலையினும் மிகப் பெரியதாகும். (124)

# நற்சிந்தனை



## மறப்பேனோ குருநாதன் தன்னை

### பத்தரேயாவார் பணி

**குறள் வெண்பா**

ஒருபொல்லாப் பும்இல்லை யென்றே யுரைத்தான்
திருவாளன் செல்லப்பன் தேர் 01

முழுவதும் உண்மை எனமொழிந்தான் முன்னாள்
வழுவில்செல் லப்பன் மதி 02

நாமறி யோமென்னும் நல்வாக்கு நல்கினான்
சேமநிதி செல்லப்பன் தேர் 03

ஆரறிவா ரென்ன வுரைத்தவென் னாசானாம்
பாரறியாச் செல்லப்பன் பார் 04

அப்படியே யுள்ளதென் றோதிய நல்லாசான்
ஒப்பிலாச் செல்வன் உணர் 05

ஒருமொழி யாலே யுணர்தற்கு வைத்தான்
கருவழியை மீறிலோன் காண் 06

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை



உ

# ஞானச்சுடர்

வெளியீடு— 2 சுடர்— 182

2013 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இராம நாமம் | திருமதி நா. சந்திரலீலா | 01 -03 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 04 -07 |
| பல்லவர் கால ஆலய... | செல்வி செ. ஜடா | 08 -09 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 10 -12 |
| மானிடப் பிறவி | திருமதி வெ. புவனேஸ்வரி | 13 -14 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | – | 15 -16 |
| இறைவனது எண்... | நா. நல்லதம்பி | 17 -19 |
| சிறுவர் கதைகள் | – | 20 -21 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 22 -23 |
| சிந்திப்போம் செயற்படுவோம் | ஆ. இராசரெத்தினம் | 24 -26 |
| நித்திய அன்னப்பணி | – | 27 -28 |
| நடை உடையில் சைவம் | இரா. செல்வவடிவேல் | 29 -31 |
| திருமந்திரக் கதைகள் | கே.வி. குணசேகரம் | 32 -33 |
| திருக்கோவையார் | இரா. சாந்தன் | 34 -37 |
| காளமேகம்... | – | 38 -41 |
| ஸ்ரீமத் சபாரத்தின... | – | -42 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 43 -44 |
| சிவபூமி ஞானஆச்சிரமம் | செ. ரவிசாந் | 45 -47 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக் குருக்கள் | 48 -51 |
| ஆன்மிக வாழ்வு | த. சுகந்தன் | 52 -53 |
| சிவராத்திரி | திருமதி ப. நடராஜா | -54 |
| அட்ட வீரட்டத் தலங்கள் | வல்வையூர் அப்பாண்ணா | 55 -60 |


அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்




## வெளியீட்டுரை:-

தைமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், இம்மலரானது ஆத்ம ரீதியாக மக்கள் மத்தியில் பக்தியைப் பரப்புகின்ற செயற்பாட்டினைக் கொண்டுள்ளது. ஆச்சிரமத்தில் இடம்பெறும் மலர் வெளியீடு, அன்னதானப்பணி போன்ற பணிகள் யாவும் சாதாரண செயற்பாடுகளல்ல. சந்நிதி வேலவன் ஆச்சிரமத்தின் சுவாமிகளின் உள்ளத்தில் குடிகொண்டு மானசீகமாக நடாத்தும் செயற்பாடாகவே விளங்குகின்றது என்று கூறியதுடன் மலரின் செயற்பாடானது மிகவும் காத்திரமானதாகவே விளங்குகின்றது என்பதனை சபையில் கூடியிருந்த அடியார்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எடுத்துக்கூறியதோடு, தொடர்ந்தும் இப்படியான நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கு சந்நிதியானின் அருள் கிடைக்க வேண்டும் என்று வேண்டி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

தைமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில் தைமாத ஞானச்சுடர் மலரானது ஆச்சிரமத்தின் முகப்பை தனது அட்டைப்படமாகக் கொண்டு சிறப்பாக வெளிவந்துள்ளது என்று கூறினார். மேலும் 2013இல் வெளிவந்த இம்மலரில் புதிய பல்வேறு அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்மலர் சைவ மக்கள் அனைவரினதும் கரங்களில் தவழ்வதோடு புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் நம் மக்களுக்கும் மன அமைதியையும் சாந்தியையும் ஏற்பட வழிசமைத்துள்ளது என்பதைப் பல அன்பர்கள்மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

ஆச்சிரமம் ஆற்றும் பணிகளை சமூகத்தில் உள்ளவர்களுடைய “வாய் வாழ்த்தா விட்டாலும் வயிறு வாழ்த்தும்” என்ற கூற்றிற்கிணங்க இங்கே நடைபெறும் நித்திய அன்னப்பணி போற்றுவதற்குரியது. அத்துடன் தைமாத மலரில் இடம்பெற்ற ஆக்கங்கள் அனைத்தையும் விளக்கிக் கூறியதுடன் எமது நல்வாழ்க்கையை தீர்மானிப்பது நற்சிந்தனைகளே. அச்சிந்தனைகளின் மாற்றத்தை நல்ல நூல்களே தீர்மானிக்கின்றது. அவ்வகையான நூல்களே நம் தலைவிதியை நிர்ணயம் செய்கின்றது. இவ்வகையில் இம்மலர் போற்றுதற்குரியது என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

## சுடர் பரவட்டும்

இலண்டனில் வசிக்கும் காரணமாக, விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்தபோது எனது உறவினரின் இருப்பிடத்தில் கிடைத்த "ஞானச்சுடர்" கார்த்திகை, மார்கழி (2012) தைமாத (2013) இதழ்களை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வாசிப்பதிலும் எழுதுவதிலும் ஆர்வமுள்ள எனக்கு, ஞானச்சுடரின் ஒவ்வொரு பக்கமும் அறிவுப் பசியை நிறையவே போக்கியது. கடந்த 10 வருடங்களுக்கு மேலாகப் பல பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் கட்டுரைகளை எழுதிவரும் அனுபவத்தாலும் இலண்டனில் இலவசமாக மாதமிருமுறை வெளிவரும் "ஒரு பேப்பர்" பத்திரிகையில் தகவல் களஞ்சியம் பகுதியை நிரப்பும் ஒரு கட்டுரையாளன் என்ற வகையில் "ஞானச்சுடர்" பற்றிய எனது கருத்தை தங்கள்முன் சமர்ப்பிக்கிறேன்.

"ஞானச்சுடர்" சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரைகள், தகவல்கள் அத்தனையும் ஆன்மீக அறிவாளிகளாலும், சைவ சித்தாந்தத்தில் ஊறிய அறிஞர்களாலும் தொகுக்கப்பட்ட ஆக்கங்களாக அமைந்துள்ளன. இவ்வாக்கங்களில் கையாளப்படும் மொழிநடை, சாதாரண கல்வியறிவுள்ள மக்களுக்குப் புரிந்துகொள்வது சற்று சிரமமாக இருக்குமென்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். ஞானச்சுடர் சஞ்சிகையின் நோக்கம், இலக்கு சாதாரண மக்களையும் சென்றடைய வேண்டுமென்ற விருப்பம் இருக்குமானால், மொழிநடை இலகுவாகப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தொகுக்கப்பட முடியுமானால் இச்சஞ்சிகையின் வளர்ச்சி பல்கிப் பெருகுமென்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை. படித்த மூன்று இதழ்களிலும் வெளிவந்த ஆக்கங்களை அலசியபோது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவங்கள், பாடிய பாடல்கள், தரிசித்த ஸ்தலங்கள் இன்னும் எமது கண்முன்னே நிற்பதுபோல் காட்சியளிக்கின்றன. அரிய பொக்கிஷங்களை சைவ நூல்களை அறியவோ, படிக்கவோ முடியாத பலருக்கு இச்சஞ்சிகையில் வெளிவரும் ஆக்கங்கள் தேவையான முக்கிய தகவல்களை நிறையவே தருவது அறிவுப்பசிக்கு அற்புதமான விருந்து.

தினமும் 25ரூபா மட்டும் செலவு செய்து தினசரிப் பத்திரிகைகளை வாங்கும் பழக்கமுள்ள சாதாரண மக்களுக்கு, 30ரூபா கொடுத்து மாதமொருமுறை ஞானச்சுடர் சஞ்சிகையைப் பெறுவது அவ்வளவு சிரமமல்ல. அவ்வாறு இம்மக்களின் கைகளில் தவழ வைப்பது "ஞானச்சுடர்" வெளியீட்டாளரின் கையிலேயே தங்கியுள்ளதை மிகப் பணிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழும் சைவமும் தளர்ந்துபோன நிலையில் இருக்கும் இக்காலகட்டத்தில் சாதாரண மக்களை தட்டியெழுப்புவதில் "ஞானச்சுடர்" முன்வரவேண்டும். பழுத்த சைவர்கள் மத்தியில் விழிப்புணர்வு அவசியமில்லை. சாதாரண மக்கள் மத்தியில் சுடர் பரவ திசை மாறுவது அவசியம்.

**திரு உமா மகாலிங்கம் அவர்கள்**

### திருப்புகழ்

# செல்வச் சந்நிதிப் பெருமாளே

அருணா சலம்குதித்த அருணகிரி நாதருக்கு
அரியபுகழ் பாட வைத்த அருளாளனே
அன்பான குருப ரற்கு துன்பான மூங்கை தீர்த்து
அருட் பிள்ளைத் தமிழ் கேட்ட ஆறுமுகனே
ஒரு நாவல் மரத்தி ருந்து அவ்வைசுட்ட பழம் கேட்க
உதிர்த்த பழம் ஊதித் தின்ன சுடுமென்றாயே
உணர்ந் தவ்வை நாணமுற அவ்வைக்கு முன்னின்ற
ஒப்பில் கந்த சுவாமியான உயர் முருகனே
கருவான வேதத்தின் ஓங்காரப் பொருளறியா
கர்வ அயன் சென்னி குட்டிய கந்த வேளே
கண்ணுதலப் பொருள்கேட்க உள்மகிழ்ந்து உரைசொன்ன
கருணையனே அற்புதமாம் கார்த்திகேயனே
திருமாலின் மருமகனே திருக்கந்த கோட்ட மான,
செல்வனே சேவற் கொடி திருமுருகனே
தேவர்களும் நாவலரும் தேடியே போற்று கின்ற
சேயோனே செல்வச் சந்நிதியிற் பெருமாளே!

## ஆறுமுகமான பொருள்

தண்டைசிலம் பொலிக்கவிளை யாடுமுக மொன்றே
தமிழ்முனிக்கு உபதேசம் செய்தமுக மொன்றே
விண்டவளும் கார்த்திகைபா லுண்டமுக மொன்றே
வெற்றிவே லேந்திவிளை யாடுமுக மொன்றே
தொண்டைமா னூர்க்கோயில் அமர்ந்தமுக மொன்றே
தொன்று தொட்டு அன்னக் கொடைக்கு உதவுமுக மொன்றே
அண்டர் தொழும் ஆறுமுக மானபொருள் ஆகி
ஆடுமயிலேறி விளை யாடும் பெருமாளே.

முதுபெரும்புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்

# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)

**செ. சம்பந்தநாதன்**
(லண்டன்)

**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)

**N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)

**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், .மயிலியதனை, தொண்டைமானாறு)

**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)

**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)

**அதிபர்**
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)

**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)

**V.R. கனகராசா**
(சண்றைஸ் ஸ்ருடியோ, சுண்ணாகம்)

**ம. இரங்கநாதன்**
(ஆசிரியர், நெல்லியோடை, அச்சுவேலி)

**தலைவர், செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

**சி. பத்மநாதன் J.P**
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)

**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)

**செ. சுப்பிரமணியம்**
(குடவத்தை, துன்னாலை)

**வ. நந்தகுமார்**

(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)

**உரிமையாளர்**

(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)

**சி. மகாலிங்கம் J.P**

(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)

**சு. சிவதாசன் G.S**

(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**தலைவர், செயலாளர்**

(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)

**சு. செல்வரெத்தினம்**

(K.K.S. வீதி, சுண்ணாகம்)

**உரிமையாளர்**

(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)

**உரிமையாளர்**

(புகழ் ஸ்ரோர்ஸ், K.K.S. வீதி, சுண்ணாகம்)

**ஐ. லோகஞானம்**

(பிரதம அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)

**ச. ஸ்ரீகுகன்**

(கரணவாய் மேற்கு, கரவெட்டி)

**திருமதி. சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்**

(முருகமூர்த்தி வீதி, சங்கானை)

**ஆ. விஸ்வலிங்கம்**

(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)

**V. அரியராசா**

(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)

**அ. அரியகுமார் அதிபர்**

(யாழ். சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)

**N. இரவீந்திரன்**

(இளை. மக்கள் வங்கி உதவி முகாமையாளர், உரும்பராய்)

**க. யோகேந்திரநாதன் G.S**

(தும்பளை, பருத்தித்துறை)

**உரிமையாளர்**

(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)

**செ. சந்திரமூர்த்தி**

(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)

**அ. த. க. கிருஷ்ணராஜா J.P**
(உரும்பராய்)
**சி. பஞ்சலிங்கம்**
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
**செல்வி ஷாலினி தேவேந்திரா**
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
**இராசரெட்ணம் வசந்தன்**
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
**இ. குமாரதாசன்**
(இளை. பிராந்திய மருந்தாளர், யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(உதயா பேக்ஹவுஸ், வல்லைவீதி, சங்கானை)
**N. K. தங்கராசா**
(இளை. தபாலதிபர், புலோலி)
**உரிமையாளர்**
(நாதன் மெடிக்கல் சென்ரர்,நெல்லியடி)
**சோ. புவனதாஸ்**
(சங்கானை)
**த. விவேகானந்தன்**
(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)
**S. வசந்தகுமார் G. S**
(உரும்பராய்)
**இ. ஜெயபாலன்**
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
**மா. ந. பரமேஸ்வரன்**
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
**K. சிவம்**
(காரைநகர் றோட், யாழ்ப்பாணம்)
**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**செ. சிவசுப்பிரமணியம்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)

**வி. ந. ஸ்ரீதரன்**
(நீராவியடி, யாழ்ப்பாணம்))
**ப. பத்மகாந்தன்**
(ஆசிரியர், புலோலி)
**சி. பிரணவன்**
(பாரதிலேன், நல்லூர்)
**செ. செல்விகா**
(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)
**சி. இராசரத்தினம்**
(இராஜஸ்தான்,சுதுமலை)
**சி. பாலச்சந்திரன்**
(கற்பகப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியதெரு, கரவெட்டி)
**நா.முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா.தேவகுரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)
**செ. பாலச்சந்திரன்**
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
**எல். கெங்காதரன்**
(கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்)
**இ. உதயசூரியன்**
(கோப்பாய் வடக்கு, கோப்பாய்)
**க. அரியகுட்டி**
(கரணவாய் தெற்கு, கரவெட்டி)
**இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)**
(நெல்லியடி, கரவெட்டி)
**கு. ஜெயந்தன்**
(சேர்ச்சடி, குடத்தனை)



# இராம நாமம்

திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள்

திருமால் தனது பக்தர்களைக் காப்பதற்கு ஏற்ப துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்வதற்கு எடுத்தவையே தசாவதாரமாகும். அவை முறையே மச்ச, கூர்ம, வராக, வாமன, நரசிம்ம, பரசுராம, இராம, கிருஷ்ண, பலராம, கல்கி அவதாரங்களாகும். இவற்றுள் மக்களால் போற்றப்படுவதும், சிரேஷ்டமானதும் இராம அவதாரமாகும். இராம அவதாரத்தின் சிறப்பை இந்துக்களின் இதிகாச நூல்களில் ஒன்றாகிய "இராமாயணம்" எடுத்தியம்புகிறது. இராமாயணம் என்றால் உலகில் நாம் எப்படி வாழவேண்டும் என்று இராமர் நமக்கு காட்டிய வழியாகும். அவதாரம் என்பது மேலிருந்து கீழே வருதலைக் குறிக்கும். திருமால் மனிதராகிய எம்மை மேலே உயர்த்தி தெய்வமாக ஆக்குவதற்கு அவதாரம் செய்தார். ராமருடைய குணங்களும், நாமமும் எம்மில் இரண்டறக் கலக்கப்பட வேண்டும். வால்மீகி இராமாயணம், கம்பராமாயணம், துளசிராமாயணம் என்பன வெவ்வேறு ஆசிரியர்களால் இயற்றப்பட்டன.

சுக்கில பட்சத்து நவமித் திதியில், கர்க்கடக இலக்கினத்தில், புனர்பூச நட்சத்திரத்தில் ஸ்ரீ இராமன் அவதரித்தார். கோசல நாட்டை நீதி தவறாது ஆண்ட தசரத மன்னனுக்கும், கௌசல்யாதேவிக்கும் புத்திர காமேஷ்டி யாகம் மூலம் கிடைத்த பாயசத்தை அருந்தியது மூலம் கௌசல்யாவின் மணிவயிற்றில் இராமனும், கைகேயிக்குப் பரதனும், சுமித்திரைக்கு லட்சுமண, சத்துருக்கனும் அவதாரம் செய்தனர்.

இராமநாமத்தின் மகிமை சொல்லில் அடங்காது. ரா என்று உச்சரித்தால் நம் பாவங்கள் அழியும். ம என்று உச்சரித்தால் புதுப்பாவங்கள் நம்மை அணுகாது. நாராயணா என்பதிலுள்ள ரா வையும், நமசிவாய என்பதிலுள்ள ம வையும் சேர்த்தால் வருவது ராமநாமம். மராட்டிய வீரன் சிவாஜியின் குரு சமர்த்த இராமதாசன். அவர் ஒரு இராம பக்தன். இராம நாமத்தை உச்சரித்து இராமனாகவே வாழ்ந்தவர். ஒருமுறை இராம நாமத்தின் மகிமையை உணர்த்துவதற்கு பறவை



ஒன்றை அம்பால் எய்து இறந்தபின் ராம, ராம என மனமுருகி செபித்து உயிர்த்தௌச் செய்தார். என்னே இராமநாம மகிமை!

திறமையும் நம்பிக்கையும் வெல்லமுடியாத படை.

இரத்தினாகரன் என்ற வேடன் கொள்ளைத் தொழிலில் ஈடுபட்டுப் பின் தன்னுடைய பாவங்களைப் போக்க காட்டில் அமர்ந்து இராம நாமத்தை உச்சரித்து வான்மீகி என்னும் கவிஞன் ஆனான். அவர் உடலைமூடிக் கறையான் புற்றுக் காணப்பட்டதால் இப்பெயர் ஏற்பட்டது. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜர் பன்முறை ஸ்ரீராமஜெயம் என்னும் நாமத்தைச் சொல்லி இராமனுடைய திவ்விய தரிசனமும் பெற்றார். அவர் இயற்றிய முதல் கீர்த்தனம் "நமோ, நமோ ராகவாய" ஆகும். இராமன் புகழ்பாடும் அவரது ஆயிரக்கணக்கான கீர்த்தனைகள் கர்நாடக சங்கீதத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம்.

இராமனை விட இராம நாமத்திற்கு சக்தி அதிகமுண்டு என விளக்கும் கதை இது. சகுந்தன் என்னும் மன்னன் தன் அரசசபைக்கு வந்திருந்த முனிவர்களைப் பார்த்து "வசிட்டர் போன்ற தவசிரேஷ்டர்களே!" என வரவேற்றான். நாரதர் விசுவாமித்திரரிடம் சென்று கலகமூட்ட அவர் நாளை சூரிய அஸ்தமனத்தின் முன் சகுந்தனின் தலை என் காலில் கிடக்கும் என சபதமிட்டு உடனே இராமரிடம் சென்று தனது சபதத்தை நிறைவேற்றும்படி கூற இராமரும் சம்மதித்தார்.

நாரதர் சகுந்தனிடமும் சென்று நடந்ததைக் கூறி அனுமானை சரண் அடையும்படி யோசனை பகன்றார். மறுநாட்காலை இராமனுக்கும், அனுமானுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. அனுமான் தனது வாலினால் கோட்டை கட்டி உள்ளே சகுந்தனை வைத்து கோட்டை மீது தான் இருந்து இராமநாமத்தை உச்சரித்தான். அனுமானுடைய உரோமங்கள் இராமநாமமாக விளங்கியதால் இராமன் எய்த பாணங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நெருங்கவே முடியவில்லை. களைத்துப் போய் இறுதியில் தன் வீரத்தின் மீது சத்தியம் செய்து பாணத்தைத் தொடுக்க ஆரம்பித்தார். உடனே தேவர்கள் ஓடிவந்து சண்டையை நிறுத்தினர். நாரதர் விசுவாமித்திரரைப் பார்த்து "தேவர்களும், சகுந்தனும் காலடியில் நமஸ்காரம் செய்கிறார்கள். தலை காலடியில் கிடக்கிறது" என்றார். பின்பு இராமன் அனுமானைப் பார்த்து என்னால் உன்னை ஏன் வெல்ல முடியவில்லை என வினாவினார். அதற்கு அனுமான் இராமனை விட இராமநாமம் வலிமை கூடியது. உங்கள் நாமத்திற்கு முன்னால் உங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றார்.

காட்டில் இருந்த வேளை, இராமன் தன் அம்பை நிலத்தில் ஊன்றினான். அம்பின் அடியில் தவளை குத்தப்பட்டிருந்தது. அப்பொழுது, ஆபத்து ஏற்படும்போது ஏன் என்னைக் கூப்பிடவில்லை என்று இராமன் தவளையைப் பார்த்துக் கேட்டார். அதற்கு தவளை, மற்றவர்களால் ஆபத்து வரும் போது ராமா, ராமா என்பேன். நீ வந்து காப்பாற்றுவாய், ஆனால் நீயே என்னைக் குத்தியதால் நான் யாரைக் கூப்பிடுவது என்றது.

இராமநாமம் விலைமதிப்பற்றது. எல்லோரும் இராமநாமத்தை சொன்னாலும் அதன் மதிப்பை உணர்ந்தவர் ஒரு சிலரே. மகாத்மா காந்தியைப் பிரார்த்தனையில் இருந்தபோது சுட்டவன் நதுராம்கோட்சே. காந்தி அந்த வேளையிலும் ஐயோ எனக் கத்தாது ஹேராம் என மூன்று முறை கூறிச் சாய்ந்தார். துன்பம் வரும் வேளைகளில் நாமும் அவன் நாமத்தைக் கூறுவோமாக.

கைகேயி கேட்ட வரத்தினால் இராமன் பதினான்கு வருடங்கள் காடாளவும், பரதன் நாடாளவும் வேண்டியதாயிற்று. எனினும் பரதன் விரும்பாமல் இராமரையே ராச்சிய பரிபாலனம் செய்ய வற்புறுத்துகின்றான். அவனுக்கு இராமர் கூறிய சில அறிவுரைகள் இராமகீதை எனப்படும். மரத்திலிருந்து பழுத்த இலை, கனி தானாகவே விழுவதுபோல மனிதரும் இறந்து போக வேண்டும். நரை, திரை, மூப்புக்கு ஆளாக வேண்டும். போன நாட்கள் திரும்பி வராது. நதிகள் கடலை

நோக்கிச் செல்லுமே தவிர திரும்பி வருவதில்லை.

பகவானுக்கு உள்ள சுதந்திரம் சீவனுக்கு கிடையாது. வாழும் மனிதர்கள் இஷ்டப்படி நடக்க முடியாது. காலம் அவர்களை நடத்தும். சேர்த்து வைக்கும் பொருளுக்கு முடிவு அழிவுதான். பகலும், இரவும் மாறி வருவதுபோல ஆயுளும் போய்க் கொண்டேயிருக்கும். கடலில் மிதக்கும் இரண்டு கட்டைகள் சேர்ந்திருக்கும். பின்பு பிரிந்து வேறுவேறாகப் போகும். அதேமாதிரி மனிதனிடமும் மனைவி, பிள்ளைகள், செல்வம், சொத்துக்கள் சேரும். பின் ஒவ்வொன்றாகப் பிரிந்துவிடும். எனவே நாமும் உணர்ந்து ஆத்மார்த்த தேடலை நாடிச் செல்வோம்!

இராமனும், கிருஷ்ணனும் திருமாலின் அவதாரங்களானாலும், நாம் எப்படி நடக்க வேண்டுமென்று இராமன் வழிநடந்து காட்டினான். கிருஷ்ணன் நடந்த முறையில் நாம் நடக்க முடியாது. ஆனால் அவரின் உபதேசங்களைப் பின்பற்ற முடியுமல்லவா?

இராமன் சௌசீல்யத்துடன் விளங்கினான். கிருஷ்ணன் சௌலப்யத்துடன் விளங்கினான். இவை வடமொழிச் சொற்கள் இவற்றின் பொருளாவது சௌசீல்யமென்பது நீரின் தன்மையைக் குறிக்கும். உயரத்தில் உள்ள நீர் பள்ளத்தை நோக்கிப் பாய்வது மாதிரி இராமனும் குகன், சுக்கிரீவன், அனுமன், விபீஷணன் ஆகியோரை சகோதரர்களாக ஏற்றான். இராமன் தோள்களில் கையைப் போட்டான். சௌலப்பியம் என்பது பார்ப்பதற்கு எளிமையாக இருத்தல். மக்களைப் போல தானும் இருந்தான். திருடினான் பொய் கூறினான்.

சிவபெருமானுடைய திருவிளையாடலில் தனது கணங்களுக்கு யாரை அதிபதியாக்கலாம் என்று முருகனுக்கும், பிள்ளையாருக்கும் போட்டி வைத்தபோது ராமநாமத்துள் பிரபஞ்சமே அடக்கமென தெரிந்த பிள்ளையார் ராம என்று தரையில் எழுதி வலம் வந்து கணங்களுக்கு அதிபதியாகி கணபதி என்று பெயர் பெற்றார்.

அனுமன் ஸ்ரீராமனுடைய தொண்டன். தனது நெஞ்சிலே இராம நாமத்தைச் சுமந்து கொண்டிருக்கிறான். இராமனுடைய தாரக மந்திரமே மூச்சு. எங்கெல்லாம் இராமாயண உபன்யாசம் நிகழ்கிறதோ அங்கு அனுமன் பிரசன்னமாகியிருப்பார் என்பது ஐதீகம்.

இராமாயணம் மனிதத் தன்மையை பேணிக்காத்து, அறவழியில் நடந்து பிறன் மனை நோக்கா பேராண்மையை போதித்து சகோதர ஒற்றுமையை வலியுறுத்தி ஆன்மீக பாதைக்கு இட்டுச் செல்கிறது. நாமும் இந்த இராமநவமி தினத்தில் அவன் நாமத்தை பாராயணம் செய்து போற்றுவதுடன் நாட்டிற்கு சாந்தி, சமாதானம், சுபிட்சம் வரவேண்டுமென்று பிரார்த்தித்து வணங்குவோமாக.

வாழ்க ராம நாமம்!

## சிந்தனைக்கு சாதனை இன்றிச் சாதனம் இல்லை

பக்தி இன்றி உள்ளத்திற் துறவு ஏற்படாது. மணிவாசகர் பாட்டுக்களைப் படித்துப் பார்த்தால் இது தெரியும். அவர் அறியாத வேதாந்த தத்துவம் இல்லை. அவர் அழுது அழுது பாடியிருக்கிறார். பகவானைப் பெற்ற தாயாக தகப்பனாக அதைவிட நெருங்கிய உறவினனாக மாணிக்கவாசகரைப்போல் நாமும் உருகி அன்பு செலுத்த வேண்டும். செலுத்தினால் ஓரளவு அறிவு பெறுவோம். ஆசைகளை அகற்றும் சக்தி ஓரளவு பெறுவோம். பக்தியின்றி வெறும் படிப்பினால் துறவு நிலை உண்டாகாது.

அளவறிந்து உண்டால் ஆரோக்கியமாக வாழலாம்.



(தொடர்ச்சி...

# திருவண்டப் பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த
சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்
(யாழ்ப்பாணம் - காரைநகர்)

நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமு மாதியு மகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க

**பதவுரை:**

நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க- நூற்பொருள் உணர்ச்சியினால் உணரப்படாத நுட்பத்தினையுடையோன் காண்க; மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க- மேலுங் கீழுமாய் விரிந்து நின்றவன் காண்க; அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க- முடிவும் முதலும் நீங்கினவன் காண்க; பந்தமும் வீடும் படைப்போன் காண்க- ஆன்மாவைப் பற்றிய அநாதிபந்தமாகிய ஆணவத்தைக் கெடுத்தற்பொருட்டுப் பிரவாக அநாதியாகிய பிறவிப் பந்தத்தினையும் அதன் நீக்கத்தினையும் உண்டாக்குவோன் காண்க; நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க- நிலையியற் பொருள்களிலும் இயங்கியற் பொருள்களிலும் வியாபித்து நின்றவன் காண்க; கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க- பிரமன் முதலியோரது தோற்றத்தினையும் அவர்களது முடிவினையும் செய்தோன் காண்க; யாவரும் பெற உறும்

ஈசன் காண்க- உயர்ந்தோர் இழிந்தோர் எவராயினும் அன்பராயின் அவரெல்லாம் தனது அருளைப் பெறுமாறு அவர்பாற் சென்று பொருந்தும் தலைவன் காண்க;

நூலுணர்வுணரா நுண்ணியோன் என்றது கல்வி கேள்வி அறிவால் மட்டும் அறியப்படாத நுட்பமுடையோன் என்றவாறு. மேலொடு கீழாய் விரிந்தோன் என்றது மேலேயுள்ள பொருள்களுக்கெல்லாம் மேலாயும் கீழேயுள்ள பொருள்களுக்கெல்லாம் கீழாயும் நிற்கும் அவன்தன் விரிவினை உணர்த்தியது. "பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர், போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிபே" (திருவெம் 10) என்பதும் காண்க. இனி, மேலேயுள்ள சுத்தமாயாவுலகம் முதற் கீழேயுள்ள அசுத்த மாயாவுலகம் ஈறான மாயையின் பரப்பு முழுவதும் விரிந்து நிற்போன் எனினுமாம். மேலொடு கீழாய் என்றதனால் இடைப்பட்ட பொருளுமாய் விரிந்து நின்றோன் என்பதும் உபலக்கணத்தாற் கொள்ளப்படும். "விரிந்தனை குவிந்தனை" (ஞான 106:2) எனத் தேவாரத்து வருதலுங் காண்க.

மாயையின் பரப்பு முழுவதும் விரிந்து நிற்பினும் அம்மாயையிற் காணப்படும் முடிவும் தோற்றமும் இல்லாதவனாதலின் "அந்தமும் ஆதியும் அகன்றோன்" என்றார். "முதலும் இறுதியு மில்லார் போலும்" (தே 234:6) என அப்பரடிகள் அருளியமையுங் காண்க. அந்தமும் ஆதியும் அகன்ற இறைவனை, "அந்தமு மாதியு மாயினார்க்கு" (பொற்சுண் 20) என அடிகள் பிறிதோரிடத்துக் கூறுமாறு என்னையெனின், இறைவன் உலகிற்கு முடிவும் முதலுமானமைபற்றியென்க.

பந்தம்- பிறவிப் பந்தம்; வீடு- அதன் நீக்கம். இறைவன் பந்தமும் வீடும் படைத்தலை, "அண்டம் எண்டிசைக்கும் பந்தமும் வீடும் பரப்புகின்றீர்" (தே.நாவு 95:2) என்பதனாலுமறிக. இறைவன் பந்தத்தைப் படைத்தல் ஆன்மாவைப்பற்றி நிற்கும் அநாதிபந்தமாகிய ஆணவ வலியைக் கெடுத்தற் பொருட்டென்க. பந்தமும் வீடும் படைத்தல் பற்றிப் "பந்தமோட்சப்ரணீத" என இறைவன் திருநாமம் வருதல் காண்க.

நிற்பதும் செல்வதும் ஆனோன் என்றது நிலையியற் பொருள்களும் இயங்கியற் பொருள்களும் இறைவனது வியாபகத்துள் அடங்குதல் பற்றியென்க.

கற்பம்- பிரமன் முதலிய தேவத் தலைவர்களுக்குரிய வாழ்நாள். "நான்முகன் வாழ்நாள் கற்பமாகும்" எனத் திவாகரத்து (தெய்வப்) வருதலும் காண்க. கண்டோன்- செய்தோன். யாவரும் என்றது உயர்ந்தோர் தாழ்ந்தோர் யாவரையும் குறித்தது. அவரெல்லாம் இறைவன் அருளைப்பெற விரும்பின் அன்பராதல் வேண்டும் என்பது வருவிக்கப்பட்டது. "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்" (சென்னிப் 4) என வருதல் காண்க. உறும்- பொருந்தும் "நீலுறு மணி செய்மாடம்" (இரகுவம். நகர்ப் 42) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

தேவரும் அறியா சிவனே காண்க- தேவராயினும் அன்பரல்லாதார் அறியமுடியாத செம்பொருளாயுள்ளவனே காண்க; பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க- பெண் ஆண் அலி என்னும் தன்மைகளையுடையவன் காண்க; கண்ணால் யானும் கண்டேன் காண்க- ஒன்றுக்கும் பற்றாத யானும் எனது ஊனக்கண்ணால் அவனது திருவுருவைக் கண்டேன் காண்க; அருள்நனி சுரக்கும் அமுதே காண்க- அருளாகிய இனிய நீரை மிகவும் பெருகச் செய்கின்ற அமுத நீரூற்றென அறிக; கருணையின் பெருமை கண்டேன்

காண்க; புவனியில் சேவடி தீண்டினன் காண்க- இந்நிலவுலகத்தில் என்னை ஆட்கொள்ள வேண்டித் தனது செவ்விய திருவடியைப் பொருந்தச் செய்தனன் காண்க; சிவன் என யானும் தேறினன் காண்க; ஆட்கொள்ள வந்தவன் சிவபெருமான் என்று யானும் தெளிந்தேன் காண்க; அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க- அச்சிவன் என்னை அடிமை கொண்டு அருள் செய்தனன் காண்க; குவளை கண்ணி கூறன் காண்க- கருங்குவளை மலர்போலுங் கண்களையுடைய உமையம்மையாரை ஒரு கூற்றிலுடையவன் என்றறிக; அவளும் தானும் உடனே காண்க- அம்மையாகிய அவளும் அப்பனாகிய தானும் ஒன்றாயிருந்து அத்துவிதமாயுள்ளனர் என்றறிக.

தேவரும் என்புழி உம்மை உயர்வு சிறப்பு. சிவன்- செம்பொருள். எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மையைச் செய்தலாற் சிவன் என்றார் என்னுமாம். தேவரும் சிவனை அறியாமை "கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி" (போற் 143) "தேவர் கனாவினும் கண்டறியாச் செம்மலர்ப் பாதங்கள்" (பொற் சுண்ணம் 16) "தேவா தேவர்க் கரியானே" (ஆசைப் 3) "கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்" (தெள் 10) "தேவருங் காணாச் சிவபெருமான்" (வெண்பா 9) என வருவனவற்றாலுமறிக.

உலகம் பெண் ஆண் அலி என்னும் முக்கூறுடைமையானும் அவை உலகத்தை ஆக்கும் இறைவனிடத்தும் அமைந்திருந்தாலன்றி உளவாகாமையானும் "பெண் ஆண் அலியெனும் "பெற்றியன்", என்றார். இனி பெண், ஆண் அலியெனும் பெற்றியன் என இறைவற்கு மூன்று இயல்பு கூறியது இறைவன் இயல்பு இத்தன்மைத்தென அறுதியிட்டுக் கூறவியலாமை பற்றி யெனினுமாம்.

"பெண்ணாகி யாணாய் அலியாய்..... நின்றான்"

(திருவெம் 18)

எனத் திருவாசகத்தும்,

"பெண்ணானை ஆணானைப் பேடியானை" (நாவு 233:2) எனத் தேவாரத்தும் வருவன காண்க. பெற்றி- தன்மை. பெற்றியார்ப் பேணிக் கொளல்" (குறள் 442) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

தன்னை ஆட்கொள்ளுதற் பொருட்டுக் குருமூர்த்தமாய் எழுந்தருளிய காலத்து அடிகள் நேரே இறைவனைக் கண்டமையின் "கண்ணாலியானுங் கண்டேன்" என்றார். "கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர" (குழைத்த9) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க.

"அருணனி சுரக்கும் அமுது" என்பதில் சுரக்கும் என்னும் வினையாலும் 1அமுது என்னும் நீரின் பெயராலும் இறைவனை நீருற்றாக உருவகஞ் செய்து அவன் அருளை நீராகவுருவகஞ் செய்யாமையின் இஃது ஏக தேசவுருவகம். இறைவன் அருள்நனி சுரத்தல்.

"தாயி லாகிய இன்னருள் புரிந்த தலைவனை" சத 39

"அருள்நிதி தரவரு மானந்த மலையே" பள்ளி 2

"என்பர மல்லா வின்னருள் தந்தாய்" கோயிற் 2

"என்பே யுருகநின் னருள் அளித்து" எண்ணப் 3

என அடிகள் அருளியவாற்றானுமறிக.

தன்னை ஆட்கொள்ளவேண்டி இறைவன் இந்நிலவுலகத்திலே தனது செவ்விய பாதங்களைத் தீண்ட வைத்தமையால் அவனது கருணையின் பெருமையைக் கண்டனராதலின் "கருணையின் பெருமை கண்டேன்" என்றார். "மாறிலாதமாக் கருணை வெள்ளமே" (சத91) "கருணைமா கடலே" (பிடித் 2) "கருணைக் கடல்" (பிரார்க் 2) "கருணைக் கடலினர்" (அன்னைப் 2) "கருணை வெள்ளப் பிரான்" (கோத் 16) "கருணைத் தடங்கடல்" (ஏசறவு 9) என்பனவும் இறைவனது கருணையின் பெருமையைப் புலப்படுத்துவனவாகும்.

புவனியிற் சேவடி தீண்டினன்- இந்நிலவுலகில் தனது திருவடியைத் தீண்டச் செய்தனன். புவனியிற் சேவடி தீண்டும்படி இறைவன் எழுந்தருளியமை.

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமை". போற் 75-6.

"பொங்குமலர்ப் பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமும் ஆட்கொண்டு" அம் 1

"சிவனவனி வந்தருளி, எந்தரமு மாட்கொண்டு" அம் 3

"அரையாடு நாகமசைத்த பிரான் அவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிறம்" தென் 6

"அவனி வந்த எங்கள் பிரான்" வார்த் 10

என அடிகள் பிறாண்டும் அருளியவாற்றானுமறியப்படும்.

தன் கருணையின் பெருமையினாற் புவனியிற் சேவடி தீண்ட வந்து தன்னை வந்து ஆட்கொண்டருளினமையினால் தன்னை ஆண்டவன் சிவபெருமானே எனத் தான் தெளிந்தமையைச் "சிவனென யானுந் தேறினன்" என அடிகள் அருளிச் செய்தார்.

"சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்றும்
சிவனவனி வந்தபடி செப்பில் - அவனிதனில்
உப்பெனவே கூர்மை யுருச்செய்யக் கண்டமையால்
அப்படியே கண்டாய் அவன்" (91)

எனத் திருக்களிற்றுப்படியாரில் வருதலுங் காண்க. "சிவனென யானுந் தேறினன் காண்க, அவனெனை யாட்கொண் டருளினன் காண்க" எனச் சிவனெனத் தேறினமை முன்னர்க் கூறப்படினும் அடிகள் தம்மை ஆட்கொண்டருளிய பின்னரே சிவனெனத் தெளிந்தனர் எனக் கொள்க.

குவளைக் கண்ணி என்றது குவளைமலர் போலும் கண்களையுடைய உமையம்மையாரை, "குவளைம்மலர் நயனத்தவளோடும் நெய்யாடியபெருமாள்" (திருஞான 15:1) எனத் தேவாரத்து வருதலுங் காண்க. கூறன்- கூற்றிலுடையவன். "குவளைக் கண்ணிக் கூறன் காண்க; அவளும் தானும் உடனே காண்க" என்பவற்றால் முழு முதற்பொருள் அம்மையும் அப்பனுமாய் நின்ற முறைமைய உணர்த்தினார்.

(தொடரும்...

# பல்லவர் கால ஆலய வழிபாடு

செல்வி செ. ஜடா அவர்கள்

ஆலயம் என்பது ஆன்மாக்கள் லயப் படுகின்ற இடமாக விளங்குகின்றது. நாயன் மார்கள், ஆழ்வார்களின் வழிகாட்டலினால் மனமாற்றம் பெற்ற மன்னர்கள் அழிவடையாத பொருட்களைக் கொண்டு புதிய ஆலயங் களை நிறுவியதோடு அழியும் நிலையிலுள்ள ஆலயங்களையும் புனருத்தாரணம் செய்தனர். இவை புனரமைக்கப்படுவதற்கு நாயன்மார்கள் இவ்வாலயங்களைத் தரிசித்தமையே காரண மாகும். இந்நாய்ன்மார்களில் சம்பந்தர், அப்பர், தலயாத்திரை மேற்கொண்டு ஆலய வழி பாட்டு முறைக்கு வழிகோலினர். ஆலய வழிபாட்டு முறையில் இறைவனைப் புகழ்ந்து பாடுதல் அவனைத் துதித்தல் போன்ற முறைகள் காணப்பட் டிருந்தன.



காலச் சூழ்நிலையால் மக்களால் கைவிடப்பட்ட கோயில்களுக்கு யாத்திரை மேற்கொண்டு அவ்விரு நாயன்மார்களும் அத் திருத்தலங்களை தரிசித்து அங்கு வீற்றிருக் கின்ற சிவபிரானுடைய பெருமைகளை, அருட் திறத்தை எல்லாம் நெஞ்சுருகும்படியாக- அக இருளை அகற்றும் விளக்காக தேவாரத் திருப்பதிகங்களை பாடித் திருத்தலங்களை சுற்றிவந்தனர். இவ் ஆலய வழிபாட்டில் உழ வாரத் திருப்பணியை தலங்கள்தோறும் அப்பர் சுவாமிகள் செய்து வந்தமை முக்கிய மானதொரு அம்சமாகக் காணப்படுகின்றது.

பல்லவர் காலத்தில் வாழ்ந்த மன்னர் கள் ஆலயங்களினை அமைத்தமையினால் ஆலய வழிபாடு சிறந்து விளங்கக் காரணமாக அமைந்திருந்தது. சம்பந்தப் பெருமான் தனது பாடல்களில் இயற்கை வர்ணனை, கவிச் சுவை என்பவற்றினைக் கலந்து பாடலைப் பாடியுள்ளார். இதற்கு "......அஞ்சலென்று அருள்செய்வான் அமருங்கோவில் வலம் வந்து மடவார்கள் நடமாட....." என்ற பாடல் சான்றாக அமைகின்றது. சுந்தரர் இறைவனை முன்னிலைப் படுத்தி விளையாட்டாக புகழ்ந்து பாடுவதற்கு ஏற்ற இடம் ஆலயம் என்பதை உணர்ந்து பல தலங்களைத் தரிசனம் செய்து இறைவழிபாட்டின் சிறப்பினை உலகறியச் செய்தார். மாணிக்கவாசகர் பாண்டியனுடைய அரச சபையில் அமைச்சராக இருந்த வேளை யில் சிவபெருமான் குருவடிவாக வந்து ஆட் கொண்டமையால் அமைச்சுப் பதவியைத் துறந்து இறைவன் தன்னை ஆட்கொள்ள வேண்டும் என்பதை வாழ்க்கையின் நோக்க மாகக் கொண்டு , சிதம்பரம், திருக்கழுக் குன்றம், திருப்பெருந்துறை முதலான பல தலங்களுக்குச் சென்று அவ் இறைவனுடைய சிறப்பினையும் அவனை வழிபடுவதால் ஏற்படு கின்ற ஞானத்தினையும் இவர் மனம் கலங்கிப் பாடிய 'திருவாசகம்' படிப்போரை நெஞ்சுருக்கு வதாக அமைந்த நிலையில் இப்பாடல்கள், ஆலய வழிபாட்டினை மேற்கொள்வதன் வாயிலாக ஆன்மா ஈடேற்றத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும் என வலியுறுத்துகின்றன.

ஆழ்வார்கள் ஆலய வழிபாட்டினூடாக வைணவசமயத்தை வளப்படுத்தினர். இயற்கை யிலே திருமாலைத் தரிசித்து அளவற்ற

அன்பினை உடையவர்களாக ஆழ்வார்கள் விளங் கிய நிலையில் திருமழிசைஆழ்வார் திருக் குடந்தை, திருவரங்கம், திருவெ.்.கா முதலிய தலங்களுக்குச் சென்று திருமாலின் புகழை வைராக்கியத்துடன் பாடித்திரிந்தார். தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கத்தில் வீற்றிருக்கும் பெருமானிடத்தே கொண்ட அன்பின் காரணமாக பூமாலை சாத்துதல் முதலிய செயல்களை செய்துவந்த "இவர் தனது திருப்பள்ளியெழுச்சி ஆகியவற்றில் திருமாலின் ஆலயச் சிறப்பை, ஆலயத்தை வழிபடுவதனால் கிடைக்கும் பேறு என்பவற்றினை எடுத்துக்கூறுகின்றார். திருமங்கை ஆழ்வார் ஆலய வழிபாட்டினையும் அவ் ஆலயத்தில் பணிபுரிவதிலுமே தனது பொருட்களை செலவிட்டார் என்பதை அவரது இனிய பாடல்களில் காணமுடிகின்றது. இவர் இமயம் தொடக்கம் குமரிமுனை வரையான திருமால் கோவில்கள் பலவற்றைக் கண்டு தரிசித்து பாடியதே பெரிய திருமொழியாகும். சேர மன்னரான குலசேகரஆழ்வார் திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியுள்ள இறைவனை இராமனாக பாவனை செய்து ஆலய வழிபாட்டின் பெருமையை உணர்த்தியவராக விளங்குகின்றார். இவர் வேங்கடத்திலே கோயிற்படியாய் இருக்க வேண்டும் என்பதை "நெயடியானை வெங்கடவா நின் கோயிலின் வாசல் அடியாகும்..... படியாய் கிடந்தும் பவள வாய் காண்பேனோ" என பாடுவதன் வாயிலாக ஆலயச்சிறப்பை எடுத்துக் கூறியுள்ளார்.

இக்காலத்தில் சிவனடியாரை சிவனாகவே வழிபடவேண்டும், என்பதை "கடல் சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர் கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்......." என சுந்தரர் போற்றுவதன் வாயிலாக சிவனடியார் வழிபாடு சிறப்புப் பெற்று இருந்ததுடன் கணநாதா சம்பந்தரையும், அப்பூதியடிகள் அப்பரையும், பெருமிழைக்குடும்பர் ஆரூரரையும் வழிபட்டதனூடாக சங்கமத்தார் வழிபாட்டினைக் காணமுடிகின்றது. கண்ணப்பர், சாக்கியர் ஆகியோரின் சரித்திரங்கள் பக்திவழிபாடே சிறந்தது என்பதை எடுத்துக்காட்டிய நிலையில் வாக்கு ஆகிய மந்திரமும் காயத்தினால் ஆகிய கிரியையும் மனத்தின் சிந்தனையோடு சேர்ந்து வழிபாடு நிகழ்த்தப்பட்டமையை சைவ வைணவத்தில் காணமுடிகின்றது.

இக்காலக் கோயில் வழிபாட்டில் உழவாரத் தொண்டு செய்தல், கோயில் கட்டுதல், குளங்கள் அமைத்தல், நைவேத்தியம் வைத்தல், லிங்கத்திற்கு அபிடேகம் செய்தல், கற்பூரதீபம் காட்டுதல், விழாக்களை நடாத்துதல், தரிசனத்தை கண்டு களித்தல், வீபூதி தரித்தல், பூசை செய்தல், பஞ்சாட்சர செபம் செய்தல் போன்ற பல விடயங்கள் வழிபாட்டில் முக்கியத்துவம் பெற்று வருகின்றன.

இக்கால ஆலய வழிபாட்டின் மூலமே கலைகளான சிற்பம், ஓவியம், இசை, நடனம் சிறப்புப் பெற்றிருந்தன, என்பதை அக்கால கோயில்கள் மூலம் அறியமுடிகின்றது. இவ்வாலயங்கள் நடன தருக்க முதலான பல மண்டபங்களைக் கொண்டிருந்ததோடு இவ்வாலயத்தில் சமயம், சாத்திரம், இசை, நடனம் முதலியவை போதிக்கப்படுகின்ற இடமாகவும் விளங்கியது. சம்பந்தர் முதலிய அடியார்கள், ஊர்கள் தோறும் ஆலயவழிபாடு ஆற்றுவதற்கு அக்காலத்தில் சமயத்திருமடங்கள் பெரிதும் பயன்பட்டன. அதனால் பல சைவத் திருமடங்கள் தோற்றம்பெற்றன. ஆலயங்களை மையமாகக் கொண்டு வடமொழி பாடசாலைகள் நிறுவப்பட்டன. சிவன், திருமால் முதலிய கடவுளர்களுக்கு பல நிலங்களையும் தானமாகக் கொடுத்து ஆலய வழிபாட்டின் வளர்ச்சிக்குப் பங்களிப்பாற்றிய இம்மன்னர்கள் சமய சமூக செயற்பாட்டினை ஆலயங்களூடாக மேற்கொண்டனர்.

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

-வாரியார் சுவாமிகள் உரையுடன்-



24. கூர்வேல்விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேனருள் சேரவும் எண்ணுமதோ
சூர்வேரொடு குன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே.

## பதவுரை

சூர்வேரொடு- சூரபன்மன் குலம் முழுவதையும், குன்று தொளைத்த- அவனுக்கு அரண் புரிந்த ஏழு கிரிகளையும் தொளைத்த, நெடும்போர் வேல- நெடிய போர் செய்யவல்ல வேலாயுதத்தை ஏந்தியவரே! புரந்தர பூபதியே- இந்திரனுடைய நகரத்துக்குத் தலைவரே! கூர் வேல் விழி- கூரிய வேல் போன்ற கண்களையுடைய, மங்கையர் கொங்கையிலே- மாதர்களுடைய தனங்களை, சேர்வேன்- சேர விரும்புகின்றவனாகிய சிறியேன், அருள் சேரவும் எண்ணுமதோ- திருவருட்பெற்றியை கூடுமாறு எண்ணும் பேறு பெறுமோ?

## பொழிப்புரை

சூரனையும் அவன் குலத்தையும், அவனுக்கு உதவி புரிந்த மலைகளையும் அழிக்குமாறு செய்த நெடும்போரில் வல்ல வேலாயுதக் கடவுளே! கூரிய கண்களையுடைய பெண்களின் தனத்தில் சேர விரும்பும் அடியேன், உமது திருவருளைச் சேர நினைக்க மாட்டேனோ? (திருவருளைச் சேர அருள் செய்வீர்.)

## விரிவுரை

**கூர்வேல் விழி மங்கையர்:-**

கூரிய வேல் பகைவனைப் பிளந்து அழிப்பதுபோல் பெண்களின் கண்கள், விரும்பும் ஆடவரது உள்ளத்தைப் பிளந்து வதைக்கும்.

**ஆதாரமிலேன்:-**

"…..துறந்தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்க பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை
எந்நாள் வந்திரட்சிப்பையே" -கந்தரலங்காரம் (32)

செவி மெய் கண் வாய் மூக்கு என்ற ஐம்பொறிகளாலும் முறையே கேட்டும், தீண்டியும், கண்டும், உண்டும், மோந்தும், நுகர்ப்பெறும் ஐம்புல நுகர்வுகளும் ஆண்களுக்கு ஒருங்கே மங்கையரிடத்து உளவாதலின், இம்மையில் வலைப்பட்டுப் பலர் தவிக்கிறார்கள்.

கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள. -திருக்குறள்

**கொங்கையிலே சேர்வேன்:-**

முருகன் திருவடி சேர்தல் அருள். அது ஒளி. மாதர் மயல் சேர்தல் இருள். ஒளியும் இருளும் ஒன்றுக்கொன்று நேர்மாறானவை. ஒன்று விட்டால் ஒன்று உண்டாகும். ஆதலால் இருள் நெறியை விட்டு அருள் நெறி சேர்தல் வேண்டும். சேர்வேன்-வினையாலணையும் பெயர்.

**அருள் சேரவும் எண்ணுமதோ:-**

முருகன் திருவருளைச் சேர வேண்டும் என்ற எண்ணம் அதிவேகமாகவும் மிகுந்த தாகத்துடனும் உண்டாகுதல் வேண்டும். "திருவருள் சேர, முருகா! எனக்கு அருள் செய்" என்று அடிகளார் வேண்டுகின்றனர். இப்பாடல்மூலம் அநுபூதியடைய விரும்பும் ஒருவருக்குத் தடையாயுள்ளதை அகற்றி உய்யுமாறு உபதேசிக்கின்றார்.

**சூர்வேரொடு குன்று தொளைத்த நெடும் பேர்வேல்:-**

சூரனை வேருடன் களைந்து எறிந்தார். அவனுக்கு உதவி புரிந்த ஏழுமலைகளையும் அழித்து எறிந்தார்.

சூரபன்மன்- ஆணவமலம். குன்றங்கள்- சஞ்சித வினைகள். ஞானம் வேல்- ஞானம். ஒன்றாலேயே ஆணவத்தையும் சஞ்சித வினைகளையும் அழிக்கலாம் என்பது இதன் குறிப்பு.

**புரந்தர பூபதியே:-**

புரந்தரன்- புரங்களை வென்றவன்- இந்திரன். முருகன் இந்திரனுடைய உலகத்துக்குத் தலைவன். புரந்தரபதி, பூபதி என்றும் பொருள்படும்; விண்ணுலகிற்கும் மண்ணுலகிற்கும் தலைவன் முருகன். ஆயிரத்தெட்டு அண்டங்களை வென்ற சூரனை வென்ற வேலாயுதராகிய நீ இந்த அற்பமான மாதர் மையலைப் போக்க முடியாதோ? முடியும் ஆதலால் முருகா! தையலார் மையலையகற்றி அநுபூதி ஞானத்தை தந்தருள்வீர்.

மாதர்மீது வைத்த அன்பை மடைமாற்றி ஞான வேலன்மீது வைத்துவிட்டால் அநுபூதி கிடைக்கும்.

"தந்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்டு
அத்தில் அங்கொரு கூறுங்கண் வைத்தவருக்கு
அமருல களிக்கு நின் பெருமை" -திருவிசைப்பா

"செம்பவள இதழ் மடவார்திறத் தழுந்தும்
என்துளத்தைத் திருப்பித் தன்சீர்க்
கொழும்புகழின் இனிதழுத்திப் புதுக்கியருள்
தணிகைவரைக் குமரன்" -தணிகைப் புராணம்.

இப்பாடல் அருணகிரியார் தன் பொருட்டுப் பாடியதன்று. அவர்ஆசா நிகளந் துகளாக்கினவர். முருகனருளால் காமக் கடலைக் கடந்தவர்.

கடத்தில் குறத்தி பிரானருளால் கலங்காத சித்தத்
திடத்தில் புணையென யான்கடந்தேன் சித்ர மாதரல்குல்
படத்தில் கழுத்தில் பழுத்தசெவ்வாயில் பணையிலுந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெங்காம சமுத்திரமே
-கந்தரலங்காரம் (29)

**கருத்துரை**

வேலாயுதரே! தையலார் மையலையகற்றித் திருவருளை நாட அருள்செய்.

# பூவரச அருள் வேலோனே புகழ்பாடும் ஆற்றுப் பாலகனே



அறிவாய் விளங்கி ஒளியாயெங்கும் அசைவற்று நின்றமுருகா!
குருவாயாதியின்ப முதலீறிலாத குறைவற்ற தெய்வம் நீயே!
செறிவான நீரினிழல் போலநின்ற பூவரசமரத்துப் புண்ணியனே!
வெறுஞானமான திருமேனி கொண்டென் விழிகாண என்முன்வந்தவனே!

இருள் மூழ்குவிழிகள் மலபரிபாகத்திலிதமின்றி நின்ற வென்னை
குருவாகி மூன்று முனமுய்த்தவற்றினுளதாக நின்ற முருகா!
இருவேறு கன்மமிசைவித்தகற்றி மறையோயாய திருக்கை வேலவனே!
பெருமாயை தீர்த்துத் திருமேனி கொண்டென்னருள் காணும் சண்முகனே

வாதங் கடந்து பலமாயைகன்மவகையு மறுத்து வாவென்றுரைத்த பாலகனே
ஏதங்கடந்து பொருளொன்று மின்றி எழுகின்ற எவ்வுயிர்க்கும் சாதம்பகிர்ந்தவேலா!
போதங் கடந்து துரியந்துறந்து பொருளோசை மீண்டுமுயிர்க்கு அபயமீந்த நிதியே!
வேதங் கடந்த திருமேனி கொண்டயார்யார்க்கும் பாதங் கொடுத்துற்ற பங்கையனே

யோகத்தின் மேன்மையுணரப்படாமை உயர்ஞான யோகிகளெல்லாம்
பாகத்தினொன்று செய்கின்ற பாதபதுமங்க ளெல்லாம் கெடாது அலையும்
யாகத்தினான பயனும் துறக்க வெளியிகளித்தனவெல்லா மருண்டுநீக்கி
போகத்தின் மல்கவிடரின்றி நின்று புகழோடுவருளாட்சி கொள்ளும் சந்நிதிவேலனே

திரு. க. தெய்வேந்திரம்

நம்பிக்கையே ஏழையின் உணவு.

# மானிடப் பிறவி

திருமதி புவனேஸ்வரி வெங்கடேஸ்வரன் அவர்கள்

"மக்கள் யாக்கையிற் பிறத்தலும் அரிதே" என்று ஔவையாரும், மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று சேக்கிழாரும், மானிடம் வென்றதம்மா என்று கம்பரும், வல்லமை தாராயோ இந்த மானிலம் பயனுற வாழ்வதற்கு என பாரதி யாரும் பாடியுள்ளனர். புறத்தூண்டல்கள் மூலம் உணர்வுகளை அறிவது அறிவு எனப் படும். இந்தத் தூண்டுதலால் உயிர்கள் துலங்கி அவற்றிற்கு தக்கபடி வாழ்ந்து மடி கின்றன. ஒன்று முதலாக ஐந்துவரை அமைந்த அறிதிறன்கள் கொண்டவைகள் விலங்குகள் எனப்படும். இவைகள் பொறிகள்மூலம் உணர்வு களை அறிகின்றன. வாழ்வு எப்படிப்பட்டது? அதில் நன்மை தீமை உயர்வு தாழ்வு எப்படி வருகின்றது? வாழ்வைப் பயனுள்ளதாக மாற்ற முடியுமா? என்பதெல்லாம் விலங்கு களுக்குத் தெரியாது. அப்படிப் பார்க்கும் மதிநுட்பம் அவற்றிற்கில்லை. மனிதனுக்கு மட்டும் ஆராய்ந்தறியும் அறிதிறனுண்டு. அதைப் பகுத்தறிவு என்றும் ஆறாவது அறிவு என்றும் கூறலாம். இதற்கு மேலாக அந்த அறிவின் ஆழம், அகலம், முதிர்ச்சி, நிறைவு, பரிமாணம் என்பவற்றால் அவன் பேரறிவை அல்லது பரஅறிவைப் பெறமுடியும். பகுத் தறிவு உலகையும் தன்னையும் ஆராய்ந் தறியும் சக்தியை மனிதனுக்குத் தருகின்றது. தன் குறைகளையும் நிறைகளையும் அறிந்து கொள்ளவும், குறைகளை விலக்கவும் நிறை களை வளர்க்கவும் அது வழிகாட்டுகின்றது. கல்வி கேள்வி அனுபவம் ஆகியவற்றால் விருத்தியடைகிறது.

தன்னுடைய சக்தியை அறிந்து அதை மேலும் மேலும் வளர்த்துக் கொள் பவன் பல சாதனைகளைப் புரிகின்றான். அப்படி வளர்த்துக் கொள்ளாதவர்கள் செத்துப் பிறப்பதற்கே ஆளாகிப் போகின்றார்கள். பிறப்பின் இரகசியங்களை அறிந்து மனத்துக் கண் மாசு இலன் ஆகிநின்று நீதி வழுவா நெறிமுறையில் நின்று அன்பையும், அறத்தை யும் பண்பாகவும் பயனாகவும் கடைப்பிடித்து வாழ்பவன் பேரறிவாளனாகின்றான். பேரறி வாளர்கள் மனிதகுலத்தின் சேவைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கிறார்கள். மகாத்மாக்களாகவும் மாமனிதர்களாகவும், ஞானிகளாகவும், சித்தர்களாகவும் யோகி களாகவும் சீவன் முத்தர்களாகவும் இவர்கள் தோற்றம் பெறுகிறார்கள்.

மனிதப் பிறவி எடுப்பதென்பது இலகு வான காரியமல்ல. இந்த உடம்பு பஞ்சபூதச் சேர்க்கையாலானது. நூற்றுக்கு மேற்பட்ட உலோக, அலோக மூலகங்கள் எமது உடம் பிலே இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஏதோ ஒரு சக்திகொண்டுகூட்டி, உயிர்ப்பை யூட்டி உணர்ச்சிகளைப் பெருக்கி இயக் கத்தை ஏற்படுத்துகின்றது. ஸ்தூல சரீரத் துள்ளே ஒரு சூக்கும சரீரத்தையும் உண் டாக்கி விடுகின்றது. பொருத்தமான அளவு களில் இந்த மூலகங்கள் ஒத்திசைவாக அமைக்கப்பட்டு மனிதனின் ஸ்தூலசரீரம் உருவாக்கப்படும்போது அதனுள்ளே பேரறி வான சூக்கும சரீரமும் அமைந்து அந்த மனிதன் உருவும் திருவும் பொலியும் மகாத் மாவாக உயர்கின்றான்.

கருணையில்லா அழகு பயனற்றது.

இவ்வாறு உலகத்து உயர்ந்த புகழொடு பிறப்பெடுத்தல் என்பது அரிதிலும் அரிது. இப்படிப் பிறப்பெடுப்பவர்கள் இறந்த பின்பும் தமது சூக்கும உடலில் சஞ்சரிக்கின்றார்கள். அவர்களின் அதிர்வலைகள் இந்த உலகை இரட்சிக்கின்றன. உலகின் அறநெறி குன்றி தீயநெறி ஓங்கிப் பரவும் காலத்தில் அவர்கள் மீண்டும் ஒரு தாயின் கருவூரிற்கு (கருப்பை) வந்து கருவாகி உருவாகி நின்று அறநெறியைக் காப்பாற்றுகின்றார்கள். மனிதப்பிறவி எடுப்பது அரிது என்றாலும் அதிலும் மூங்கையும் செவிடும் கூனும் குருடும் பேடும் நீங்கிச் சேர்வது அரிது. அப்படிச் சேர்ந்தாலும் "ஞானமும் கல்வியும் நல்குதலும் தானமும் தவமும் தரித்தலும் அரிது" என்றும் கூன் குருடாகப் பிறந்தவர்களும் தக்கது இன்னது, தகாதது இன்னது என்று அறிந்து நெறியான நெறி தன்னை நிறைவாக வாழ்ந்து புகழ் பெற்ற வரலாறுகளும் உண்டு.

எனவே தன்னைத் தன் நிலையிலிருந்து மென்மேலும் உயர்த்தலும் அன்பு, சேவை, தியாகம், அகிம்சை என்பவற்றைக் கடைப்பிடித்து பிறன் பழிப்பது இல்லாது வாழ்தலும் ஒவ்வொரு மனிதனதும் உன்னதமான பணியாகும். அப்போது தான் மனிதன் மனிதனாகின்றான். பிறர்க்கு நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிடின் தீமையாவது செய்யாதிரு.

# செல்வச்சந்நிதி முருகன் திருப்பள்ளியெழுச்சி

**வல்வை இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள்**



ஆண்டலை கூவின வன்னி புட்ட
மன்பொடு கூவின புள்ளொலி பரந்த
மாண்டகு சங்கமொலித்தன வானின்
மருவிய தாரகை மறைந்தன கடன்மேல்
ஏண்டகு கதிரவன் றோன்றினன் அன்பர்க்
கெளிவரு மறுமுக விறையவ மிகவே
நீண்டிடு மரநிறை வனமுறு வளச்சந்
நிதியரசே பள்ளி யெழுந்தரு ளாயே.

(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 8. பாவன ரமணன்

பகவானின் இனிமை நிரம்பிய குணங்கள், அவரது போதனைகள், மற்றும் போதிக்கும் முறை, இவற்றையெல்லாம் விவரிக்கும்போது குஞ்சு ஸ்வாமி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து விடுவார்.

"பகவானின் சமத்துவ பாவம் நிகரற்றது. எதையும், எவரையும் தனக்கு அன்னியமாகக் கருதாததால், அனைவரும் அவருக்கு சமமே. "பகவானே! நீங்கள் ஜீவன் முக்தர். நாங்களோ, ஞானமற்ற அறிவிலிகள் என்று அடியார் எவரேனும் சொன்னால், அறியாமை எங்கே? யார் அறிவிலி? யார் முக்தன்? என்று கேட்டு பேச்சை நிறுத்திவிடுவார். தன்னையன்றி அன்னியர் யாருமில்லாததால், பகவானுக்கு ஆன்மீக முன்னேற்றத்தில் படித்தரங்களுமில்லை.* நம்முடைய அவலமான ஆன்மீக நிலையை மாத்திரம் பகவான் பார்த்திருந்தாரானால், அவர் நமக்கு ஒரு கணத்தில் சாஷாத்காரத்தை அளித்திருப்பார்".



"ஆன்ம விசாரத்திற்கு பகவான் எவ்வளவு முக்கியத்துவம் அளித்தாரென்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஜீவன் முக்தி அடைய மிக எளிதான வழி ஆன்ம விசாரம். அது எல்லா மார்க்கங்களையும் விட மிகச் சுலபமானது" - ஐயே அதி சுலபம்; ஆன்மவித்தை ஐயே அதி சுலபம்- என்று எழுதியுள்ளார். ஆனால் இதைத்தான் பின்பற்ற வேண்டுமென்று பகவான் வற்புறுத்தியது கிடையாது. ஆத்ம விசாரம்தான் செய்யவேண்டும் என்று அவர் சொல்லியிருந்தால், அடியார்கள் தவறாது பின்பற்றியிருப்பார்கள். யோகி ராமையா அனேக வருடங்கள் பகவானுடன் நெருங்கிப் பழகியவர். அவர் ஹடயோகம் பழகி வந்தார். அதற்காக அவருக்கு ஆச்ரமத்தில் தனியாக மதிய உணவு ஏற்பாடு செய்திருந்ததை பகவான் ஆமோதித்தார். பலாக்கொத்தில் அவருடைய குகைக்கு பகவான் போவார். யோகியும் பகவானுடன் உலாவப் போவார். அவர் விருப்பப்படி எச்சமயம் வேண்டுமானாலும், அவர் பகவானுடன் இருக்க முடியும். அவ்வளவு நெருக்கம்.

*தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதொன் றியற்றுதற்குத் - தன்னையலா
தன்னிய மொன்று மறியா ரவர்நிலைமை
யின்னதென் றுன்ன லெவன்.

ஆயினும் பகவான் அவரைப் பிராணாயமம் அல்லது ஹடயோகத்திற்குப் பதிலாக ஆன்ம விசாரம் செய்யச் சொன்னதேயில்லை.

* * * * *

"முதலியார் பாட்டியின் மகன் தம்பிரான் சுவாமி வீரசைவர். உச்சிவேளைக்குத்தான் தோட்டத்தில் பூப்பறிப்பார். பலாக்கொத்து குளத்தருகில் மலர்களாலே லிங்கம் செய்து, அவற்றாலேயே பூஜையும் செய்வார். பகவான் ஒருமுறை, "பாவம் கடவுள்! பூஜை முடிவதற்கு இவ்வளவு நேரமாவதால், நைவேத்தியத்திற்கு அத்தனை நேரம் காத்திருக்க வேண்டி வருகிறது" என்றார். ஆனால் ஒரு தடவைகூட ஏன் இப்படி காலம் கடத்துகிறாய்? ஆன்ம விசாரம் செய்வதே நல்லது என்று சொன்னதாகச் சரித்திரமேயில்லை. எந்த அடியாரையும் நீ ஆன்ம விசாரம் செய்கிறாயா? எந்த வகையான தியானம் செய்கிறாய்? என்றெல்லாம் கேட்டதேயில்லை. பகவானின் வழி ஒப்பற்றது. அதைப் பின்பற்றுவதும், அல்லாததும் நம் பொறுப்பு. என்ன சமநிலை! இதே "குறுக்கிடாமை" அடியார்கள் வாழ்வின் லௌகீக விஷயங்களிலும் சுபாவமாகவே அனுசரிக்கப்பட்டது. அனேக வருடங்கள் பகவானுக்குத் தொண்டு புரிந்தபின், சில நியாயமான காரணங்களால், நான் ஆச்ரமத்தை விட்டு பலாக்கொத்தில் தங்க விரும்பினேன். இதை பகவானிடம் தெரிவித்ததும், மிக சகஜமாக ஏற்றுக்கொண்டார். ஒரு பாதிப்பும் தெரியவில்லை. அது அலட்சியமில்லை சமநிலை. இருபது வருட இடைவெளிக்குப் பின் தன்னைப் பார்க்க வருபவரை உடனே தெரிந்துகொண்டு, முன்பு நடந்ததை நினைவு கூர்வார்.

"முற்றும் பற்றற்றவராதலால், எதுவும் அவரைப் பாதிப்பதில்லை. நாயனாவிடம் பகவானுக்கு மதிப்பு உண்டு. கடைசியாக, அவர் நிரந்தரமாக அருணாசலத்தை விட்டு நீங்கி, சிர்ஸிக்குப் புறப்பட்டபோதுகூட, "ஏன் போகவேண்டும்? இங்கேயே இருக்கலாமே" என்று பகவான் சொல்லவில்லை. ஆச்ரமத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் உணவருந்தும் போது, "பகவானின் நிழ"லான முருகனார் ஊருக்குள் பிச்சை எடுக்கப் போவார். ஆனாலும் பகவான், "ஆச்ரமத்தில் சாப்பிடலாமே, ஏன் பிச்சை எடுக்கிறாய்" என்று அவரிடம் சொன்னதில்லை.

"தண்டபாணி சுவாமி ஆதியில் ஆச்ரமத்தின் முக்கிய அங்கமாக விளங்கியவர். ஏதோ காரணத்தினால் அவரை ஆச்ரமத்தை விட்டு வெளியேறச் சொன்னபோது, அவர் மறுத்துவிட்டார். ஊருக்குள்ளிருந்த சில முக்கிய பிரமுகர்கள் வந்து, தண்டபாணி சுவாமியை ஆச்ரமத்தை விட்டு அமைதியாக வெளியேறும்படியும், இல்லாவிடில் பின்விளைவுகள் விரும்பத்தகாதவையாக இருக்கும் என்றும் எச்சரித்தார்கள். இவையாவும் பகவான் முன்னிலையிலேயே நிகழ்ந்தன. பகவான் இவை எல்லாவற்றையும் சாட்சி மாத்திரமாகவே பார்த்துக் கொண்டிருந்தார். மறுநாள் தண்டபாணி சுவாமி தம்மிடம் விடைபெற வந்தபோதும் பகவான் சலனமின்றியே இருந்தார். ஆதிநாட்களில் இதே பகவான்தான், "தண்டபாணிக்கு நிறைய ஆகாரம் கொடுங்கள், அவருக்கு அது தேவை" என்று அடிக்கடி சொன்னது: இதுபோல் ஒருமுறை பகவானின் தம்பி நிரஞ்சனானந்த சுவாமியை சிலர் கொலை செய்யப் போவதாக அச்சுறுத்தி, தூக்கிச் சென்றபோதும் பகவான் அதைப்பற்றி எள்ளளவும் கவலைப்படவில்லை. அந்தப் பக்கமாக முகத்தைத் திருப்பக்கூடவில்லை. மாலையில் சின்னசாமி பத்திரமாகத் திரும்பி வந்து தன்முன் அமர்ந்தபோதும், பகவான் அவர் வரவில் விஷேச கவனம் ஏதும் செலுத்தவில்லை. (அன்று அவரைக் காப்பாற்றியது பகவானருள்தான் என்பது வேறு விஷயம்). இதுதான் பரப்பிரமம்!

(தொடரும்...

# இறைவனது எண் குணங்கள்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

## இறைவனது உண்மை:

உலகம் என ஒன்று இருக்கிறது. இங்கே உயிர்கள் தோன்றுகின்றன; வாழ்கின்றன; மறைகின்றன. இவை இயல்பாகவே நடைபெறுகின்றன. உயிர்கள் வாழ்வதற்கேற்ற உடலும் பிறபொருட்களும் இவ்வுலகிலேயே இருக்கின்றன. உலகில் பிறந்த உயிர்கள் வாழ்ந்து மறையும்பொழுது, இங்கே பெற்ற உடலை இங்கே பெற்ற வாழ்வாதாரப் பொருட்களை இங்கேயே விட்டுச் செல்கின்றன.

இவ்வாறு உலகம் தோற்றம் பெறுவதற்கும் இயங்குவதற்கும் ஒரு சக்தி இருக்க வேண்டும். அவ்வாறான சக்தி பெற்றவரே 'கடவுள்' அல்லது இறைவன் என்கிறோம்; சிவன் என்கிறோம்.

"உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளை யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" என்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

## கடவுள் என்பதன் பொருள்:

கட+உள் என்ற பதத்தின் பகுதிவிகுதிகளில் 'கட' என்னும் பகுதி, உலகங்களையும் உயிர்களையும் கடந்து நிற்பவன் என்ற பொருளிலும், 'உள்' என்னும் விகுதி, உயிர்களின் உள்ளிருந்து இயக்குபவன் என்ற பொருளிலும் அமைந்து, தன்நிகரில்லாத உயர்வான 'ஒருவனை' 'கடவுள்' என்ற பதம் குறித்து விளங்குகிறது என்பது சைவசித்தாந்தம் ஆகும்.

கடந்து நிற்றல் கடவுளின் சிறப்பியல்பாகவும், கலந்து உள்நிற்றல் பொது இயல்பாகவும் கொள்ளப்பெறுகின்றமை உணரத்தக்கது.

இற்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த திருமூலரின் திருமந்திரத்தின் மூலம் 'கடவுள்' என்ற பதம் அக்கால வழக்கில் இருந்தமை அறிய முடிகிறது.

ஒழிந்தேன் பிறவி உறவென்னும் பாசம்
கழிந்தேன் கடவுளும் நானுமொன் றானேன்
அழிந்தாங் கினிவரும் ஆக்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக் கண்டேனே (திருமந்திரம்)

இனி, உலகில் தோன்றும் உயிர்களை உணரவைப்பவன் கடவுள்; ஆனால் இந்தக் கடவுளுக்கு உணர்வூட்டுபவனாக மேலொருவன் இல்லை என்றுங் கூறுகின்றது சைவசித்தாந்தம்.

பல்லார் உயிர் உணரும் பான்மையென மேலொருவன்
இல்லாதான் எங்கள் இறை (திருவருட்பயன்)

இவ்வாறு, சைவசித்தாந்தம் கூறும் முடிபையொட்டி எழுந்த நூல்களே திருக்குறள், நான்கு மறைகள், மூவர்தமிழ், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம் என்பன என்கிறார் ஔவையார்.

திறமைசாலி என நினைத்தால் திறமைசாலி ஆகலாம்.

தேவர்குறளும் திருநான் மறைமுடிபும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகம் என்று உணர். (நல்வழி)

இத்தகைய இயல்புடைய கடவுளுக்கு எண்குணங்கள் இருக்கின்றன. என்று சைவாகமங் கூறுகின்றது.

"எட்டு வான்குணத் தீசன்எம் மான்தனை....." என அப்பரும்,

"இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தினானை
இறையவனை, மறையவனை, எண்குணத்தினானை...." எனச் சுந்தரரும் சிவாகமத்துக்கு உடன்பாடாகப் பாடியருளியிருப்பதுங் காணலாம். திருவள்ளுவரும் தமது கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் இறைவனது எண்குணங்களை முதல் எட்டுக் குறள்களில் கூறி ஒன்பதாவது பாடலில் கடவுளை 'எண்குணத்தான்' என்று பாடியிருப்பதும் நோக்கத்தக்கது.

திருவள்ளுவர் கடவுளின் எண்குணங்களை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளாரென்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1. அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் கடவுள்; அவன் தன்வயமாகச் செயற்படுகின்றவன்; அவன் பெயர் ஆதிபகவன். வடமொழி தென்மொழிகளுக்கு 'அ' ஒலி முதலாக ஒலிப்பது போல, ஒலி வடிவிலான தன்வயத்தனான கடவுளை முதலாகக் கொண்டு இவ்வுலகம் இயங்குகிறது என்கிறார்.

2. கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

வால் + அறிவு என்பது தூயஅறிவு எனப் பொருள் தரும். எனவே வாலறிவன் எனக்கூறி, இப்பாடல் மூலம் இறைவன் தூய அறிவினன் ஆக இருக்கிறான் எனக் காட்டுகின்றார் திருவள்ளுவர். இதனால், தூய உணர்வினனான இறைவனை வணங்காதவர்கள், வேறு பல நூல்களையெல்லாம் கற்றிருந்தாலும், நல்லொழுக்க வாழ்வுக்குத் துணையான இறைசக்தி உணர்வு இல்லாவிடின், அக்கல்வி அறிவினால் ஆகக் கூடிய பயன் ஒன்றுமில்லை என்கிறார் தெய்வப்புலவர்.

3. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ் வார்

அன்பால் நினைந்து பக்தி செய்பவரது உள்ளக் கமலத்துள் சென்று சேர்ந்துவிடுகின்ற, மலபந்தமில்லாத தூயஉடம்பை (மாணடியை) உள்ளவனான இறைவனைச் சேர்ந்தவர்கள், இவ்வையத்துள் புகழோடு நீடூழி வாழ்வார் என்கிறார் வள்ளுவப்பெருந்தகை.

காணும் கண்ணுக்குக் காட்டும் உளம் போல
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்
அயரா அன்பின் அரன்கழல் செலுமே (சிவஞானபோதம்)

4. வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இறைவன் விருப்புவெறுப்பு அற்றவன். இறைவனுக்குத் தேவை என ஒன்றும் இல்லை; அவன் வரம்பிலா இன்பம் - பேரின்பம் உடையவனாக இருக்கிறான். அப்படியான இறைவனது திருவடிகளைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் துன்பம் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

5. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இறை+வன் என்றால் எமது அறிவுக்கும் உணர்வுக்கும் அப்பாற்பட்டவன், முற்றும் உணர்ந்தவன் என்று பொருள். அவ்வாறான இறைவனுடைய அர்த்தமுள்ள புகழைப் பாடிப் பக்தி செய்பவர்களுக்கு பிறவிக்கேதுவாகிய இருவினைகளும் வந்து ஒட்டிக்கொள்ளமாட்டா.

6. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ஐம்பொறிகள் வாயிலாக வருகின்ற ஐம்புல நுகர்வுகள் இல்லாதவன் எங்கள் கடவுள். அவன் உலக பாசங்களிலிருந்து நீங்கியவன். அத்தகைய கடவுளிடம் பக்திகொண்டு பொய்யற்ற ஒழுக்க நெறியில் வாழ்கின்றவர் நீடூழி காலம் புகழோடு வாழ்வார் என்கிறார் செந்நாப்போதார்.

7. தனக்குவமை யில்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால்
மனக் கவலை மாற்றல் அரிது.

இறைவன் முடிவில்லாத ஆற்றல் உடையவனாக இருப்பதனால் அவனுக்கு எவ்வகையிலும் யாரையும் உவமை சொல்ல இயலாது என்கிறார் தெய்வப்புலவர். அவ்வாறான கடவுளைப் பற்றிப்பிடித்தால் ஒரு குறையும் இருக்காது, மனக்கவலையும் இருக்காது என்கிறார்.

8. அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

அறக்கடலாக, அறமே வடிவாக, சாந்த சொருபியாக (கருணைக்கடலாக) இருக்கின்றான் எங்கள் இறைவன் என்கிறார் உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர். இவ்வாறு பேரருள் உடையவன் எங்கள் இறைவன். அவ்னது பாதங்களைப் பற்றினால், அவற்றைத் தெப்பமாகக் கொண்டு பிறவியென்ற கடலைக் கடக்கலாம் என்கிறார்.

இவ்வாறு இறைவனது எண்குணங்களையுங் கூறிய செந்நாப்போதார்,

9. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை

என்று ஒன்பதாவது பாடல் மூலம் இறைவனை எண்குணத்தான் என்று பெயர் சூட்டிப்பாடியிருப்பதும் காண்க.

எனவே, ஐம்பொறிகளையும் அடக்கி, உடம்பின் பிரதான அங்கமான தலையால், எண்குணத்தானான இறைவன் தாளை வணங்கி நாம் உய்தி பெற வேண்டும்; அவ்வாறு வணங்காத தலை, தத்தம் செயற்பாட்டை இழந்த ஐம்பொறிகள் போலப் பயனற்ற தலையாகவே இருக்கும் என எம்மை உணரவைக்கின்றார் உலகப்பொதுமறை தந்த தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

தலையே நீ வணங்காய் - தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந்தலைவனைத்
தலையே நீ வணங்காய்! (திருநாவுக்கரசர்)




## நல்ல வண்ணம் வாழவேண்டும்

பல திருத்தலங்களை வழிபட்டு, பின்பு பல அதிசயங்களைப் புரிந்த பின்பு, திருஞானசம்பந்தர் தனது சொந்த ஊரான சீர்காழி தலத்திற்கே வந்தார்.

ஞானசம்பந்தரின் தந்தையான சிவபாத இருதயர் தனது பிள்ளையான ஞானசம்பந்தரை திருமணம் செய்து கொள்ளும்படி வேண்டினார்.

ஞானசம்பந்தர் தயக்கம் காட்டினார். "தாங்கள் வைதீக முறைப்படி சமயத்தைப் போற்றி வளர்த்து அதன் அறக் கருத்துக்களை தாங்கள் கூறியபடியால், வேதம் சொல்வதுபோல் திருமணம் புரிந்து நல்ல வண்ணம் வாழ' வழி காட்டியருள வேண்டும்" என்று வேண்டினார். இவ்வாறு சிவபாத இருதயர் உரைக்க சம்மதித்து திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார் ஞானசம்பந்தர்.



நம்பியாண்டார் நம்பி என்பவர் திருநல்லூர் பெருமணம் என்ற ஊரில் வாழ்ந்து வந்தார். அவரின் மகளை சம்பந்தருக்கு மணம்பேசி முடித்து திருமண விழாவை திருநல்லூர்ப் பெருமணத்தில் செய்விக்க ஏற்பாடுகள் செய்தனர்.

தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை.

சம்பந்தப் பெருமானின் மீதும் சைவ சமயத்தின்மீதும் அன்பு பூண்டவர்கள் விழாவில் கூடியிருந்தனர்.

சீர்காழியில் தோணியப்பரை வணங்கி இறைவன் கொடுத்த முத்துப் பல்லக்கு குடையுடன் நல்லூர் சென்றடைந்தார் ஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் மணமகனாக அலங்கரிக்கப்பட்டு மேடையில் அமர்ந்தார்.

இறைவனின் உடலில் சிலந்தி விழுந்து கொப்புள் புண்ணாகிவிட, அந்தப் புண்ணை தன் வாயினால் ஊதி குணப்படுத்திய கற்புக்கரசியின் கணவனாகத் திகழ்ந்த சாத்த மங்கை திருநீலநக்கர் என்பவர் திருமண மந்திரங்களைக் கூறி சடங்குகளை செவ்வனே செய்தார்.

நம்பியாண்டார் நம்பி மகளுக்கும் ஞானசம்பந்தருக்கும் நல்ல முறையிலே திருமணம் நடைபெற்றது.

அக்னியை எம்பெருமான் சிவனாக நினைத்து சம்பந்தர் தனது மனைவியுடன் வலம் வந்தார்.

மண்ணில் நான் வந்து வாழ்ந்த நோக்கம் நிறைவு பெற்றது. வேதத்தின்படி இந்தப் பெண்ணை மணந்து வைதீக நெறியைக் கடைப்பிடித்தும் உள்ளேன்.

எனவே, உனது திருவருளால் இவ்விடம் உள்ள அனைவரும் பிறவித்துன்பங்கள் நீங்கி "நல்ல வண்ணம் நிலைத்து வாழவேண்டும்" என்று எண்ணித் துதித்தார்.

சிவபெருமான் ஒளிவடிவாகத் தோன்றி "அனைவரும் எமது பேரின்ப வீட்டிற்குள் புகுக" என்று கூறி திருமண விழாவிற்கு வந்த அனைவருக்கும் பிறவியை நீக்கி மோட்ச வாழ்வு அளித்தார்.

திருஞானசம்பந்தர், சிவபாத இருதயர், நம்பியாண்டார் நம்பி மற்றும் திருமணத்திற்கு வாழ்த்த வந்தவர்கள், பணிபுரிய வந்தவர்கள், சேவை செய்ய வந்த கூலியாட்கள் அனைவரும் கடவுளிடம் ஒன்றாய்க் கலந்து நல்ல வண்ணம் வாழ்கின்றனர்.

## பங்குனி, சித்திரைமாத குருபூஜை தினங்கள்

| | | |
|---|---|---|
| மார்ச் 20 | பங் 07 புதன் | நல்லைக்குருமணி சுவாமிநாதத்தம்பிரான் குருபூஜை<br>தவத்திரு முருகேசு சுவாமிகள் குருபூஜை |
| மார்ச் 23 | பங் 10 சனி | யோகர் சுவாமிகள் குருபூஜை |
| மார்ச் 29 | பங் 16 வெள்ளி | காரைக்கால் அம்மையார் குருபூஜை |
| ஏப்ரல் 07 | பங் 25 ஞாயிறு | பரமகுரு சுவாமிகள் குருபூஜை |
| ஏப்ரல் 09 | பங் 27 செவ்வாய் | குழந்தைவேற் சுவாமிகள் குருபூஜை |
| ஏப்ரல் 11 | பங் 29 வியாழன் | செல்லப்பா சுவாமிகள் குருபூஜை |

அறிவுரை நல்லதானால் யார் சொன்னாலும் கேள்.

# படங்கள் தரும் பதிவுகள்



தைமாத ஞானச்சுடர் வெளியீட்டின்போது, (மேலே) ஆசிஉரை வழங்கலும், (கீழே) சிறப்புப்பிரதி பெறுதலும்.



அன்புள்ள இதயம் என்றும் இளமையானது.



தைமாத சிறப்புப் பிரதிகள் பெற்றுக்கொண்டோரில் ஒரு பகுதியினர்.



நல்லதைச் செய்தால் நல்லதையே பெறலாம்.

# சிந்திப்போம் செயற்படுவோம்

திரு ஆ. இராசரெத்தினம் அவர்கள்

அறிவியல் வேகமாக வளர்ந்து வரும் இந்நாளில், எமது வாழ்க்கை வளம் பற்றி ஆழமாகச் சிந்திப்போம்.

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"

என்பது சங்கப் பாடலில் இடம்பெற்றுள்ள பொருள் பொதிந்த வரிகளாகும். இவ்வரிகளைப் படிக்கும் பொழுது எமது தந்தை தாயாரையும் நினைத்துப் பார்க்க மனம் தூண்டுகிறது. பெற்றோர் தாம் பெற்ற குழந்தைச் செல்வத்தைக் காணும் பொழுது, அதன் எதிர்காலம் நல்ல முறையில் அமைய வேண்டும் என்று ஆசைப்படுவது இயற்கை.

குழந்தை ஒன்றுக்குத் தந்தை, தாய், குரு, தெய்வம் ஆகிய நால்வரும் வணக்கத்துக்குரிய தெய்வங்கள் என்பது தமிழர் பண்பாட்டில் ஊறிவந்த நம்பிக்கையாகும்.

தாயானவர் தனது குழந்தைக்கு அதன் தகப்பனைக் காட்டி "இவர் தான் உனது தந்தை" என்று முதலில் அறிமுகம் செய்து வைக்கிறார். தனது குழந்தையைக் கண்டதும் தந்தைக்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. அதன் எதிர்காலத்தை எண்ணி அவரது உள்ளம் கற்பனைக் கோட்டை கட்டிவிடுகின்றது.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என முன்னோர்கள் மொழிந்தது முழுதும் உண்மை.

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்"

என்பது செந்நாப்புலவர் வாக்கு. இளமையில் நல்ல கல்வியைப் பெறுவதால் அடக்கமும், அறிவும் சிறுவயதிலேயே உள்ளத்தில் குடிகொள்ளுதல் இலகுவாகும்.

"நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமும்
அல்லாது வேறுநெறியுளதோ......."

என்று தன்னெஞ்சைக் கேட்கின்றார் ஒரு மெய்யடியார்.

ஒருவர் நல்லொழுக்கம் உள்ளவராக வளர்வதைக் கண்டு அவரது உறவினரும் அயலாரும் அவரது நடத்தையைப் பாராட்டுவதைக் கேட்கும் பொழுது, அவரைப் பெற்ற தாயின் உள்ளம் களிப்படைகின்றது. தான் பெற்ற பிள்ளையைச் சான்றோனாகப் பிறர் பாராட்டுவதைக் கேட்கும் தாய், அவனைப் பெற்ற காலத்தில் அவள் அடைந்த களிப்பிலும் பன்மடங்கு உவகை அடைவாள்.

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"

என்பது வள்ளுவர் வாய்மொழி.

நற்குடியில் நன்மகனாகப் பிறந்த பிள்ளையைச் சிறுவயதிலேயே நல்லாசிரியரிடம் ஒப்படைத்து, நல்ல கல்வியைப் பெறச் செய்வது தந்தையின் தலையாய பணியாகும்.

காற்றோடு வருவது நீரோடு போகும்.

நல்லோர் கூட்டத்திற் சேர்ந்து நடப்பதால் அவர்களின் நல்ல பழக்கம் அவர்களோடு இணங்கி நடப்பவர்களையும் பற்றிக் கொள்வது இயற்கை.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொற்கேட்பதுவும் நன்று"

என்பது ஔவையின் அறவுரை. இந்நல்லுரையை எக்காலத்திலும் ஒருவர் மறக்கக் கூடாது.

இதற்கு மாறாக நல்லோரின் உறவைக் காற்றில் பறக்க விட்டு, தீயோரின் உறவில் சிக்குண்டு, அவர்களது நட்பினால் மனம் தளர்ந்து தன்னை மாற்றிக் கொண்ட ஒருவரின் வாழ்க்கை சிதைவுற்ற தன்மையைப் பார்ப்போம்.

பண்ணையார் ஒருவரின் மகன் நாள்தோறும் தனது நண்பர்களுடன் சேர்ந்து சீட்டாடுவதே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தான். குறிக்கோளின்றி அருமந்த பொழுதை அவமே கழித்துவிட்டு, நண்பகல் உணவுக்கு வீடுநோக்கி வருவான். வயிற்றுப் பசி பொறுக்க முடியாது தனது மனைவியிடம் ஏதாவது உணவு தருமாறு கேட்பான். அவள் பாவம்! என் செய்வாள். கணவனின் பொறுப்பற்ற பழக்கத்தை நாள்தோறும் கவனித்து, முதல் நாள் உணவில் ஒரு பகுதியை மீதியாக வைத்திருந்தாள்.

"பழையது இருக்கிறது. உள்ளே வாருங்கள்; தருகிறேன்" என்றாள்.

"நல்லது; வயிறு பசிக்கிறது" என்று சொல்லிக் கொண்டு நாணமின்றி அவள் முன்னே இருந்தான். கணவன் இருந்ததும், முதல் நாள் எடுத்து வைத்த பழைய உணவை மெல்ல எடுத்து, தனது கையால் பிசைந்து இரண்டு கவளம் அவனது கையில் கொடுத்தாள்.

அதனை வாங்கி உண்ட கணவன் மனம் மகிழ்ந்து மனைவியைப் பார்த்து, "நீ உணவு தரும் பொழுது 'பழையது' என்று சொல்லிவிட்டு, இடையிடையே சுடு உணவும் தருகிறாயே அதன் உண்மை என்ன?" என்று கேட்டான்.

அதற்கு:-

"உங்கள் மூதாதையர் தேடி வைத்த சொத்தை அனுபவிக்கும் பொழுது, அந்த முன்னோரின் தேட்டத்தைப் 'பழையது' என்றேன்.

ஆனால் நீங்கள் சுயதொழில் செய்து கிடைக்கின்ற ஊதியத்தைக் கொண்டு செய்வது 'புதியது' என்று சொல்லியே தருவது வழக்கம்" எனக் கூறிக் கணவனின் ஐயத்தை நீக்கினாள்.

மனைவியின் அறிவுச் சுடர் கணவனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தது. அதன்பின், அவன் சுயமுயற்சி செய்து கிடைக்கின்ற வருமானத்தை மனைவியிடம் கொடுத்து செல்விருந்து ஓம்பி, வருவிருந்து காத்திருக்கும் ஓர் இல்லமாக அவனது குடும்பம் மாறியது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு"

எனத் திருக்குறள் செப்புகின்றது.

மேற்குறிப்பிட்டவை யாவும் உலகியல் வாழ்வில் பேரும் புகழும் பெற்று வாழ்வதைப் படமாகக் காட்டுகின்றன.

**வருந்துவதைவிட உறுதிகொள்வது நல்லது.**

இந்நிலையில் ஏன் பிறந்தோம், என்ன செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து, கிடைத்தற்கரிய மானிடப்பிறவியில் நற்கருமங்களை ஆற்றி, நமக்கும் நமது நாட்டுக்கும் நல்லன செய்ய வேண்டும் என்பதை மறந்துவிடலாகாது. எந் நிலையிலும் நற்பணிகள் செய்வது நமது கடமை என்பதை நினைவிற் கொண்டு நடக்க வேண்டும்.

"நமக்கு இந்த சரீரம் கிடைத்தது கடவுளை வணங்கி முத்தி இன்பம் பெறுதற் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமான் நவின்ற வாக்காகும்.

எனவே,எம்மால் இயன்ற நற்பணிகளை ஆற்றி இறைவனை அடைதற்கான முயற்சிகளைச் செய்தல் இன்றியமையாத கடமையாகும். ஒருவன் முற்பிறவியில் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்பவே இப்பிறவியை எடுக்கிறான்.

"விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழல் என்றருள்வாய்"

என்று அருணகிரி நற்கதி நாடிக் கேட்பது நினைத்துப் பார்க்க வேண்டியது.

ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு
அன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை
பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிண நெஞ்சே
தேடுகின்றிலை தெருவு தோறறலறிலை
செய்வதொன்றறியேனே.

என்று மாணிக்கவாசகர் வாய்விட்டுப் புலம்புவது எண்ணித் திருந்த வேண்டிய நல்லுரையாகும்.

## கிட்ட வந்தால் கீர்த்தி

மூர்த்தி தலம் தீர்த்தம் – யாவும்
முறையாக அமைந்த ஆலயம்,
நேர்த்தி யாரும் வைத்தால் – அது
நிறைவாக வெல்ல வைக்கும்,
கீர்த்தி யாவும் கிடைக்கும் – நீ
கிட்ட வந்தால் தெரியும்,
பூர்த்திதரு பேறு உனக்கு – தம்பி
பொழுதெல்லாம் முருக வாழ்வுனக்கு

-கே.எஸ்.எஸ். ராஜா-

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | | |
|---|---|---|---|
| அமரர் ந. தங்கராசா நினைவாக (சட்டத்தரணி) | புலோலிதெற்கு | பருத்தித்துறை | 5000. 00 |
| சி. குகதாசன் குடும்பம் 'செல்வமதி' | ஆவரங்கால் | புத்தூர் | 2000. 00 |
| திரு தேவதாசன் | | வலிகாமம் | 200. 00 |
| சிவசண்முகநாதன் லிங்கேஸ்வரி | சுதுமலைவடக்கு | மானிப்பாய் | 1மூடைஅரிசி |
| மு. விநாயகமூர்த்தி | நீலியம்பனை | மல்லாகம் | 2மூடைஅரிசி |
| முத்துத்தம்பி செல்வராசா | பொன்சேகா றோட் | கொழும்பு-5 | 10000. 00 |
| M. இந்துசேகரம் | | அவுஸ்திரேலியா | 82000. 00 |
| செ. சிவசுப்பிரமணியம் | | மல்லாகம் | 5000. 00 |
| T. துவாகரன் | உடுவில்றோட் | மானிப்பாய் | 1000. 00 |
| திலீபன் ஹபிநயன் | கரந்தன் | நீர்வேலி மேற்கு | 1000. 00 |
| J. சந்திரப்பிரகாஸ் | | பருத்தித்துறை | 2000. 00 |
| S. சிவலோகலிங்கம் | | திருகோணமலை | 5000. 00 |
| Dr.M. ஸ்ரீஸ்கந்தராசா | | புவக்பிட்டியா | 1000. 00 |
| க. கமலாம்பிகை | ஆதவன் ஸ்ரூடியோ | பருத்தித்துறை | 1000. 00 |
| க. தெய்வேந்திரம் J.P. | | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| இ. தர்சிகா | | சிறுப்பிட்டி | 3000. 00 |
| வ. மிகிலன் | | பருத்தித்துறை | 2000. 00 |
| கா. புஸ்பராணி | | சுன்னாகம் | 1000. 00 |
| செ. நவரத்தினசாமி | | | 1000. 00 |
| ஸ்ரீகரன் அபிலஷா | | யாழ்ப்பாணம் (பிரான்ஸ்) | 5000. 00 |
| ப. யோகேந்திரன் | புலோலிமேற்கு | பருத்தித்துறை | 5000. 00 |
| பு. சிவசக்திகுடும்பம் | கட்டுடை | மானிப்பாய் | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | | மயிலிட்டி | 3000. 00 |
| ஏ. இராஜநாதன் | | அச்சுவேலி | 5000. 00 |
| மு. விநாயகமூர்த்தி | நீலியம்பனை | மல்லாகம் 2மூடைஅரிசி | 2000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர்மூலம் திரு.திருமதி ரூபவதி தங்கராசா | | கனடா | 12000. 00 |
| திருமதி இரத்தினம்மா ஐயாத்துரை | | கனடா | 10000. 00 |
| புஸ்பகாந்தராசா பிரசன்ஹ | | பிரான்ஸ் | 2000. 00 |
| கருணானந்தன் ஜதுஷன் | | பிரான்ஸ் | 2000. 00 |
| விஜயகுமரகுரு குடும்பம் | | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| கந்தையா நவரட்ணராஜா நினைவு | | நவிண்டில் | 40 பவுண்ஸ் |
| P. மணிவண்ணன் | | உடுப்பிட்டி | 15000. 00 |

நேருக்கு நேர் பேசினால் உண்மை வெளியாகும்.

| | | | |
|---|---|---|---|
| அச்சுதன் குடும்பம் | | கொழும்பு | 3000. 00 |
| K. இரங்கநாதன் | | இணுவில் மேற்கு | 5000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் நினைவாக | | பத்தமேனி | 1000. 00 |
| S. வசந்தகுமார் | | உரும்பிராய் | 1மூடை அரிசி 15kg கிழங்கு |
| ஜேவர்த்தனா கலாவதி குடும்பம் | | பிரான்ஸ் | 10000. 00 |
| சற்குணராஜா கலைச்செல்வி | | நோர்வே | 4000. 00 |
| நீரஜா சத்தியசீலன் | | கன்னாதிட்டி (ம.வங்கி) | 5000. 00 |
| வே. முருகேசுசுவாமி சார்பில் | | பரந்தன் | 7000. 00 |
| க. கந்தசாமி | | மந்துவில் | 7000. 00 |
| சிவஞானம் நீதிராசா | | கொழும்புத்துறை | 5000. 00 |
| ஸ்ரீனிவாசன் சுரேஸ்குமார் | | கொழும்புத்துறை | 5000. 00 |
| பா. மயூரன் | | பருத்தித்துறை | 2000. 00 |
| திரு ஜெகதீசன் | | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| க.சின்னத்துரை | | நவிண்டில் | 5000. 00 |
| S. சம்பந்தநாதன் | | லண்டன் | 5000. 00 |
| இ. வீரசிங்கக்குருக்கள் | | கெருடாவில் | 2000. 00 |
| இராசையா ரட்னேஸ்வரி (ஆதவன்) | (அச்சுவேலி) | பிரான்ஸ் 1மூடை அரிசி | 1000. 00 |
| இராம ஜெயபாலன் | | சங்கானை | 1000. 00 |
| செ. சின்னத்துரை | மகாத்மா வீதி | நெல்லியடி | 1000. 00 |
| சி. ஜெயரட்ணம் | | துன்னாலை | 3000. 00 |
| K.N. செல்வரெட்ணம் | நவாலி | மானிப்பாய் | 6000. 00 |
| திருமதி சிவச்செல்வன் | | லண்டன் | 5000. 00 |
| T. தங்கராசா | பத்தமேனி | அச்சுவேலி | 5000. 00 |
| சி. மாணிக்கவாசகர்மூலம் | சுசீந்திரன் சுரேக்கா | கனடா | 100000. 00 |
| இ. சிவரூபன் பாமினி | | வியாபாரிமூலை | 5000. 00 |
| ஐயம்பிள்ளை சின்னத்துரை நினைவு | | புத்தூர் | 5000. 00 |
| மகாலிங்கம் பிரசாத் | | ஊரெழு | 5000. 00 |
| திரு சண்முகநாதன் | | மயிலிட்டி | 2000. 00 |
| திரு கெங்கைக்கரசு | | மயிலிட்டி | 3000. 00 |
| விஜயகுமார் கிரிதரன் | அரசடி வீதி | பருத்தித்துறை | 3000. 00 |
| ராஜ் தினேஷ் | | கனடா | 5000. 00 |
| திரு வசந்தன் | | கரவெட்டி | 5000. 00 |
| த. சரவணபவான் | தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| திருச்சிற்றம்பலம் சுந்தரமூர்த்தி நினைவு | யாமாவளவு | தெல்லிப்பளை | 2000. 00 |
| வேலும்மயிலும் அரிசியாலை | | பரந்தன் 2மூடை அரிசி | 10000. 00 |
| திரு நாகராசா பிரதி அதிபர் | | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| S. செல்வக்குமரன் | | இணுவில் | 1000. 00 |

(தொடரும்...

# நடை உடையில் சைவம்

இரா செல்வவழிவேல் அவர்கள்

சமைக்கப்பட்டது சைவம்; அதாவது நெறிப்படுத்தப்பட்டது என்றே சொல்லலாம். சமயக் கொள்கைகளும் - பழக்கவழக்கங் களும் அக்காலத்திலேயே பெரியோர்களால் நெறிப்படுத்தப்பட்டன சமைக்கப்பட்டன என் பதை இச்சொல் உணர்த்துகிறது.

சில சமயங்கள் எக்காலத்திலும் மாறாத தன்மையுடையனவாக இருக்கலாம். ஆனால் பல சமயங்கள் காலத்திற்கேற்றவாறு சிற்சில நெறி முறைகளில் மாற்றங்களை அமைத்துக் கொள்ளுதல் இயல்பு. அத் தகைய இயல்புகளை இந்து சமயத்தில் காணலாம். சைவமும் இத்துறையில் விரிந்த சிந்தையும், பரந்த நோக்கமும் உடையது. சிவனுக்குப் பிள்ளைக் கறியைப் படைத்த வரும் நாயனார்; சிவலிங்கத்தின் மீது செருப் புக் காலை வைத்தவரும் நாயனார். சிவன் மீது கல்லெறிந்தவரும் நாயனார் என்றால் சைவத்தின் பரந்த நோக்கத்தை அறிவுடை யோர் அறிதல் கூடும்.

நாயன்மார் ஒவ்வொருவரும் ஒவ் வொரு நடையிலோ - போக்கிலோ தம் வாழ்க் கையை நடத்தினவர் என்பதைப் பெரிய புராணம் புலப்படுத்துகிறது. உருத்திர மந் திரம் செபித்தார் ஒருவர். விலங்கின் இறைச் சியை இறைவனுக்குப் படைத்தார் இன் னொருவர். ஈசனடியாரை இன்முகங் காட்டி உண்பித்து உபசரித்தவர் ஒரு தொண்டர். புறச் சமயவாதிகளுடன் வாதிட்டுச் சைவ சமயத்தை நிலை நாட்டியவர் சிலர். அடி யார்க்கு ஆடை நெய்வதும், வெளுப்பதும் சிலருடைய பணியாயிற்று. அடியார் விருப் பத்திற்கிணங்க மனைவியையும் ஈயத் துணிந் தார் மற்றொருவர். சிவநெறியை இழித்துப் பேசியவரின் நாவறுத்தார் ஓர் அன்பர். சூதாடி வென்ற பணத்தில் சிவனடியார்களுக்கு உணவு கொடுத்தார் ஒருவர். கோவில் தோறும் உழவாரப் பணிசெய்த உத்தமன் ஒருவர். அப்பர், சம்பந்தர், சுந்தரர் இவர் களையே போற்றி வாழ்ந்த அடியவர் சிலர். புறச் சமயத்திலிருந்த கணவனைத் திருத்தி ஆட்கொண்ட மங்கை நல்லாள் ஒருவர்.

இங்ஙனம் அறுபத்து மூன்று நாயன் மாரும் பல போக்கில் சென்றவர்களாக காணப் படுகின்றனர். இனி நமது நெறி எவ்வாறு அமைய வேண்டும் என்பதைக் காண்போம்.

உண்மைச் சைவர்கள் உள்ளத்தில் அன்பு நிலை பெற்றுள்ளது. இந்த அன்பு அவர்களது வாழ்க்கையிலும் - பல திறப்பட்ட நடைமுறைகளிலும் காணத்தக்க வகையில் தெளிவாக விளங்கும்.

அன்பு நடை ஏழைகளின்மீது இரக்கம் கொள்ளச் செய்யும்; கொடியவர்களை நல் வழிப்படுத்தும்; தீயகணவனை நன்னெறியில் செலுத்தும்; முரட்டுப்பிள்ளைகளை நன்மக்க ளாக்கும்; பாம்பாகச் சீறும் கணவனை 'மகுடி' வாசித்து மயக்கும் - நெறிப்படுத்தும் என்றால், அன்பினால் ஆகாத செயலும் உண்டோ? அன்பே சிவம் அல்லவா? அன்புநெறி அல்லது சிவநெறி தான் அன்பு நடை அல்லது சிவ நடை. இச்சிவநடை நம் எல்லோரிடம் நிலை பெற்று வளர்தல் வேண்டும். இந்நிலை நம் மிடையே வளர்க்கப்பட வேண்டும்.

மனைவியே குடும்பத்தின் தலைவி. இச்சொல்லிற்கு நேரான ஆண்பாற் சொல் இல்லை. இவ்வாறு கணவன் என்ற சொல்லுக் கும் நேரான பெண்பாற் சொல் இல்லை. அரசி-அரசன் என்றாற்போல், ஏன் இச் சொற்களுக்கு

மாற்றுச் சொற்கள் இல்லையென்பது ஆராய்ச்சிக்குரியது. கணவன், மனைவி ஆகிய இருவரும் "ஓர் ஆவிற்கு இருகோடு பூத்தாற் போல" இணைந்து வாழத்தக்கவர்கள். ஆயினும் குடும்ப ஆட்சியில் ஒருபகுதி கணவனுக்குரியது. அதில் மனைவி தலையிட இயலாது. இவ்வாறே குடும்ப ஆட்சியில் மற்றொரு பகுதி மனைவிக்கே உரியது. அதில் கணவனுக்கு உரிமையில்லை. அதாவது. கணவன் குடும்பம் நடாத்துவதற்குரிய பொருளீட்டி வரும் பெரும் பணியில் ஈடுபட்டவன். அப்பொருளைக் கொண்டு குடும்பத்தை நடத்தும் பொறுப்பு வாய்ந்தவள் மனைவி. இவ்வுண்மையை உணர்த்தவே அறிவு சான்ற நம்முன்னோர், கணவன் எனும் சொல்லிற்கு நேரான பெண்பாற் சொல்லை உண்டாக்கவில்லை. மனைவி என்னும் சொல்லுக்கு நேரான ஆண்பாற் சொல்லையும் படைக்கவில்லை. இறைவன் படைப்பில் ஆண் பிறப்புத் தனி, பெண் பிறப்புத் தனி. இருவரும் இரு வேறுபட்ட செயல்களைச் செய்து முடிக்கவே கடமைப்பட்டவர்கள். இருவரும் கருத்தொருமித்துச் சமநிலையில் நின்று செயலாற்றினால் தான் இல்லறம் நல்லறமாக நடைபெறும். "பெண் உரிமை" என்பது இவ்வியற்கையை அனுசரித்தே அமையமுடியும். இதற்கு மாறாக கூறப்படும் கருத்துக்கள் ஏற்கக் கூடியதல்ல. தவறான கருத்துக்களை வாய்க்கு வந்தபடி கூறுவதை பெண்நிலை வாதிகள் மறுபரிசீலனை செய்து கொள்ளவேண்டும். ஆணுக்குப் பெண் அடிமை இல்லை எனும் கருத்து விரிந்த பொருளுடையது. இந்த உண்மையை உள்ளவாறு கண்டவன் சைவன் என்றே சொல்லலாம். ஏனெனில் சைவன் தனது கடவுளை அப்பனாக மட்டும் வழிபடவில்லை. அம்மையும் அப்பனுமாக- சமமாக இணைந்து இருக்கின்ற நிலையைத் தன் உள்ளத்தால் உருவகம் பண்ணி - "மாதொரு பாகன்" என்று பெயர் சூட்டி வணங்கத் தொடங்கினான். இத்திருவுருவம் ஒன்றே போதும் சிவநெறியின் உயர்ந்த தத்துவத்தை விளக்குவதற்கு எண்ணலாம். இந்த உண்மையை- சைவப் பெண்மணிகள் உள்ளத்தில் இருத்துதல் வேண்டும். இருத்தி அதற்கு ஏற்றவாறு நடையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

கணவனோடு ஒருயிரும் ஈருடலுமாக இயங்கும் நடையே சைவம் ஏற்ற நடை. கருத்தொருமித்த குடும்ப வாழ்வே சைவ வாழ்வு. உண்மை பேசுதல் - உடம்பை பாதுகாத்தல் -தீயன அகற்றல் - நல்லனவே நினைத்தல்- இன்பத்திலும், துன்பத்திலும் இறைவனை எண்ணுதல்- எங்கும் எப்பொழுதும் அன்பு ஒன்றையே மனதில் கொள்ளல்- ஆகிய இவை குடும்ப நடைக்கு இன்றியமையாதவை.

காலத்திற்குக் காலம் குடும்பப்போக்கு மாறாதா? எனும் வினா நியாயமானது. மாற்றம் தவிர்க்க முடியாதது தான். பழைய மனிதன் நிர்வாணமாகத்தான் இருந்தான். பின்னர் இலைகளாலான ஆடையை அணிந்தான். அறிவும் ஆராய்ச்சியும் பெருகப்பெருக பஞ்சின் பயனைக் கண்டறிந்தான். பஞ்சினைக் கொண்டு நூல் நூற்று ஆடை நெய்து அணிந்து கொண்டான். பின்பு பட்டு நூலாலும், விலங்கு மயிராலும் ஆடைகள் நெய்து பயன்படுத்தினான். பிறகு மர நார்களைக் கொண்டு - விஞ்ஞானப் பொருட்களைக் கொண்டு - பல்வேறு கலவைகளைக் கொண்டு (நைலோன், ஷிபான், ஜார்ஜட் முதலிய) மெல்லிய ஆடை வகைகள் கண்டறியப்பட்டன. உடை என்பது உடலை மறைக்க மட்டுமல்லாது, அழகுபடுத்துவதற்காகவும் அமைவதால் இவ்வாடைகள் அணிவதில் தவறு இல்லை. ஆனால் உடலை மறைக்காத ஆடைகள் அணிவதை நாகரீக மாற்றம் எனக் கூறுவது ஏற்றுக் கொள்வதற்கு இல்லை.

உடல் உறுப்புகளை வெளிக்காட்டக் கூடிய அரைகுறை ஆடைகள் பாலியல் உணர்வுகளைத் தூண்டி, இதனால் ஏற்படும்

பிரச்சினைகள் தினமும் செய்தியாக வருகின்றன. எனவே உடை மாற்றப் போக்கு கவனத்தில் எடுக்கப்பட்டு நமது பண்பாடு சீரழியக் காரணமாகும் உடை மாற்றத்தை நிராகரிக்க வேண்டும். அவரவர் விருப்பப்படி-வயதிற்கும்- வசதிக்கும் ஏற்றபடி உடை அணிவது என்பதில் ஒரு நெறி இருத்தல் இன்றியமையாதது. இந்த உறுதிப்பாடு பெண்களின் உள்ளத்தில் இருக்குமாயின், உடையால் எவரும் குறை கூற இடமிராது என்பது திண்ணம். மக்கள் வாழப் பிறந்தவர்கள். நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பேறு பெற வேண்டியவர்கள். இதனை மனதில் கொண்டு, வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அன்பு நெறியாகிய சிவநெறியை நமது செயலால் தோற்றுவிக்க கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மறந்து விடலாகாது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்னும் திருவள்ளுவர் திருவாக்கு நம் உள்ளத்திலே நிலை பெற்று, நம்மை நல்வழிப்படுத்தி அன்புக் கடலில் ஆழ்த்துவதாக.

# துளசி தீர்த்தம் நன்மையளிக்கின்றதா?



கோயிலில் சென்று தரிசனம் நடத்தி தீர்த்தம் வாங்கி அருந்தும் வழக்கம் இன்றும் பக்தர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். தீர்த்தம் மிகச் சிறப்பும் மேன்மையும் உள்ளதாக உணர்ந்ததனால் அதைப் புண்ணிய ஜலம் என்று பெயரிட்டு அருந்துகின்றனர்.

இதன் புனிதத் தன்மையையும் தூய்மையையும் நம்பாதவர்கள் இதன் பயன்களை அங்கீகரிப்பதில்லை.

இந்து மதத்தவர்கள் வீடுகளில் இறை சமமாகக் கருதியே துளசிச் செடியை நட்டிருந்தும், துளசிமாடம் கட்டி விளக்கேற்றிப் பராமரித்திருந்தும் கோயிலில் கிடைக்கும் துளசி தீர்த்தம் மருத்துவ குணங்கள் உண்டென்று நாம் கண்டறிந்துள்ளோம்.

துளசி தீர்த்தத்திற்காக கோயிலுக்குச் செல்ல வேண்டியதில்லை. வீட்டிலேயே துளசி தீர்த்தம் தயார் செய்யலாம்.

க்லஸ்டர்ட் வாட்டர் என்ற பெயரில் மேல்நாட்டவர்கள் கண்டு பிடித்திருக்கும் பரிசுத்த நீருக்கு நிகராக நிற்பதே துளசி தீர்த்தம். நீர் அசுத்தமாகுதல் குறித்து ஆராய்ச்சி செய்த அமெரிக்க விஞ்ஞானிகளே க்லஸ்டர்ட் வாட்டர் கண்டு பிடித்தனர். நவீன முறைகளில் சுத்திகரிக்கப்பட்ட இந்த நீரில் இரண்டு துளிகள் ஒரு டம்ளர் சாதாரண நீரில் சேர்த்து குடிக்கின்றனர்.

ஆனால் விக்கிரகத்தில் அபிஷேகம் செய்து கிடைக்கும் துளசிதீர்த்தம் க்லஸ்டர்ட் வாட்டருக்கு நிகரான பரிசுத்தமுடையது என்று இந்திய விஞ்ஞானியும் கேரளத்தைச் சார்ந்தவருமான டாக்டர் டி.பி. சசிகுமார் சோதனைகளால் நிருபித்திருக்கின்றார்.

கோயிலில் செல்லாமல் வீட்டிலேயே துளசி தீர்த்தம் தயாரிக்கும் எளிய முறையை பழைய மக்கள் கைக்கொண்டிருந்தனர். ஒரு பாத்திரத்தில் சுத்தமான குடிநீர் எடுத்து அதில் நாலோ ஐந்தோ துளசி இலைகள் பறித்து இட்டு வைத்து தீர்த்தமாக உபயோகிக்கலாம்.

-ஓலைச்சுவடி-

**நண்பனுக்கு கடன் கொடுத்தால் நட்பு போய்விடும்.**

# திருமந்திரக் கதைகள் (தொடர்ச்சி...)

திரு கே.வி. குணசேகரம் அவர்கள்

## 4. நடுவு நிலைமை

"நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரு மாவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே"

சிவனடியார் நடுவில் இருத்தலே நடுவு நிலையாகும். நடுவுள் இருத்தல் என்பது அடியார் நிறையுடைக் காவலில் நாம் என்றும் முறைமையுற நிற்கின்றோம் என்னும் மறவா நினைவுடன் ஒழுகுதல். இஃது உய்யும் மெய்யடியார்க்கு வேண்டும் செய்கையாகும். வேந்தர்கள் நடுவுள் நிற்பதென்பது அறநெறி தவறாது அவர்கள் நிற்பதாகும். அடியார் நடுவில் நின்றாலன்றி திருவடி உணர்வாகிய சிவஞானம் கிட்டாது. நடுவு நின்றார் நன்னெறியில் ஒழுகுதலால் அவர்களுக்கு நரகம் இல்லை. நடுவு நின்றார் சிவவுலகில் இன்பமாக வாழும் தேவர்களைவிட மேம்பட்டவர்கள். மேலும் திருவைந்தெழுத்தாகிய சிவாய நம சிவாய சிவா என்பவற்றுள் 'ய' என்ற எழுத்தைக் குறிக்கும் ஆன்மா நடுவிலேயே இருக்கிறது. அது போல ஆன்மா எப்பொழுதும் நடுவு நிற்றல் வேண்டும். சிவனுக்குள் இருக்கும் ஆன்மா சிவனடியார்களின் உள்ளத்திலும் நடுவு நிற்றல் வேண்டும்.

நடுவு நிற்போர் முத்தியடைய ஞானம் தேவையில்லை. நடுவு நின்றாற்றான் ஞானி ஆகலாம். நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை. நடுவு நின்றார் எப்போதும் சொர்க்க இன்பத்தையே அனுபவிப்பர். நடுவு நின்றோர் தேவரிலும் மேம்பட்டவர். அதனால் ஆன்மாக்கள் நடுவு நிற்றல் வேண்டும்.

அறப்படி வாழ்வதோடு சொல்லிலும் தவறு நேராமல் வாழ்பவனே நடுவுநிலை உள்ளவன். இவன் அயலவர், பகைவர், நண்பர், என எத்தரப்பினராக இருந்தாலும் நடுவு நிலையோடு செயற்படுவான். அவன் சொர்க்கத்தில் அனுபவிக்கும் இன்பங்களைப் பூமியில் அனுபவிப்பான்.

வளவ நாட்டில் சதானந்தன் என்றொரு சிவனடியார் வாழ்ந்து வந்தார். அவரின் ஆச்சிரமத்தில் பல தேசத்து அரச குமாரர்கள் தங்கிக் கல்வி கற்று வந்தனர். வளவ நாட்டின் அரசகுமாரன் கற்றலில் அக்கறை காட்டுவதில்லை. அத்துடன் சிவ நினைவும் அவனிடம் இருக்கவில்லை. அங்கு வரும் சிவன் அடியார்களை அவன் சாதாரண பிரசைகள் என்று நினைத்து அவர்களை மதிக்காது அவமதிப்பான். அது பற்றி அடிக்கடி சதானந்தன் எடுத்துச் சொல்லியும் அவன் கேளாது தொடர்ந்தும் சிவனடியார்களை அவமதித்து வந்தான். அதனால் சதானந்தன் வளவ நாட்டரசனை அழைத்து இளவரசனை அழைத்துச் செல்லும்படி கூறினார்.

வளவ நாட்டரசன் திமிர் பிடித்தவன். நடுவு நிலையைப் போற்றாதவன். அதனால் நாட்டில் அடிக்கடி குழப்பங்கள் உண்டாகும். அத்துடன் அயல் நாடுகளுடன் அடிக்கடி பிரச்சனைப்படுவான். அயல்நாட்டரசர்கள் சதா னந்தனுக்குத் தமது பிரச்சினைகளைக் கூறுவர்.

தனது மகனுக்குக் கற்பிக்காவிட்டால் சதானந்தனைக் கொலை செய்வேன் என்று மிரட்டிய அரசன் சிவனடியார்கள் பலரைத் தண்டித்தான். சிவனடியார்க்ளின் நடுவில் வீற்றிருக்கின்ற சதானந்தனுக்கு அது பொறுக்கவில்லை. அவர் வளவ நாட்டர சனைப் பற்றி அயல் நாட்டரசர்களுக்குச் சொன்னார்.

அயல் நாட்டரசர்கள் ஒன்று சேர்ந்து வளவ நாட்டைக் கைப்பற்றினர்; "நடுவுநிலை நிற்கும் சிவனடியார்களுக்குப் போர்ப் பயிற்சி தேவையில்லை. படை தேவையில்லை. ஆனால் அவை தேவைப்படும்போது ஆன்மா விற்கு உதவியாகச் சிவன் வருவார். இதையே சிவாய சிவா என்றும் பஞ்சாட்சரம் குறிக் கிறது. ஆகையால் ஆன்மாக்கள் நடுவுநிலை நின்று தம் வாழ்வை மேம்படுத்துதல் வேண் டும். நடுவுநிலை நிற்பவர்கள் முத்தியடைந் தவர்கள். சிவனின் மனதில் இருப்பவர்கள். அதனால் எதுவுமில்லாத அவர்கள் தேவை யேற்படும்போது எல்லாவற்றையும் பெற்று விடுவர்." என்று சதானந்தன் தனது மாணவர் களுக்குப் போதித்துக் கொண்டிருந்தார்.

---

## வாசகர் உள்ளத்திலிருந்து:

தைமாதச் சுடர் கண்டு - மனம்
தைத்ததே யதனழகு கண்டு! ஆம்,
நெய்ச் சாத முண்ட வாய்போல
நுகர்ந்தேன் அதன் முகப்பு உண்டு!
தொய்வில்லா உள்ளுடன் திரண்டு
தோற்றத்தில் ஞானக் கற்கண்டாயிற்று.
ஐயனின் அடக்கம், அரிய நற்சிந்தனை.
ஆதியில் சந்நிதி அமைந்த முகப்புடன்
கோயிலின் மகிமை கொலுவாகி எழிலுற
கும்பிடுவோருக்கு ஏற்ற படையலும்,
ஆய்ந்து எழுதி அழகாக வார்க்கப்பட்ட
"ஆன்மீகத்தின் இன்றைய தேவை" என்று
தோய்ந்து எழுதிய கட்டுரையானது,
துவக்கத்திலிருந்து படிக்க வேண்டியது
கூர்ந்து கவனிக்கத்தக்க கருத்துக்கள்
குறைபாடுகளை இனியாவது சிந்திப்போமா?
குமாரசாமி சோமசுந்தரம் ஐயா அவர்கள்
கூறிய கருத்துக்கள் முழுதும் உண்மையே!

**குறிப்பாக:-**

**தை- இதழ்- பக்கம்: 17**

"இன்று வாழுகின்ற மனிதர்கள் பலர்
நல்ல மனிதர்களாக, சமயிகளாக,
ஆன்மீக வாதிகளாக நடிப்பதிர் வல்லு
நர்களாகக் காணப்படுகின்றனர்"

**தை- இதழ்- பக்கம்: 19**

"நாம் எவற்றை மனித சாதனைகளாக
எதிர்காலச் சந்ததியினருக்கு முன்
வைக்கப் போகின்றோம்? *(எனது கருத்து- நான் என்பது தான் முன்னிற்கிறது!)*" பக்கம்: 18

"குற்றம் புரிபவர் யாவரும்
குற்றங்களை நியாயப்படுத்தித்
தம்மைப் பாதுகாக்கும் முயற்சி
களிலேயே காலத்தைக் கடத்துகின்றனர்!"

மெச்சத்தக்க, விழிப்புணர்வுக் கட்டுரை
இதுவாகும். இக்கருத்துக்களை தந்த
ஞானச்சுடருக்கு நன்றி.

-கே.எஸ். சிவஞானராஜா-

# திருக்கோவையார்

இரா சாந்தன் அவர்கள்

மணிவாசகப் பெருமானால் அருளப்பட்ட எட்டாந்திருமுறையில் அமைந்தவை திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும். அறிவன் நூற்பொருளும், உலகநூல்வழக்கும் செறியப்பாடப்பட்டது திருக்கோவையார் ஆகும். குமரகுருபரசுவாமிகள் "காமஞ்சான்ற ஞானப்பனுவல்" என்று இதனைப் பாராட்டுகிறார். இதனாற் காதலுணர்ச்சியும் கடவுள் உணர்ச்சியும் கலந்து விளங்கும் நூல் இதுவென்பது புலப்படுகின்றது.

"பெற்றசிற்றின்பமே பேரின்பமாயாங்கே
முற்றவரும் பரிசுந்தீபற
முனையாது பந்தமென்று உந்தீபற"

என்றாற்போல் மணிவாசக அடிகள் சிற்றின்பச்சுவையைப் பேரின்பப்பயனோடு கூட்டி அமையத்தமது திருக்கோவையாரை இயற்றியருளினார். எல்லையற்ற அகண்ட வெளியிலே திருநடனம் புரியும் இறைவனே எமது நாயகன், அவனை அடையவிருக்கும் ஆன்மாக்கள் அனைத்தும் நாயகிமார், ஆன்மாவாகிய தலைவி தனது ஆன்மநாயகனை அடையச் செய்துகொள்ளும் பிரயத்தனங்களையே சைவசித்தாந்தம் விரித்துரைக்கிறது. இவற்றின் உட்பொருளை அமைத்துப் பழைய அகத்தமிழிலக்கண முறையைத்தழுவி எழுந்ததே திருக்கோவையார். திருவாசகமும், திருக்கோவையாரும் இரு பெருந்தேனூற்றுக்கள். திருவாசகம் பக்திச்சுவை சொட்டுந்திருநூல், திருக்கோவையார் செந்தமிழ்ச்சுவை சொட்டும் பெருநூல். திருவாசகத்தைத் தேனாகக் கண்டால் திருக்கோவையாரை அமுதமாகக் காணலாம். இறைவனுடைய பிரிவினால் ஏற்பட்ட துன்பப்புலம்பல்களே திருவாசகப்பாடல்கள் என்றால் திருக்கோவையார் அவருடைய தூய உள்ளத்திலேயிருந்து அமைதியாகப் பாய்கின்ற நீரருவியென்று கூறிவிடலாம். இவ்வருவி பல கால்வாய்கள் மூலம் பாய்ந்து எம்பெருமானின் திருவருட்கடலிற் சேர்கின்றது. அக்கால்வாய்கள்தான் அகப்பொருட்டுறைகள். கைப்பான மருந்தைச் சருக்கரையிற் பொதிந்து கொடுத்தது போன்று உண்மைப் பொருளைச் சிற்றின்பங்கூறும். அகப்பொருட்டுறைகளுள் அடக்கி உலகுக்கு இனிய முறையில் நல்குகிறார் மணிவாசகர். திருவாசகப்பாடலின் இறுதியே திருக்கோவையாரின் தொடக்கமென்று கூறிவிடலாம். "முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை" என எடுத்து, அச்சோ என்ற உச்சநிலையில் நின்று பாடப் பெற்றது திருக்கோவையார். சங்க இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர் என்பதை இந்நூல் தெளிவாகக் காட்டுகிறது.

"சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பத்தும்
என்சிந்தையுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலில்
ஆய்ந்த ஒண்தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ"

என்னும் பாடல் அவருடைய தமிழ்ப்புலமையையும், சங்கஇலக்கிய ஈடுபாட்டையுந் தெளிவுறுத்துகிறது. மக்களைத் தலைவர்களாகவும், தலைவிகளாகவும் அமைத்துப் பாடியமை

இலக்கிய வரலாற்றில் அவர் செய்த ஒரு புதிய திருப்பமாகும். தில்லைப்பெருமானையடைய அவாவிநிற்குந் தன் தன்மையைத் தலைவனின் முயற்சியிலே வைத்து விளக்குகிறார்.

“நேயத்ததாய் நென்னல் என்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்ததாய் அமிழ்தாய் அணங்காய்
அரன் அம்பலம்போல்
தேய்த்ததாய் என்றன் சிந்தையதாய்த்
தெரியிற் பெரிதும்
மாயத்ததாய் இதோ வந்து
நின்றதென் மன்னுயிரே”

நேற்று உள்ள நெகிழ்ச்சியோடு என்னைச் சேர்ந்து பின்பு என்மனம் உடையும்படி தனது தோழியர் கூட்டத்தைச் சென்றடைந்து, என்னோடு கூடியிருக்கும் போது இன்பஞ்செய்தலில் அமிர்தத்தை ஒத்துள்ளது. அதுவே பிரிந்திருக்கும் போது துன்பஞ்செய்தலில் தீண்டிவருத்தும் தெய்வத்தை ஒத்துள்ளது. பேரானந்தம் தருவதில் இறைவனுடைய தில்லையம்பலம் போன்ற ஒளியை உடையது. புறக்காட்சி கொடுக்காத நேரத்தில் என்சிந்தையிலே வீற்றிருந்து அகக்காட்சி தருகின்றது. இத்தன்மையான இந்த உயிர் எனக்கு இப்பொழுது காட்சி கொடுக்கின்ற தன்மை பெரிதும் மாயத்தை உடையதாக இருக்கிறது. இது சிற்றின்ப உணர்வோடு நின்று நாம் காணும் பொருளாகும். இனிப்பேரின்பக் கருத்திலே வைத்துக் கவனிப்போம்.

மணிவாசகர் திருப்பெருந்துறையிலே தமக்குக்கிடைத்த காட்சியையும், பிரிவையும் அதனால் தமது சிந்தையிலே ஏற்பட்ட குழப்பத்தையும் விளக்குகிறார். குதிரை வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறை சென்ற அடிகளுக்கு ஏதோ நல்வினை வசத்தால் இறைவனுடைய காட்சி கிடைத்தது. அந்த ஆனந்தநிலையிலே அமிழ்ந்த அடிகளுக்குச் சிறிது நேரத்தில் இறைவனுடைய பிரிவு உணர்த்தப்பட்டது. அந்நிலையில் அழுதார், அலறினார் தான் என்று ஒன்றை மறந்து எல்லாம் சிவன் செயலே என்ற சிவபோதநிலைக்கு ஆளானார். அதனால் மயங்கினார். எம்பெருமானாகிய இறைவனைத் தேடிப் பல பல தலங்களுக்கும் ஓடினார். இந்த நிலையைத்தான் மேற்காட்டியபாடல் அகப்பொருட்டுறையிலே வைத்துக் காட்டுகிறது. திருவாசகத்திலும் ஓர் இடத்தில் இதனைக் குறிப்பிடுகிறார்.

“கேட்டாயோ தோழி கிறிசெய்த
வாறொருவன்
தீட்டார் மதில் புடைசூழ் தென்னன்
பெருந்துறையான்
காட்டாதன வெல்லாம் காட்டிச்
சிவம் காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத்
தேன்காட்டி”

என்பது அப்பாடலாகும்.

அடுத்துத் திருக்கோவையாரிலேயுள்ள மற்றொரு பாடலின் சிறப்பைக் கவனிப்போம்.

"புரங் கடந்தான் அடிகாண்பான்
புவிவிண்டு புக்கறியாது
இரங்கிடு எந்தாயென்றிரப்பத்
தன்னீரடிக் கென்னிரண்டு
கரங்கள் தந்தான் ஒன்று காட்ட
மற்றாங்கதுங் காட்டிடென்று
வரங்கிடந்தான் தில்லையம்பல முன்றில்
அம்மாயவனே"

தலைவி தோழிக்குக் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. பாங்கற்கூட்டம் பெற்ற பின்பு தோழியிற் கூட்டத்திற்காக இரந்து பின்னின்றான், என்பதைத் தலைவி விளக்குவதற்கு மாயவன் மேல் வைத்துக் கூறுகின்றான். திரிபுரங்களைக் கடந்தவனாகிய இறைவனுடைய பாதகமலங்களைக் காணவேண்டிப் பூமியைக் கிழித்துப் பன்றி வடிவமாகச் சென்று அவனடியைக் காணாது மீண்டுவந்து "எந்தையே எமக்கிரங்கிடு" என்று இரந்தான் திருமால். அந்த நேரத்தில் இறைவன் தன் ஓர் அடியைக் காட்டினான். மற்ற அடியையுங் காட்டிடு என்று வரங்கிடந்தான் அம்மாயவன், என்பது அப்பாடற் பொருளாகும். ஓர் அடியைக் காட்டியது பாங்கற் கூட்டத்தையும் மறு அடியைக்காட்டிடு என்று வரங்கிடந்தது தோழியிற் கூட்டத்தை விரும்பி நிற்பதையும் குறிப்பதாகும்.

இப்படியாகக் கூறிக் கடைசியில் இறைவன் சர்வலோகங்களுக்கும் நாயகன் என்பதைத் தெளிவுபடுத்துகிறார். "ஊருணி யாவர்க்கும் ஊதியன்" என்ற அடி இதனைத் தெளிவுபடுத்துகிறது. தலைவி தன் அன்பின் முதிர்ந்த நிலையிலே தலைவனை ஊருணியாகக் காணுகிறாள். இதனையே திருக்கோவையாரின் இறுதிப்பாடல் காட்டுகிறது. இது ஆன்மாவின் புனித நிலையாகும். இந்த நிலையே நங்கை தலைவன் தலைவி தாளில் தலைப்படும் நிலையாகும். திருக்கோவையாரை அந்தணர்கள் கற்கும் போது வேதநூலென்று காண்பர். யோகநிலையில் நிற்போர் கற்கும் போது ஆகமநூல் என்று காண்பர். காமுகர் கற்கும் போது காமநூலாக காண்பர், அளவைநூலார் தருக்கநூலென்பர், புலவர்கள் இலக்கண நூலென்பர் இப்படியாகக் கற்போருக்கு அவரவர் எண்ணத்திற்கேற்றபடி பயன் கொடுப்பது இந்நூலொன்றேயாகும்.

அடிகள் திருவாசகம் மூலம் தனது அனுபவங்களைத் தன்னை அறியாமலே சிவபோதநிலையில் நின்று அள்ளிச் சொரியும் போது "எனை நானென்பதறியேன், பகலிரவாவதுமறியேன்" என்று பாடுகின்றார். ஆனால் திருக்கோவையாரில் மற்றவர்களின் அறிவுக்கு விருந்தளிக்கின்றார். முன்னையது மக்களின் உணர்ச்சியைப் பெருக்குவது, பின்னையது மக்களின் அறிவை விரிப்பது.

"வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்தன்று
அமுங்கப் பிடித்தெடுத்து
வாங்குமவற்கறியேன் சிறியேன்
சொல்லும் வாசகமே"

என்று தலைவி தோழிக்குக் கூறுகிறாள். அன்றொருநாள் நாம் புனலிடை நீராடிக் கொண்டு நிற்கும் பொழுதுதவறிச்சுழியிடை அகப்பட்டுவிட்டோமல்லவா? அந்த நேரத்தில்

எம்மைப் பிடித்து எடுத்துக் கரையேற்றியவருக்கு நான் என்னதான் பதில் உரைப்பேனோ தெரியவில்லையென்று தான் உடன்படும் நிலையைத் தெளிய வைக்கின்றாள் தலைவி. இதில் அமைந்த அறிவு விருந்தைக் கவனிப்போம். பெரிய பிறவிக்கடலிலே விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்த எம்மை அவன் கருணைக்கையாற்பற்றி எடுத்து முத்திக்கரை இதுவெனக் காட்டினான். அப்படிப்பட்டவனுக்கு என்னதான் கைம்மாறு புரியவல்லோம் என்று பிரலாபிக்கும் தன்மை புலப்படுகின்றது. இவ்வாறு கற்றறிந்தோர்க்கு நல்விருந்தளிப்பது இந்நூற்பாடல்களாகும். தமிழ் மொழியில் எத்தனையோ கோவை நூல்கள் இருப்பினும் அவற்றில் ஒன்றாவது திருக்கோவையாருக்கு ஈடாகாது. அகப்பொருளுக்குத் தூய்மையளித்தவர் மணிவாசகர். தெய்வீகக் கோவையாகிய திருக்கோவையாரைக் கற்றவர் கசடறக் கற்று மற்றவர்க்குரைத்துத் தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற வழிகாட்டுவார்களாக.

# சிறப்புகள் மலிந்த இடம் செல்வச் சந்நிதி ஆலயம்



அடியவர் கூடும் இடம்
அதிசயம் நிகழும் இடம்
படித்தவர் சேரும் இடம்
பாமரர் நாடும் இடம்
விடிவினைக் காட்டும் இடம்
விக்கினம் தீர்க்கும் இடம்
முடிவினில் முத்திக்கு இடம்
முருகனின் புனித இடம்

செல்வச் சந்நிதி என்னும்
சிறப்பு உடைய ஆலயம்
எல்லா அடியவர் கூட்டமும்
ஏற்றி வணங்கும் ஆலயம்
பொல்லா வினைகள் கூடப்
பொசுங்கிடும் கந்தன் ஆலயம்
நல்ல வாழ்வு தேட
நாடிடும் வேலன் ஆலயம்

—வ. யோகானந்தசிவம்—

# "காளமேகம்" பாடல்கள்



(தொடர்ச்சி...

## சிவனுக்கு அரைக்கண்:

முக்கண்ணன் சிவபெருமான் "அவனுக்கு அரைக்கண் தான் உள்ளது என்று பாடுக" என்று சொன்னார் ஒருவர்.

முக்கண்ண னென்றரனை முன்னோர் மொழிந்திடுவர்
அக்கண்ணற் குள்ள தரைக்கண்ணே - மிக்க
உமையாள் கண் ணொன்றரைமற் றூன்வேடன்
-கண்ணொன்
றமையுமித லாவென் றறி

"பெருமான் உமையொருபாகன். அதனால் முக்கண்களிற் பாதியான ஒன்றரைக் கண் அம்மைக்குரியதாகும். காளத்திநாதருக்கு, ஒரு கண் கண்ணப்பனால் அப்பி வைக்கப்பெற்றது. இரண்டையும் கருதினால் எஞ்சி மிகுதியாக இருப்பது எல்லாம் அரைக்கண்தானே!" இவ்வாறு பொருத்தமாகப் பாடி அனைவரையும் வியப்பிலே ஆழ்த்துகிறார் கவிஞர்.

அரனை "முக்கண்ணன்" என்று முன்னோர் மொழிந்திடுவர் - சிவபெருமானை மூன்று கண்களையுடைய பெருமான் என முன்னோர்கள் சொல்வார்கள்; அக் கண்ணுக்கு உள்ளது அரைக்கண்ணே - மாலையினை அணிவோனான இப் பெரியோனுக்கு உள்ளதெல்லாம் அரைக்கண்ணேயாகும்; (எவ்வாறு என்றாலோ) மிக்க உமையாள் கண் ஒன்றரை - மேலானவளான உமையம்மைக்கு உரிமையுடைய கண் ஒன்றரையாகும்; மற்று - பின்னும்; ஊன்வேடன் கண் ஒன்று- ஊனுண்போனாகிய வேடனாம் கண்ணப்பன் அப்பி வைத்த அவனுடைய கண் ஒன்றாகும்; இதனால் அமையும் என்று கூறி - இத் தன்மையினாலே பெருமானுக்குச் சொந்தமானது, அரைக்கண் என்பதே பொருந்தும் என்று அறிவாயாக.

## சோ கா மா ஏ வா தா:

ஒருவர், "சோ கா மா ஏ வா தா" என்ற சொற்களில் தொடங்கும் ஒரு வெண்பாவினைப் பொருட்சிறப்புடன் கூறுக" என்றவுடன் கவிஞர் பாடிய பாடல் இது. சிவபெருமானைப் போற்றி அவர் தம் திருவிளையாடல்களைக் குறிப்பிட்டுப் பாடுகிறார்.

சோகாமா ஏவாதா சொல்லின்மனைக் கூட்டியுமை
பாகார்ந்த தில்லைப் பரமேசர் - வாகாய்த்
தரித்தார் எரித்தார் தறித்தார் உதைத்தார்
உரித்தார் கணைபடைத்தார் ஊர்க்கு.

உமைபாகு ஆர்த்த தில்லைப் பரமேசர் - உமாதேவியைத் தம் இடப்பாகத்தே கொண்டவரான தில்லையிற் கோயில் கொண்டிருக்கும் பரமேஸ்வரனானவர்; சோகாமாஏவாதா சொல்லின் மனைக்கூட்டி - சோ கா மா ஏ வா தா என்பவற்றின் இறுதியில் "மன்" என்பதனைக்

கூட்டிச் சொன்னால்; வாகாய்த் தரித்தார் - அழகாய்த் தரித்தார் (சோமன்- சந்திரன்); எரித்தார் - எரியச் செய்தார் (காமன்); தறித்தார் - கொன்றார் (மாமன், தக்கன்); உதைத்தார் - உதைத்தனர் (எமன்); உரித்தார் - தோலினை உரித்தார் (வாமன் -யானை); ஊர்க்குக் கணை படைத்தார் - முப்புரங்களையும் அழித்தற் பொருட்டுக் கணையாக அமைத்துக் கொண்டார். (தாமன் - திருமால்) என்று அறிக.

## ஒரு வெண்பாவில் ஐந்து "டு":

"ஒரு வெண்பாவிலே ஐந்து "டு" வருமாறு பாடுக" என்றார் ஒருவர். பொருள் அமைதி சிறப்பாக இருத்தல் வேண்டும் எனவும் அவர் கூறினார்.

ஓகாமா வீதோடு நேரொக்க டுடுடுடு
நாகார் குடந்தை நகர்க்கிறைவர் - வாகாய்
எடுப்பர் நடமிடுவர் ஏறுவரன் பர்க்குக்
கொடுப்ப ரணிவர் குழை

என்று உடனே பாடினார் காளமேகம். இதன் பொருள்: நாகு ஆர். குடந்தை நகர்க்கு இறைவர் - இளமரச்சோலைகள் நிறைந்த திருக்குடந்தை நகர்க்கு இறைவரான சிவபெருமான்; ஓகாமா வீதோடு டுடுடுடு நேர் ஒக்க - ஓ, கா, மா, வீ, தோ என்னும் ஐந்து எழுத்துக்களையும் டுடுடுடு என்னும் ஐந்து எழுத்துக்களுடனும் முறையே பொருந்துவதால் (வரும் சொற்கள் ஓடு, காடு, மாடு, வீடு, தோடு); வாகாய் எடுப்பர் நடமிடுவர் ஏறுவர், அன்பர்க்குக் கொடுப்பர் அணிவர் குழை - அழகாகத் திருவோட்டினை ஏந்துபவர், காட்டிடத்தே நடனம் புரிபவர், மாடாகிய வெள்ளேற்றின் மீது ஏறுபவர், அன்பர்க்கு வீடாகிய முத்தியைக் கொடுப்பர், குழையாகிய காதணியைக் காதிலே தரிப்பவர் ஆவார். "நாகார்" என்பதற்குச் "சங்கினம் நிறைந்த" எனவும் சொல்லலாம். நாகேஸ்வரரைக் குறிப்பதாயின் நாகங்கள் ஆர்ப்பரிக்கும் எனலும் பொருந்தும். அது இறைவன் நாகாபரணனாக விளங்குவதலால் என்றும் அறிக.

## மத்தால் அடித்தது:

"யசோதைப் பிராட்டி கண்ணனை மத்தினாலே அடித்தாள் அல்லவா! அதற்கு இரங்குவது போன்று பொருள் அமைய ஒரு வெண்பாப் பாடுக" என்று சொன்னார் ஒருவர்.

கண்ணனின் பெருமைகளை எல்லாம் எடுத்துக்கூறி அப்படிப்பட்ட கண்ணன் அழுமாறு யசோதைப் பிராட்டி அடித்தனளே, அது எவ்வளவு அறியாமையுடைய செயல் என்னும் பொருளமைய, உடனே ஒரு வெண்பாவைச் சொன்னார் காளமேகம். கேட்டவர் வாயடைத்துப் போய்விட்டனர்.

வண்ணங் கரியனென்றும் வாய்வேத நாறியென்றும்
கண்ணன் இவனென்றும் கருதாமல் - மண்ணை
அடிப்பது மத்தாலே அளந்தானை யாய்ச்சி
அடிப்பது மத்தாலே யழ.

மண்ணை அடி பதுமத்தாலே அளந்தானை - வாமனனாகி வந்து உலகனைத்தையும் தன் திருவடித் தாமரையினாலே அளந்தவனாகிய பெருமானை; வண்ணன் கரியனென்றும்

- நிறத்தாற் கரியவனாகிய திருமாலே என்றும்; வாய் வேத நாறி என்றும் - திருவாயிடத்தே வேதமணம் கமழும் சிறப்புடையவனே என்றும்; கண்ணன் இவன் என்றும் - பெருமையுடைய திருமால் இவனே என்றும்; கருதாமல் - கருதிப் பார்த்து அவனைப் போற்றி தான் உய்வதற்கான வழிவகையினை நாடாமல்; ஆய்ச்சி - இடைச்சியான யசோதைப் பிராட்டியானவள்; அடிப்பது மத்தாலே அழ - அவன் அழுமாறு மத்தினாலேயோ அடிப்பது! இஃது இரங்குவதற்கு உரிய செயல் அல்லவோ என்பது கருத்து.

மூன்றாவது அடியின், "அடிப்பதுமத்தாலே" என்பதனை "அடிப் பதுமத்தாலே" எனப் பகுத்துத் "திருவடித் தாமரையினாலே" எனப் பொருள் உரைத்துக் கொள்ளுதல் வேண்டும். வண்ணம் - நிறம், நாறி - மணப்பவன், கண்ணன் - அனைவருக்கும் கண்ணாக அமைந்த பிரான்.

## மும்மூர்த்திகள்

மும்மூர்த்திகளாகிய சிவன், விஷ்ணு, பிரமன் ஆகியவர்களின் பெயர்கள் அமைந்திருக்க வேண்டும். அவர்கள் உண்ணும்கறி, உண்ணும் உணவு, ஏந்தும் ஆயுதம், பூணும் அணிகள், ஏறும் ஊர்திகள், வசிக்கும் இடங்கள் இவை எல்லாம் வரவேண்டும். ஒரு வெண்பாவை இத்தகைய முறையிலே உம்மாற்பாட முடியுமோ? என்றார் புலவர் ஒருவர்.

சிறுவ னளைபயறு செந்நெற் கடுகுபூ
மறிதிகிரி தண்டு மணி நூல் - பொறியவரம்
வெற்றேறு புள்ளன்னம் வேதனரன் மாலுக்குக்
கற்றாழம் பூவே கறி

என்று காளமேகம் அதற்கு இசையப் பாடினார். புலவர் அயர்ந்து போனார்.

வேதன் அரன் மாலுக்கு - பிரமன் சிவன் திருமால் ஆகிய மும்மூர்த்திகளுக்கு; கறி பயறு சிறுவன் அளை - பயறும் பிள்ளையும் வெண்ணையுமே கறிகளாம்; செந்நெல் கடுகுபூ - செந்நெல் விஷம் பூமி மூன்றுமே உணவுகளாம்; தண்டுமறிதிகிரி - தண்டம் மான்மறி சக்கரம் இவையே ஆயுதங்களாம்; நூல் பொறி யரவம் மணி - முப்புரிநூல் புள்ளிகளையுடைய பாம்பு கௌத்துவமணி இவைகளே அணிகளாம்; வெற்றேறு புள் அன்னம் - அன்னம், வெள்ளை ஆண் ஏறு; கருடப்புள் ஆகியவையே வாகனங்களாம்; கல் தாழம் பூ தாமரை மலரும், கைலைமலையும், பாற்கடலும் ஆகிய மூன்றுமே வாழும் இடங்களாம்.

இவ்வாறு சொற்களைக் கூட்டிப் பொருள் உரைக்கவும்.

## செருப்பு -விளக்குமாறு

ஒரு புலவருக்குக் கவிஞரை இழிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணம். "செருப்பு என்று தொடங்கி, விளக்குமாறு என்று முடிய ஒரு வெண்பாப் பாட முடியுமா" என்றார்.

அவருடைய கருத்தின் தன்மையைப் புரிந்து கொண்டார் கவிஞர். அந்தச் சொற்களையே அமைத்துப் பாடினும் அதனாற் பொருட்சுவை மிக்கதாகத் தம் செய்யுளை அமைத்து அவரைத் திகைப்படையச் செய்கிறார்.

முருகப் பெருமான் மீது காதல்கொண்ட ஒரு நங்கையானவள், பொய்கையிடத்துத் தாமரையிலே வந்து படிந்திருக்கும் வண்டிடத்தே, முருகனிடம் செல்வதற்கான வழியினை வினாவி அறிவதுபோல அமைந்துள்ளது வெண்பா.

செருப்புக்கு வீரர்களைச் சென்றுழக்கும் வேலன்
பொருப்புக்கு நாயகனைப் புல்ல - மறுப்புக்குத்
தண்டேன் பொழிந்ததிருத் தாமரைமேல் வீற்றிருக்கும்
வண்டே விளக்கு மாறே.

செருப்புக்குச் சென்று வீரர்களை உழைக்கும் வேலன் - போர்க்களத்திடையே புகுந்து சென்று எதிர்த்த பகைவீரர்களைச் சிதறடிக்கின்றனவாகிய வேலனை, பொருப்புக்கு நாயகனை - குறிஞ்சி நிலத்திற்கு உரிய தலைவனை புல்ல - யான் தழுவும் பொருட்டாக, தண் தேன் பொழிந்த திருத்தாமரைமேல் வீற்றிருக்கும் வண்டே - குளிர்ந்த தேனைப் பொழிந்த அழகிய தாமரை மலரின் மேலே தங்கியிருக்கின்ற வண்டே! விளக்கும் ஆறே - உரியதோர் வழியினை எனக்கு விளக்கிக் கூறுவாயாக!

ஆறு - என்பதற்கு அவனை அடையும் வழி எனவும், அவனிடத்தே செல்லும் வழி எனவும் பொருள் உரைக்கலாம். (தொடரும்...

# சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்களை வாழ்த்துகிறோம்



அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற இந்து தர்ம ஆசிரியர் பரீட்சையில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற, தெல்லிப்பழை பன்னாலையைச் சேர்ந்த சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரன் அவர்கள் அண்மையில் மேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பரிசும் பாராட்டும் பெற்றுக்கொண்டமை மனதாரப் பாராட்டப் படவேண்டியது ஒன்றாகும்.

சைவப்புலவர் திரு க. நித்தியதசீதரன் தமது இளம் வயதிலிருந்தே சந்நிதியான் ஆச்சிரமத்தோடு தம்மை இணைத்துக்கொண்டு ஈடுபாடு காட்டியவர். சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த வெள்ளி நிகழ்வில் பங்கு கொள்வது "ஞானச்சுடர்" ஆன்மிக சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தருவது, ஞானச்சுடரினை மதிப்பீடு செய்வது என பல பரிமாணங்களில் எம்மோடு நெருங்கி நிற்பவர்.

அவர்களுக்குக் கிடைத்துள்ள பரிசும் பாராட்டும் மனம் திறந்து பாராட்டப்பட வேண்டும். நாமும் அவரது வெற்றியினை வாழ்த்துகிறோம்.

—சைவ கலை பண்பாட்டுப் பேரவை—

திருவாசகம்

# ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் இந்து கலை கலாச்சார மண்டபத் திறப்புவிழா

திருக்கேதீஸ்வரம்



திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் இந்து கலை கலாச்சார மண்டப திறப்புவிழா 26.01.2013 சனிக்கிழமை காலையில் இனிதே நடந்தேறியது. வாழைகள், மாவிலை, தோரணம் பலவற்றினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த மண்டபத்தினை நந்திக் கொடிகள் காற்றில் அசைந்தபடி அழகூட்டி நின்றன. மண்டபத்தில் இடம்பெற்ற பொங்கலைத் தொடர்ந்து, மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல நூறு அடியார்கள் சூழ்ந்துவர, பல்வேறு சுவாமி படங்களுடன் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் படமும் கோயிலில் இருந்து மண்டப முகப்புக்கு எடுத்துவரப்பட்டன. ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் தலைவர் "திருப்பணித் தவமணி" S. தியாகராசா (S.T.R) அவர்கள் மண்டபத்தினை திறந்து வைக்க, ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட படங்கள் அனைத்தும் மண்டபப் பூஜை அறையில் அழகுற வைக்கப்பட்டன.

பல பெரியார்கள் மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து, ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபையின் செயலாளர் "கலாபூஷணம் துரைராசா"வின் செயலறிக்கை வாசிக்கப்பட்டது. திரு திருமதி துரைராசா தம்பதிகள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். மண்டபத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த 36 மகான்களின் திருவுருவப்படங்கள் அனைவரதும் கவனத்தைக் கவர்ந்தது. வருகை தந்திருந்த அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் இந்து கலை கலாச்சார மண்டப அமைப்புக்குழுவினர், முடிவு பெறாத சில நிர்மாணப் பணிகளுக்கு சைவப் பெருமக்களை தாராளமாகப் பொருளுதவி அளிக்கும்படியாக ஒரு வேண்டுகோள் வைத்துள்ளனர்.

**கணக்கு இல:**

ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை
039010166499
H.N.B (ஹற்றன் நாஷனல் வங்கி)
பம்பலப்பிட்டிய கிளை
கொழும்பு- 04, ஸ்ரீலங்கா.

**தொடர்புகளுக்கு:**

த. துரைராசா
31A ஜானகிலேன்,
கொழும்பு- 04
ஸ்ரீலங்கா.

**மொழி என்பது கடவுளின் வெகுமதி.**

நாவலர் பக்கம்: தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

**57. மாயாகாரியமாகிய தனு கரண புவன போகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கொடுப்பது எதன் பொருட்டு?**

ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவ மலமும் கன்ம மலமும் ஆகிய நோய்களைத் தீர்த்துச் சிவானந்தப் பெரும்பேற்றைக் கொடுக்கும் பொருட்டு.

**58. தனு கரணம் முதலியவைகளும் மலமன்றோ? மலம் என்பது அழுக்கன்றோ? ஆணவமாகிய அழுக்கை, மாயா மலமாகிய அழுக்கினாலே எப்படிப் போக்கலாம்?**

வண்ணான், கோடிப் புடவையிலே சாணியையும் உவர் மண்ணையும் பிசறி, மிகக் கறுத்தது என்னும்படி செய்து, முன்னையதாகிய அழுக்கோடு பின்னையதாகிய அழுக்கையும் போக்கி, அப்புடவையை மிக வெண்மையுடையதாகச் செய்வன்; அது போலவே சிவபெருமான் ஆன்மாவினிடத்தே மாயா மலத்தைக் கூட்டி, அநாதி பந்தமாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தையும் போக்கி, அவ்வான்மாவைச் சிவமாம் தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வார்.

## 4. வேதாகமவியல்

**59. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த முதனூல்கள், எவை?**

வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். வேதத்தின் பெயர் சுருதி, நிகமம். ஆகமத்தின் பெயர் தந்திரம், மந்திரம், சித்தாந்தம்.

**60. வேதம் எத்தனை?**

இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம்.

**61. சிவாகமம் எத்தனை?**

காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் ஆக இருபத்தெட்டாம்.

**62. வேதம் நான்கும் எங்கே தோன்றின?**

சதாசிவமூர்த்தியுடைய தற்புருட முகத்தினின்று இருக்கு வேதமும், அகோர முகத்தினின்று யசுர் வேதமும், வாமதேவ முகத்தினின்று சாம வேதமும், சத்தியோசாத் முகத்தினின்று அதர்வ வேதமும் தோன்றின.

**63. சிவாகமம் இருபத்தெட்டும் எங்கே தோன்றின?**

சதாசிவமூர்த்தியுடைய உச்சி முகமாகிய ஈசானத்தினின்றும் தோன்றின.

**64. வேதம் நான்கும் எத்தனை சாகை உடையன?**

இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர் வேதம் நூறு சாகையும், சாமவேதம் ஆயிரம் சாகையும், அதர்வ வேதம் ஒன்பது சாகையும் உடையன. (சாகை- கிளை பிரிவு)

**நேர்மையே தலைசிறந்த கொள்கை.**

65. வேதம் நான்கு தனித்தனி எத்தனை காண்டமுடையன?

பிரம்காண்டமும், பிரமகாண்டத்துக்கு நிமித்தமாகிய கருமகாண்டமும் என இரண்டு காண்டமுடையன. பிரமகாண்டத்தின் பெயர் பிரபல் சுருதி, வேதாந்தம், வேதசிரசு, உபநிடதம், கரும காண்டத்தின் பெயர் அற்பசுருதி.

66. வேதத்துக்கு அங்கமாகிய நூல்கள் எவை?

சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிசிதி, சோதிடம் என்னும் ஆறுமாம்.

67. சிக்ஷையாவது யாது?

வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் முதலிய சுர வேறுபாட்டினால் உச்சரிக்கும் முறைமையை அறிவிப்பது.

68. கற்பமாவது யாது?

வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுட்டிக்கும் முறைமையை அறிவிப்பது.

69. வியாகரணமாவது யாது?

வேதங்களின் எழுத்து சொற்பொருளிலக்கணங்களை அறிவிப்பது.

70. நிருத்தமாவது யாது?

வேதங்களின் சொற்களுடைய பொருளை அறிவிப்பது.

71. சந்தோவிசிதியாவது யாது?

வேத மந்திரங்களில் காயத்திரி முதலிய சந்தங்களின் பெயரையும் அவ்வகைகளுக்கு எழுத்து இவ்வளவென்பதையும் அறிவிப்பது.

72. சோதிடமாவது யாது?

வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தற்கு உரிய கால விசேஷங்களை அறிவிப்பது.

73. வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்கள் எவை?

புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் நான்குமாம்.

74. புராணமாவது யாது?

பரமசிவன் உலகத்தைப் படைத்தல், அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேத வாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது. உலகத்தினது தோற்றமும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளுமாகிய இவ்வைந்தையும், கூறுதலால், புராணம் பஞ்ச லக்ஷணம் எனவும் பெயர் பெறும். இதிகாசமும் புராணத்துள் அடங்கும்.

75. நியாயமாவது யாது?

வேதப் பொருளை நிச்சயித்தற்கு அநுகூலமாகிய பிரமாணம் முதலியவைகளை அறிவிப்பது.

76. மீமாம்சையாவது யாது?

வேதப் பொருளினுடைய தாற்பரியத்தை அறிதற்கு அநுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது. அது பூருவ மீமாம்சை, உத்திர மீமாம்சை என இரண்டு வகைப்படும். பூருவ மீமாம்சையின் பெயர் கரும மீமாம்சை. உத்திர மீமாம்சையின் பெயர் பிரம மீமாம்சை, வேதாந்த சூத்திரம்.

(தொடரும்...

ஒவ்வொரு மனிதனிடமும் ஒவ்வொரு பலவீனம் உண்டு.

# சிவபூமி ஞானஆச்சிரமம்

திரு செ. ரவிசாந் அவர்கள்

பல்வேறு சமய சமூகப் பணிகளை எமது மண்ணில் திறம்பட ஆற்றிவரும் சிவ பூமி அறக்கட்டளையினரால் சைவபாரம்பரியம் மிக்க குப்பிளான் கிராமத்தில் அமைக்கப்பட்ட சிவபூமி ஞானஆச்சிரமத்தினுடைய திறப்பு விழா 28.01.2013 (திங்கட்கிழமை) அன்று வெகுசிறப்பாக நடந்தேறியது.

காலை 9.30 மணிக்கு குப்பிளான் சந்தியிலிருந்து மங்களவாத்தியங்கள் சகிதம் கோலாகலமான வரவேற்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்ட காட்சி காண்போர் கண்களுக்கு விருந்தாய் அமைந்தது. வீதியின் இருமருங்கிலும் வரிசைக்கிரமமாக குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலய மாணவர்கள், கிராமத்தவர்கள், நலன்விரும்பிகள் புடைசூழ ஆன்மீகப் பெரியவர்களுக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்பினை வர்ணிக்க வார்த்தைகளில்லை. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து அமெரிக்க ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளால் ஆச்சிரமம் திறந்து வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஆச்சிரமத்தினுள் அமைக்கப்பட்டிருந்த வழிபாட்டுத் தலத்தில் சிறப்புப் பூஜை வழிபாடுகளும் திருமுறை ஓதுதல் நிகழ்வும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து ஞான ஆச்சிரம முன்றலில் நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகியது.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் (தலைவர், சிவபூமி அறக்கட்டளை) தமது தலைமையுரையில் தெரிவித்ததாவது:- சைவ பாரம்பரிய பூமியான குப்பிளானில் புதிதாக எமது ஆச்சிரமம் அமைவது மன நிறைவைத் தருகிறது. 1992ஆம் ஆண்டிற்குப் பின் இச்சூழலில் ஆன்மீக அலை ஒளி வீசிப் பரவுவது நாம் பெற்ற பாக்கியமே. நாம் எமது சிவபூமி அறக்கட்டளை சார்பாக குடாநாட்டில் பல்வேறு சமய சமூகப் பணிகளைக் கடந்த பல வருடங்களாக மேற்கொண்டு வருகிறோம். அந்த வகையில் கோண்டாவிலைத் தலைமையகமாகக் கொண்டு மனவளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கான சிவபூமி பாடசாலை, சுழிபுரம் தொல்புரம் பதியில் "சிவபூமி முதியோரில்லம்" என்னும் பெயரில் எமது பொக்கிஷங்களான முதியோர்களைப் பராமரிக்கும் நிலையம், கீரிமலையில் சிவனடியார்களை ஆதரிக்கும் "சிவபூமி மடம்" என்பன இன்று வரை எம்மவர் பலரின் நிதி உதவியுடன் எவ்வித இடர்பாடுகளுமின்றி நடாத்தி வருகின்றோம். இன்று தொடக்கம் எல்லாம்வல்ல இறைவனதும், இங்கு வந்திருக்கும் பெரியோர்களதும், முன்னோர்களதும் நல்லாசியுடன் சைவத் தமிழின் உறைவிடமான குப்பிளானில் "சிவபூமி ஞான ஆச்சிரமம்" என்ற பெயரில் புதிதாக ஒரு ஆச்சிரமம் ஆரம்பிப்பதையிட்டு சிவபூமி அறக்கட்டளை குடும்பத்தவராகிய நாம் பெருமையும், மன மகிழ்வும் அடைகின்றோம்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள புனிதம் மிகு ஆச்சிரமத்தில் இனிவரும் காலங்களில் சில மூத்தோர்கள் தங்கியிருப்பார்கள். இங்கு அமைக்கப்பட்டுள்ள ஈழ இந்தியச் சித்தர்கள், 63 நாயன்மார்கள் ஆகியோருக்கு மங்களகரமான பூஜை வழிபாடுகள் நடைபெறுவதோடு யோகாசனவகுப்பு, தியானம், அறநெறி வகுப்பு, அன்னதானம் என்பனவும் இடம்பெறும். வெளிநாட்டு யாத்திரிகர்கள் வந்து தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகள் மட்டுமன்றி வாரத்தில் மூன்று நாள் சித்த வைத்திய நடமாடும் சேவையும் இடம்பெறும். முக்கியமாக நவீன வாழ்க்கைச் சூழலில் பலவித இன்னல்களிற்கும், மன அழுத்தத்திற்கும் உள்ளானோரை

ஆற்றுப்படுத்த இரு சிறு மண்டபங்கள் அமைக் கப்பட்டுள்ளன. அவர்களை ஆற்றுப்படுத்து வதற்கு இங்கு உளவளத்துணையாளர்களை நியமிக்கவுள்ளோம். இதில் எல்லாத் தரப்பின ரும் கலந்து பயன்பெறலாம். ஆன்மீக அமைதி நிலவும் இந்த ஆச்சிரமத்தின் வாயிற்கதவுகள் உங்கள் அனைவருக்காகவும் என்றென்றும் திறந்தேயிருக்கும் என்றார்.

அடுத்து வாழ்த்துரைகள் வரிசையில் உரையாற்றிய, நல்லைஆதீனக்குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், "குப்பிளான் கிராமம் மகான் காசிவாசி செந்தி நாதையர் பிறந்த புண்ணிய பூமி. இங்கு எத்தனையோ மகான்கள், கல்வியியலாளர் கள் பிறந்திருக்கிறார்கள். 80வயதினைக் கடந்து ஆன்மீக அன்னையாக, ஞானத்துறவியாக எம்மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் சைவப்புலவர் மாதாஜி அம்மையார் போன்ற வர்கள் போற்றுதற்குரியவர்கள். சிவபூமி சமூகத்திற்குப் பயனுள்ள பல விடயங்களை ஆற்றிவருகிறது. குப்பிளானில் அமைக்கப் பட்டுள்ள சிவபூமி ஞான ஆச்சிரமம் தெய்வீக எழில் நிறைந்த ஒரு பிரதேசம். இவ் ஆச்சிர மத்தின் மூலம் சமூகத்திற்குப் பயனுள்ள வகையில் அறநெறிச் செயற்பாடுகள் தடை யின்றித் தொடர எனது பூரண நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதசுவாமிகள், "இன்று உலகம் முழுதும் சைவசமயம் நிலைபெற் றிருப்பதற்கு ஒருவகையில் காரணகர்த்தாக் களாக இருந்து கொண்டிருப்பவர்கள் யாழ்ப் பாணச்சித்தர்கள். கடந்த காலங்களில் யுத் தம், இயற்கை அனர்த்தம் போன்ற பலவித இன்னல்களை நாம் அனுபவித்த போதும் தற்போது எமது மண்ணில் இன்பமாக வாழ்ந்து வருகிறோம் என்றால் சித்தர்கள் எம் வாழ்க்கைக்கான வழிகாட்டிகளாக இன்று வரை இருந்து கொண்டிருப்பது தான்!

ஈழத்தில் வாழ்ந்து மறைந்த சித்தர் களின் மகிமைகளை அறிந்து கொள்வதிலும் அவர்கள் காட்டிய வழிமுறைகளைப் பின் பற்றுவதிலும் அமெரிக்கா போன்ற மேலைத் தேய நாடுகளிலுள்ள இளைஞர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகிறார்கள். அங்குள்ள வர்கள் ஈழத்துச் சித்தர்களுக்குச் சிலைவைத் துப் பெருமைப்படுத்துகின்றனர். ஆனால் இங்குள்ள பலரோ சித்தர்களைப் பற்றியோ, அவர்களின் ஞானக் கருத்துக்களை அறிய வேண்டும் என்ற ஆர்வம் குறித்தோ கரிசனை இல்லாது செயற்படுவது மனவருத்தமளிக் கிறது.

எமது சமூகம் இப்பொழுது புத்தகக் கல்வியில் தான் தங்கியுள்ளது. இதுமட்டும் வாழ்க்கைக்குப் போதுமென்று இருந்துவிடாது, வாசிப்பு மற்றும் ஆன்மீகக்கல்வி கலைகளி லும் நாட்டஞ் செலுத்தி சிதைந்துபோன எம் கலை கலாச்சாரங்களை மீளக் கட்டியெழுப் பப் பாடுபடவேண்டும். எம்மத்தியில் பலர் தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை வேறு எவருக்கும் சொல்லாமல் மனத்துள்ளேயே பூட்டி வைத்து வாழ்கின்றனர். எல்லோரும் மனச்சுமையை இறக்கி வைக்க மற்றவர் களுடன் பேச வேண்டும். சமூகத்தை ஆற்றுப் படுத்தும் ஆச்சிரமங்களை உரிய முறையில் பயன்படுத்தி நன்மைகள் பல பெறுவோம்" என்றார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய யாழ் இந்தியத் துணைத் தூதரகத்தின் உயர் அதிகாரி தட்ஷணாமூர்த்தி, "இந்தியாவின் தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட நான் கடந்த பல வருடங்களாக யாழ்ப்பாணத்தில் மக்கள் சேவையாற்றி வருகிறேன். இருந்த போதிலும் சேவைக்காலத்தில் முதற் தடவை யாக இப்படியான ஒரு ஆன்மீக நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டுப் பெருமிதம் கொள் கிறேன் (அப்போது சபையில் பலத்த கரவொலி)

அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.

எனக்கு முன் இங்கு உரையாற்றியவர்கள் எதுவித ஆங்கிலச் சொற்பிரயோகமற்ற தனித் தமிழில் உரையாற்றியது கண்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தேன். அந்த வகையில் இந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில் கூட இது போன்ற ஆங்கில மொழிக்கலப்பற்ற உரைகளை இதுவரை நான் கேட்டதில்லை.

மேலும், நாம் ஏதோ இருக்கிறோம். நீங்கள் ஏதோ இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். உங்களுக்கு எப்போதும் தேவையான உதவிகளை வழங்கவும், உங்களோடு இணைந்து செயற்படவும் நாம் தயாராக உள்ளோம்" என்றார். இவரும் தனது உரையில் எவ்வித ஆங்கிலச் சொற்பிரயோகமற்ற வார்த்தைகளைக் கையாண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து உரையாற்றிய யாழ்ப்பாணம் சின்மயாமிஷனைச் சேர்ந்த சிவத்திரு ஜாக்கிரத் சைதன்ய சுவாமிகள் குப்பிளானிற்கு அவசிய /அவசர தேவையாகவிருந்த ஆன்மீக மறுமலர்ச்சி இன்று உருவாகியுள்ளது. இந்துவாகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் எமது சமயத்தை வளர்க்க உறுதி பூணவேண்டும் என்றார்.

இறுதியாக உரையாற்றிய குப்பிளானில் பிறந்து வளர்ந்த சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், "எமது கிராமம் சைவத்தமிழ் பாரம்பரிய தனித்துவத்தைக் கொண்ட ஒரு கிராமம். எமது ஊர் தந்த மகான்கள் வரிசையில் முதன்மையானவராகப் போற்றப்படுபவர் மகான் காசிவாசி - செந்திநாதையர். இதனாலேயே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பார்வையில் ஈழத்தின் திருப்பரங்குன்றமாக எமது கிராமம் மிளிர்ந்தது. அப்படிப்பட்ட மகான் காசிவாசி செந்திநாதையர் எழுதிய சைவசித்தாந்த நூல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்கான ஒரு பாடமாக இருப்பதையிட்டு நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொள்ள முடியும்.

மேலும் தற்போது சிவபூமி ஞான ஆச்சிரமம் அமைக்கப்பட்டுள்ள இப்பகுதியின் அருகே தான் நான் பிறந்து வளர்ந்த இடமுள்ளது. சைவபூஷணம் நல்லையா அவர்களது தலைமையில் இங்கு இடம்பெற்ற பஜனை வழிபாட்டில் சிறுவயதிலிருந்து மிக் ஆர்வமாகச் செயற்பட்டதை இவ்விடத்தில் எண்ணிப் பார்க்கிறேன்" என்று உணர்வு பூர்வமாக தன் உரையை ஆற்றியபோது அங்கிருந்த கிராமத்தவர்கள் பலரதும் கண்கள் பனித்தது.

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த வேதாந்த மடத்தின் இளைய தலைவர் சிவத்திரு ஸ்ரீவேதவித்தியாசகரும், குப்பிளான் கற்கரைக் கற்பக விநாயகராலயத்தில் நீண்டகாலம் பூசகராக கடமையாற்றிய சிவஸ்ரீ குமாரராஜக் குருக்களும் உரையாற்றினர்.

வாழ்த்துரைகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து அன்னதானம் இடம்பெற்றது. சைவ் பாரம்பரியம் மிக்க வாழையிலையில் உணவு பரிமாறப்பட்டது. அப்போது இடம்பெற்ற பண்ணோடு கூடிய திருமுறைப் பாராயணம் ஓதல் நிகழ்வு காதுக்கு இதம் தரும் இனிய கானமாக ஒலித்தது. ஆன்மீகப் பெரியோர்கள், கல்வியாளர்கள், துர்க்காபுர மகளிர் இல்லத்துச் சிறார்கள், பாடசாலை மாணவர்கள், சிவ்பூமி முதியோர் இல்ல மூத்தோர்கள் என நூற்றுக்கணக்கானவர்களின் வருகையின் மத்தியில் ஞான ஆச்சிரமத்தின் திறப்பு விழா இனிதே நடந்தேறியது. எமது கிராமத்தில் உருவாகியுள்ள ஆன்மீக எழுச்சி சிவபூமி ஞான ஆச்சிரமத்தின் தோற்றத்துடன் மேலும் வலுவடைந்துள்ளது. இவ் ஆச்சிரமம் குப்பிளானிற்குக் கிடைத்த "ஆன்மீகப் பல்கலைக்கழகம்" என்பதில் மிகையில்லை.

எனவே, இங்குள்ள அனைவரும் குறிப்பாக நாளைய சமுதாயத்தின் நாயகர்களான இளைய தலைமுறை இந்த ஆன்மீகச் சூழலைச் சரிவரப் பயன்படுத்தி மேன்மை அடைய வேண்டும். "இந்துவாக வாழ்வோம். இந்து தர்மம் காப்போம்"

தாகத்திற்கு முன்பே கிணற்றைத் தோண்டு.

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

(தொடர்ச்சி...)

உயர்திரு: கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள்

சந்திரசேகர மூர்த்தியின் தோற்றங்கள் மூன்று வகைப்படும். இவை **கேவலமூர்த்தி, உமாசகித மூர்த்தி, ஆலிங்கன மூர்த்தி** என்பனவாம். இம்மூன்று நிலைகளில் சந்திரசேகரரைத் தென்னிந்தியத் திருக்கோயில்களில் அங்கங்கே நிறுவியிருக்கக் காண்கிறோம். ஆகமங்கள் இவற்றின் இயல்பு கூறும்.



சந்திரசேகரமூர்த்தி
(கேவலத் தோற்றம்)



சந்திரசேகரமூர்த்தி
உமாசகிதத் தோற்றம்
(சமபங்கம்)

நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் கேவலமூர்த்தியின் முன் வலக்கை அபய முத்திரையையும், முன் இடக்கை வரத் முத்திரையையும் காட்டி நிற்கும். மற்றைய வலக்கையில் மழுவும் இடக்கையில் மானும் விளங்குவன. இம் மூர்த்தியில் வளைவு சிறிதளவுமின்றி உடல் சமநிலையில் அமையும். இந் நிலையைச் சிற்ப நூல்கள் **சமபங்கம்** எனக் கூறும். சடாமுடியாகப் புனைந்த தலைக்கோலம் உருவிற்குத் தனியழகு கொடுக்கும். இம்முடியில் பிறைச்சந்திரன் கவிந்து துலங்குவான். இவனை முக்கண்ணனாகவும், அழகு பொலியும் முகத்தினனாகவும், ஆபரணங்களையும் - பீதாம்பரங்களையும் தரித்து நிற்பவனாக வும் சித்தரித்தல் வேண்டும்.

இவன் நிற்கும் சமபங்க நிலை இராசத குணம் நிறைந்து நிற்றலைக் காட்டும். மான் மழுவேந்தி நிற்குங் கரங்கள் **கர்த்தரி** ஹஸ்தமாக அமைதல் வேண்டும். இவன் கையில் ஏந்தி நிற்கும் மான் இவனை நோக்கியவாறாகவோ அல்லது எதிர்ப்புறம் நோக்கிய வாறாகவோ அமையலாம். சடையாலமையும் மகுடத்தின் வலப்பக்கத்தில் பிறைச்சந்திரன் இடம்பெறுதல் வேண்டும். சடையின் வலப்பக்கத்திலும் அமைக்கும் மரவும் உண்டு. முன்பக்கம் உள்ள வலது கை **சிம்ஹகர்ணமாகவோ, கடக ஹஸ்தமாகவோ, கட்யவலம்பித ஹஸ்தமாகவோ** அமையலாம். கர்த்தரி ஹஸ்தமாக விளங்கும் பின்னங்கைகள் இரண்டும் ஹிக்கா சூத்திரத்திற்கு அப்பால் மீறக்கூடாது. மான் சிவனை நோக்கியோ எதிர்ப்புறமாகவோ அமையினும் மழு எதிர்ப்புறம் திரும்பியவாறே அமைவது அவசியம். உருவத்தின் இடது

காதில் **இரத்தின குண்டலம், சங்கபத்திரம்** அல்லது **பத்மபத்திரம்** விளங்குதல் வேண்டும். வலது காதில் மகர குண்டலம், சிம்ஹ குண்டலம் அல்லது பத்ர குண்டலம் விளங்கலாம். சடை பின்னால் காதுவரை தொங்கலாம். இது இரு மருங்கிலும் தோள்கள்வரை தாழ்ந்தும் அமையலாம். முத்துமாலை, இரத்தினமாலை, பதக்கம், பூணூல், **சன்னவீரம், உதரபந்தனம்,** கேயூரம், கடகம் முதலியன இத்திருவுருவில் விளங்கவேண்டிய அணிகலன்கள். சந்திரசேகரரைப் பத்மபீடத்தில் நிற்கும் நிலையில் அமைத்தல் வேண்டும்.

இதே முறையினுக்கமைய தனிப்பீடத்திலோ அல்லது ஒரே பீடத்திலோ உமையுடன் நிறுவப்படும்போது இம்மூர்த்திக்கு **உமாசகித மூர்த்தி** என்னும் பெயர் ஏற்படுகின்றது. தேவியை இடது கரத்தினால் ஆலிங்கனம் செய்த நிலையில் உருவாகும்போது இது **ஆலிங்கனமூர்த்தி** எனப்படுகிறது. இடது பக்கத்தில் நிற்கும் தேவியின் இடது ஸ்தானத்திற்குக் கீழ் கையை அணைத்துத் தழுவி நிற்கும் நிலை இம் மூர்த்தியின் நிலை. இல்லாவிடில் பார்சுவ சூத்திரத்திற்கு வெளியே தேவியின் இடது கரத்தில் இறைவனின் வலதுகரம் கிரகிக்கப்பட்டவாறு பொருந்த விளங்குமாறும் இந்நிலை அமையலாம். இன்றேல், தேவியின் வலது கை இறைவனைத் தழுவிய நிலையில் இவ்வுருவை அமைக்கலாம். இவ்வாறமையும் பொழுது சிவனின் இடைக்குச் சிறிது மேலே அவனின் வலப்பக்கத்தில் தேவியின் கை பொருந்தும். இந்நிலையில் தேவியின் இடது கையில் தாமரைமலர் விளங்கும். இதை மேல்வருமாறு இன்னொரு வகையாகவும் உருவாக்கலாம். சிவனதும், உமையதும் இடக்கரமும் வலக்கரமும் முறையே ஒவ்வொருவரைத் தழுவும் வகையது. இவ்வாறு ஆலிங்கன மூர்த்தியும் மூவகையாய் அமையலாம்.


சந்திரசேகரமூர்த்தி
(ஆலிங்கனத் தோற்றம்)


சந்திரசேகரமூர்த்தி
(பாவவிக்ரகண தோற்றம்)

தேவியுடன் கூடி நிற்பினும் தனியே நிற்பினும் சந்திரசேகர மூர்த்தி **பிரபாமண்டலத்துடன்** விளங்குதல் அவசியம். இம்மூர்த்தி நின்ற நிலையிலேயே உருவம் பெறும். மூவகையாகக் கூறப்பட்ட சந்திரசேகர மூர்த்தியின் இரண்டாவது வகையான உமாசகித நிலையிலேயே இந்தியாவிலும் இலங்கையிலும் இம்மூர்த்தி நிறுவியிருக்கக் காண்கிறோம்.

**சோமாஸ்கந்தமூர்த்தி:**

உமையுடனும் கந்தனுடனும் ஒருங்கு வீற்றிருக்கும் இம்மூர்த்தி சோமாஸ்கந்த மூர்த்தி எனப்படும். இம் மூர்த்தி, இறைவனது பெருந்தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெறும் பெரும் நிலையினையே சுட்டுகிறது. மூர்த்தியின் வலது புறத்திலும் இடது புறத்திலும் இரு சக்திகள் இடம்பெறுவர். இடது புறத்தில் இருக்கும் சக்திக்கும் இறைவனுக்கும் நடுவில் கந்தன் நிற்பான். சோமாஸ்கந்த மூர்த்தியின் நிலை இச்சா சக்தியையும், கிரியா சக்தியையும், ஞானசக்தியாகிய கந்தனையும் செயல்படுத்தி பஞ்ச கிருத்தியங்களையும் லீலையாகப் புரிந்து நிற்கும் நிலை. இது சிவனது மூர்த்தி பேதங்களுள் மிக முக்கியத்துவம் பெற்றது. இம்மூர்த்தியைத் தேர்த் திருவிழாப் போன்ற மிகமிக முக்கியமான தினங்களில் மட்டுமே திருவுலாக் கொண்டு எழுந்தருளச் செய்வர்.



சோமாஸ்கந்தமூர்த்தி

இங்கு சிவன் சுகாசன மூர்த்தியாக விளங்குவர். இது சுகமாக வீற்றிருக்கும் நிலை. இறைவன் முக்கண்ணனாகக் காட்சியளிப்பவன். அவன் அமர்ந்திருக்கும் ஆசனம் **பத்ரபீடம்** எனப்படும். இடதுகால் மடித்து முழந்தாள்வரை நீண்டு ஆசனத்தில் கிடக்கும். வலதுகால் ஆசனத்தின்கீழ் தொங்கியபடி இருக்கும். இவன் புலித்தோலாடையை உடுத்தி நிற்பன். பின் உள்ள வலது கையில் பரசு விளங்கும். பின் உள்ள இடது கையில் இருப்பது மான். மற்றைய வலது கை அபயகரமாகவும் நான்காவது கை வரதகரமாகவும் இருக்கும். நாலாவது கையை சிம்ஹகர்ணஹஸ்தமாக அமைப்பதும் உண்டு. வலது காதில் மகரகுண்டலமாவது, சிம்ஹ குண்டலமாவது தொங்கும். இடது காதில் விளங்குவது பத்ரகுண்டம். தலை சடாமகுடம் புனைந்த கோலத்தினால் அழகுற்று விளங்கும். தலையின் பின்னே **சிகாசக்கிரம்** உண்டு. ஊமத்தம் மலரும் பிறையும் சடையிற் சூட்டப்படுவன. பாம்பு வடிவான **கங்கணங்கள்** கைகளை அழகு செய்வன. உபவீதம் மார்பில் விளங்கும். உத்தரியம் இடுப்பிற் கட்டப்பட்டு இரு மருங்கிலும், வால்போல் நீண்டு தொங்கி நிற்கும்.

உமை சிவனுக்கு இடது பக்கத்தில் வீற்றிருப்பவள். இவளது வலக்கரம் தாமரையை ஏந்தும். இடது கை சிம்ஹகர்ணஹஸ்தமாகவோ அல்லது ஆசனத்தைத் தொட்டவாறோ இருக்கலாம். தலை கரண்ட மகுடம் புனைந்த நிலையில் விளங்கும். இடதுகால் கீழே தொங்க, வலதுகால் மடிந்தவாறு ஆசனத்தில் பொருந்திக் கிடக்கும். தேவியின் வலது கை உற்பவத்தைத் தாங்கியும், இடது கை வரதகரமாகவும் இருக்கலாம். அமர்ந்த நிலையில் இருக்கும் தேவியின் விக்கிரகம் சிவனது தோளளவிற்கு உயர்ந்து இருத்தல் வேண்டும். இரு விக்கிரகங்களும் ஒரே பிரபாமண்டலத்தினுள் அமைதல் அவசியம்.

கந்தனின் உருவம் அம்மையினதும் அப்பனதும் உருவங்களின் நடுவில் அமையும். இவ்வுருவம் நின்ற நிலையிலாவது அமர்ந்த நிலையிலாவது இருக்கலாம் என விதி இருப்பினும் பெரும்பாலும் நின்ற நிலையிலேயே விக்கிரகங்கள் வழக்கிற் காணப்படுகின்றன. கந்தன் விக்கிரகம் உமை மடிமீது அமர்ந்திருப்பதாகவும் சித்தரிக்கலாம் எனவும் விதி உள்ளது. நின்ற நிலையில் கந்தன் கூத்தாடும் பாவனையில் அமைக்கப்படுவான். ஒரு முகமும் இரு கண்களும், இரு கரங்களும் கரண்ட மகுடமும் இவன் அழகைப் பெருக்குவன. சன்னவீரமும் அரைச் சலங்கையும் இடையை அழகு செய்வன. கைகளில் காப்பு அணிவதுடன், வலது கரத்தில் தாமரை ஏந்தி நிற்பன். இடது கரம் தொங்கி நிற்கும். இடது கரம் வரதமாகவோ, சிம்ஹகர்ணமாகவோ இருக்கலாம். வலது கையில் புத்தகம் ஏந்தி நிற்கும் முறையும் உண்டு. இது இவன் ஞானசக்தி என்பதைக் குறிப்பாயுணர்த்து மல்லவா! இரு கரங்களிலும் தாமரை மலர் ஏந்திக் கூத்தாடி நிற்கும் நிலையிலேயே இம்மூர்த்தி நிறுவப்பட்டிருப்பதைப் பெரும்பாலும் காண்கிறோம். கந்தனின் உயரம் சிவனின் உயரத்தில் பத்திலொன்றுக்குக் குறையாமலும் பத்தில் நான்கு பங்கிற்கு மேற்படாமலும் இருத்தல் அவசியம். சோமாஸ்கந்த மூர்த்தியின் இரு மருங்கிலும் பிரம்மாவையும், விஷ்ணுவையும் நிறுவும்படி காரணாகமம் விதிக்கின்றது.

தாமர விக்கிரகமாக அமைந்து மிகமிக முக்கியமான நாட்களில் திருவுலா வருள வேண்டிய இவ்வுருவை சிலா விக்கிரகமாக அமைத்தும் வழிபடும் வழமை ஒரு சில இடங் களில் இருக்கிறது. திருமழபாடியில் உள்ள திருத்தலத்தில் சிலா விக்கிரகத்தைக் காணலாம்.

(தொடரும்...




கொடுக்கும்போது கனிவு இருத்தல் வேண்டும்.

# ஆன்மிக வாழ்வு

திரு த. சுகந்தன் அவர்கள்

சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். சிவம்தான் மெய்ப்பொருள், பரம் பொருள் என்கின்றோம். சிவம்தான் "இறை" என்பதும் "இறைவன்" என்பதும் ஆகும். வியாசமுனிவர் இறைவனைக் "கர்த்தர்" என்று கூறியுள்ளார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இந்த உலகத்திற்கு "கர்த்தர்" சிவபெருமான் என்று தாம் இயற்றிய சைவ வினாவிடையில் குறிப்பிடுகின்றார். இங்கு "கர்த்தர்" என்பதன் பொருள் உலகம் உள்ளிட்ட இப்பிரபஞ்சத்தையும் இங்கு வாழுகின்ற சகல உயிரினங்களையும், அவற்றின் வாழ்வுக்குத் தேவையானவற்றையும் மற்றும் வாழ்க்கை வசதிகளையும் படைத்தான் என்பதாகும். அவ்வாறு படைத்தவனையே இறைவன் என்கின்றோம். அந்த இறைவனே சிவபெருமான் என்று சைவநெறி கொள்கிறது. சிவத்திற்கு நிகராகவோ, மேலாகவோ ஒன்றும் இல்லை என்பது எமது உறுதியான நம்பிக்கை.

பரம்பொருள், கர்த்தா, உண்மைப்பொருள் எனக் கூறப்படுகின்ற இறைவன் ஒருவனே என அழுத்தம் திருத்தமாகச் சைவம் குறிப்பிடுகின்றது.

"ஒன்றவன் தானே" என்றும்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றும் திருமந்திரம் தீர்ப்பு வழங்குகின்றது.

"ஏகம் சத்" என்பது வேதவாக்கியம்.

அப்படியானால், விநாயகர், முருகன், வைரவர், விஷ்ணு முதலிய பல தெய்வங்களைச் சைவர்கள் வணங்குகின்றார்களே! என்று வினா எழுப்பக்கூடும்.

உண்மையில் ஒரே இறைவனைத்தான், பல்வேறு உருவ வழிபாடு என்ற பெயரில் சைவர்கள் வழிபாடு செய்கின்றனர் என்று இதற்கு விடை தரலாம்.

"யாதொரு தெய்வங் கொண்டிர் அத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தான் வருவர்" (சிவஞானசித்தியார்)

இத்தகையு தெய்வ உருவங்கள் இறைவனின் தத்துவ உருவங்கள். சிவன்வேறு, விநாயகர் வேறு அல்ல. இருவரும் ஒருவரே. சிவன் வேறு முருகன் வேறு அல்ல. அவர்கள் இருவரும் ஒருவரே. கர்த்தாவாகச் சிவபெருமான் ஒருவரே இருப்பினும் முத்தொழில்களாகிய படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றை நிகழ்த்தும் போது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மூன்று வடிவங்களையும் மூன்று பெயர்களையும் கொண்டு விளங்குகின்றார்.

சிவபெருமான் மேற்கொள்கின்ற முத்தொழில்களுக்கேற்ப வெவ்வேறு உருவங்கள் பெயர்களை மட்டுமல்ல, வெவ்வேறு இயல்புகளையும் கொண்டுள்ளனர்.

பிரமனாகப் படைக்கும் தொழிலை ஆற்றும் போது சிவபெருமான் ராஜச குணத்தையும், விஷ்ணுவாகக் காத்தற் தொழிலைப் புரியும் போது சாத்வீக குணத்தினையும், உருத்திரனாக அழித்தலில் ஈடுபடும் போது தாமச குணத்தினையும் மேற்கொள்கின்றார் என்று நூல்கள் கூறுகின்றன.

இம்மூன்று குணங்களும் இறைவனின் இயல்பான குணங்கள் அல்ல. குணம்குறி அற்றவன் தான் இறைவன். அவ்வாறிருந்தும் தேவை கருதியும், செயல்முறை நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டும் இம் மூன்று குணங்களையும் இறைவன் ஏற்றுக் கொள்கின்றார்.

மனிதர்கள் படைக்கப்பட்டவர்கள். அதனால் மூன்று குணங்களையும் இயல்பாகவே பெற்றுள்ளவர்களாக விளங்குகின்றனர். எனினும், மனிதன் சாத்வீக குணம் நிறைந்தவனாகவே விளங்கவேண்டும் எனப்படுகிறது. அதற்கு எந்நேரமும் கொந்தளித்துக் கொண்டிருக்கும் மனம் அடங்கவேண்டும். மனம் ஏன் கொந்தளிக்கின்றது? மனிதனிடம் மிகுந்து காணப்படுகின்ற இராஜச, தாமச குணங்களின் அதிதீவிர் முனைப்புத்தான் மனக் கொந்தளிப்புக்குக் காரணம். மனம் கொந்தளிப்பு இன்றி அடங்க வேண்டுமானால் பரம்பொருளாகிய இறைவனின் நினைவினை என்றும் அகலாதபடி நெஞ்சத்தில் நிறுத்துவதுதான் ஒருவழி. மனித நெஞ்சங்கள், இறைவனின் இருப்பிடம் ஆகிவிட்டால் அந்த இடம் தூய்மை பெற்றுவிடும். அழுக்காறு, அவா, வெகுளி, கர்வம், செருக்கு, எரிச்சல், பொறாமை போன்ற மன அழுக்குகள் அகன்றுவிடும். சாத்வீகம் மலர்ச்சி பெற்று விடுகின்றது. இந்த நிலையில் மனதின் கொந்தளிப்பு, அலைமோதல் என்பன ஓய்ந்து மனம் அமைதி பெற்றுவிடுகின்றது.

மனம் அடங்கி அமைதி பெற்ற நிலையில், இறைவனை நாம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. இதனையே "ஆன்மிகம்" என்பர். ஆன்மிகம் எமது வாழ்வில் முதன்மை பெறுகின்றது. வையத்துள் மனிதர்கள் வாழ்வாங்கு வாழ ஆன்மிகம் தான் உறுதுணை. ஆன்மிகம் மனிதர்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழும் நிலைக்கு உயர்த்துகின்றது. "ஆன்மிக வாழ்வு என்பது அடையமுடியாததொன்று- இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு ஆன்மிகத்துடன் இணைவது என்பது எல்லோருக்கும் கைவரக் கூடியதன்று" என்று பலர் எண்ணக்கூடும். அந்த எண்ணம் தவறானது.

உண்மையில் ஒவ்வொரு மனிதனும் ஆன்மிகவளம் கொண்டவன் என்று சைவம் கூறுகின்றது. மனிதன் அபூர்வமாகப் பெற்ற ஆன்மிக வளத்தை அலட்சியப்படுத்தாது தனது வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு முறையாகப் பயன்படுத்துவதற்கு உதவும் முகமாகவே சைவநெறி வகுக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டிய தர்ம நெறிகளை சைவ சமயம் எடுத்துக் கூறுகின்றது. சைவம் வழங்கும் தர்மநெறிகளை அறிந்து, தெளிந்து வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுதலே ஆன்மிகவாழ்வு ஆகும். அப்போதுதான் மனித வாழ்க்கைத்தரம் மேன்மையும் மேம்பாடும் அடையும்.

நமது வாழ்வு உயர்வு பெற ஆன்மிகம் தழுவியதாக அமைய வேண்டும். ஆன்மிக வாழ்வு என்பது தர்மமும் நல்லொழுக்கமும் நிறைந்த வாழ்வு. அதுவே சைவநெறி அமைத்துத்தரும் வாழ்வு. சைவம் சிவசம்பந்தம் உள்ளது. சிவம் முழுமுதற் பொருள். சிவத்தை சிந்தித்தும், முன்வைத்தும், சிவத்தின் கருத்தை அறிந்தும் வாழ்கின்ற வாழ்வே செம்மையான வாழ்வு ஆகும்.

தற்காலத்தில் மனிதர்கள் இறைவனை நம்புவதில்லை. அவர்களுக்கு இறைவன் மீது அன்பு இல்லை. இறைவனை விசாரித்து மனிதர்கள் கருமங்களை ஆற்றுவதில்லை. அதனால் மனிதர்கள் நேர்மை, நீதி, நல்லொழுக்கம், அன்பு, அறம், என்பவற்றைப் பற்றிக் கவலை கொள்வதேயில்லை. தெய்வத்தின் மேல் அன்பும், பாவங்கள் பாதகங்கள் புரிய அச்சமும் மனிதர்களுக்கு எப்பொழுது ஏற்படுகின்றதோ அப்பொழுதுதான் சமுதாயத்தில் இன்பம் மலரும் - துன்பம் தொலையும் என்பதை உணர்வோமாக.

**துயரம் மனிதனைக் கிழவனாக்கி விடுகிறது.**

# சிவராத்திரி

திருமதி ப. நடராசா அவர்கள்



சிவராத்திரி இது சுபராத்திரி
பாவம் போக்கிடப் பாலாபிஷேகம் செய்தே
சிவனார் புகழ்பாடி மகிழ்ந்திடும்
சிவராத்திரி இது சுபராத்திரி

ஆதியந்தமில்லா ஆனந்தப் பேரூற்று
ஜோதி சொரூபமாய்த் தோன்றியருளி
நீதி புகட்டிய நின்மலன் புகழ்பாடும்
சிவராத்திரி இது சுபராத்திரி

அரிபிரமாதியர் ஆணவம் அழித்திட
எரி தணலாயுருக் கொண்டருளிய
விரி சடையோன் புகழ் பாடும்
சிவராத்திரி இது சுபராத்திரி

வரிசை தப்பாமல் வாழ்ந்திட அருளும்
கரிகுழல் மங்கை இடபாகம் வைத்த
திரிபுரமெரித் தோன் புகழ் பாடும்
சிவராத்திரி இது சுபராத்திரி

திருக்கேதார நாதரும் கௌரி அம்பாளும்
திருப்பொலிய வீற்றிருந்தருள் புரி
திருக்கேதீஸ்வரப் பதியில் தீர்த்தக்காவடி சுமந்து
வரும் அடியவர் தொண்டர் மகிழ்
சிவராத்திரி இது சுபராத்திரி

ஆலகாலமுண்ட நீலகண்டன் மகிழ
கால காலனாம் அவன் கருணை பொங்கிட
நலமளிக்கும் நாயன்மார் நற்றுதியதை
சீலமுடனடியவர் பாடி மகிழ்ந்திடும்
சிவராத்திரி இது சுபராத்திரி
சிவ சிவ ஓம்

# அட்ட வீரட்டத் தலங்கள்

-வல்வையூர் அப்பாண்ணா-

தமிழகத்தில் உள்ள சிவாலயங்களுள் 8 சிவாலயங்கள் "அட்டவீரட்டத்தலங்கள்" எனப் புகழ்பெற்று விளங்குகின்றன. சிவனின் வீரச் செயல்களை வெளிப்படுத்தி நிற்கும் இத்திருக்கோயில்களில் உள்ள மூலமூர்த்தி "வீரட்டானேஸ்வரர்" அல்லது "வீரட்டேஸ்வரர்" எனப் பொதுப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறார். இந்த வீரட்டேஸ்வரர் திருத்தலங்களில் முதலில் வருவது "திருக்கண்டியூர்" ஸ்தலமாக இருந்தபோதிலும் "திருக்கோயிலூர்" ஸ்தலத்திலிருந்து நாம் பயணத்தை ஆரம்பித்தால் எட்டு சிவாலயங்களையும் பிரதட்சணமாக வலம் வரும் பேறு கிடைக்கும். எனவே நாமும் திருக்கோவிலூரிலிருந்து பயணத்தைத் தொடங்குவோம்.

மாசிமாத மகா சிவராத்திரி நாளில் ஒரே நாளில் தொடர்ந்து ஒரே பயணமாக தரிசிப்பதன் மூலம் பிணி நீங்கி - செல்வம் பெருகி - நினைத்தவை நடக்கும் என்பது அங்குள்ள மக்களின் அசையாத நம்பிக்கையாகும்.

## 1. திருக்கோவலூர்:- [கோவல் வீரட்டம்]

கேடுமூப்புச் சாக்காடு கெழுமிவந்து நாடொறும்
ஆடுபோல நரைகளாய் யாக்கைபோக்க தன்றியும்
கூடிநின்று பைம்பொழிற் குழகன் கோவலூர்தனுள்
வீடுகாட்டு நெறியினான் வீரட்டானஞ் சேர்துமே.

-ஞானசம்பந்தர்

வழித்தலைப் படவு மாட்டேன் வைகலுந் தூய்மைசெய்து
பழித்திலேன் பாசம் அற்றுப் பரமநான் பரவமாட்டேன்
இழித்திலேன் பிறவி தன்னை என்னினைந் திருக்கமாட்டேன்
கொழித்துவந் தலைக்குந் தெண்ணீர்க் கோவல்வீ ரட்டனீரே

-அப்பர்

இறைவன் :- வீரட்டேஸ்வரர்

இறைவி :- சிவானந்தவல்லி, பெரியநாயகி, பிருகந்நாயகி

திருவண்ணாமலையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் இத்திருக்கோயில் உள்ளது. திருவண்ணாமலையிலிருந்து சென்றால் தென்பண்ணையாற்றுப் பாலத்தைக் கடந்து ஊருக்குள் சென்று கடலூர் - பண்ருட்டி பாதையில் சென்றால் கீழையூர் பகுதியில் கோயில் உள்ளது. அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. சம்பந்தர், அப்பர் இருவராலும் பாடப்பெற்ற ஸ்தலம். மெய்ப்பொருள் நாயனார் அவதரித்த ஊர் இது. அந்தகாசுரனை சம்ஹரித்த தலம்.

சிவபெருமானின் கண்களை பார்வதிதேவியார் விளையாட்டாகப் பொத்தியபோது ஏற்பட்ட கால இடைவெளியில் அந்தகாசுரன் தோன்றினான். அகந்தைகொண்ட அந்தகாசுரனை சிவபெருமான் எரித்தார். "மனிதன் அகந்தையை அழிக்க வேண்டும்" என மக்களை அறிவுறுத்தும் திருத்தலம் இது. இத்தலத்திலிருந்துதான் சேக்கிழாரும், சேரமானும் கையிலாயத்திற்குச் சென்றனர். அவர்கள் கையிலாயம் செல்வதை அறிந்த ஔவைப்பிராட்டியார், தானும் கையிலாயம் செல்லவேண்டும் என விரும்பி விநாயகரைத் துதிக்க அவர்தம் தும்பிக்கையால் (சேக்கிழாரும் சேரமானும் சென்றுசேர முன்பே) ஔவைப்பிராட்டியை திருக்கையிலாயம் கொண்டுசென்று சேர்த்ததாக வரலாறு கூறுகிறது.

இங்கே கோயில் கொண்டுள்ள துர்க்கைஅம்மனின் விழிகள் உயிரோட்டமுள்ள கண்களைப்போன்று வெள்ளைப் படலத்துடன் அமைந்த கருவிழியுடன் அருள் பாலிப்பது இத்திருக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

## 2. திருவதிகை:- [அதிகை வீரட்டம்]

தம்மானை அறியாத சாதியார் உளரே
சடைமேற்கொள் பிறையானை விடைமேற்கொள் விகிர்தன்
கைம்மாவின் உரியானைக் கரிகாட்டில் ஆடல்
உடையானை விடையானைக் கறைகொண்ட கண்டத்
தெம்மான்றன் அடிக்கொண்டென் முடிமேல்வைனும்திடும்என்
ஆசையால் வாழ்கின்ற அறிவிலா நாயேன்
எம்மானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோது மிகழ்வன்போலியானே.

-சுந்தரர்

எண்ணார் எயிலெய்தான் இறைவன் அனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரமன் அதிகையுள்
விண்ணார் பரவ நின்றாடும் வீரட்டா னத்தே

-ஞானசம்பந்தர்

இறைவன்:- வீரட்டேஸ்வரர், வீரட்டநாதர், அதிகைநாதர்
இறைவி :- திரிபுரசுந்தரி

தென்ஆற்காடு கடலூர் மாவட்டத்தில் உள்ள பண்ருட்டியிலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவராலும் பாடப்பெற்ற ஸ்தலம். அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. சிவபெருமான் திரிபுரத்தை எரித்து வீரச்செயல் நிகழ்த்திய ஸ்தலம். அப்பர் தமக்கையார் திலகவதியார் தங்கியிருந்து திருத்தொண்டு செய்த ஸ்தலம். திருஞானசம்பந்தருக்கு இறைவன் திருநடனம் காட்டிய இடமும் இதுவாகும். சூலைநோயின் துன்பம் தாளப்பெறாத அப்பர் பெருமான் இங்கு வந்த தமக்கையாரைக் கண்டு அவர்

சொற்படி திருஅதிகைப்பிரான் அடிமலர் வீழ்ந்து பணிந்து வணங்கி "ஆற்றேன் அடியேன்"என்ற பதிகம் பாடிக் கொடிய சூலைநோய் நீங்கப்பெற்ற அற்புதத்தலம். இவ்வுலகிற்கு நாவுக்கரசரை (அப்பரை) வழங்கியருளிய பெருமைமிகு தலம் இதுவே.

## 3. திருக்குறுக்கை:- [குறுக்கை வீரட்டம்]

சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்த போதே
கோச்செங்க ணானு மாகிக்
கலந்தநீர்க் காவி ரிசூழ்ச்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலத்தினிற் பிறப்பித் திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே

-அப்பர்

இறைவன்:- வீரட்டேசுவரர்
இறைவி :- ஞானாம்பிகை

மக்கள் வழக்கில் "கொருக்கை"என வழங்கப்படுகின்ற இத்திருத்தலம் மயிலாடு துறைக்கு அருகே 12கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறை - மணல்மேடு பேருந்துச் சாலையில் நீடூர் தாண்டி, கொண்டல் ஊரையடைந்து "கொருக்கை" என்று வழிகாட்டிப் பலகை உள்ள சாலை இடது புறமாக 3கி.மீ. சென்று பாலத்தைக் கடந்து இத்தலத்தை அடையலாம். அப்பரால் பாடப்பெற்ற தலம். அட்டவீரட்டத்தலங்களில் ஒன்று. மன்மதனை எரித்த தலம். அந்த இடம் "வீபூதிக்குட்டை"என்ற பெயரில் 1கி.மீ தொலைவில் உள்ளது. இக்குட்டையில் எங்கெடுத்தாலும் மண்ணானது வீபூதி போன்று வெண்மையாக இன்றும் உள்ளது. சூரபத்மனை வதைப்பதற்காக சுப்பிரமணியரைத் தோற்றுவிக்கும் பொருட்டு நீண்ட நாட்களாகத் தியானத்தில் இருந்த சிவனை விழித்தெழச் செய்ய, மன்மதன் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி தன்மலர்க் கணைகளை இறைவன் மீது தொடுக்கின்றான். அதனால் கண்விழித்த சிவபெருமான் தன் நெற்றிக் கண்ணால் மன்மதனை எரித்து விடுகின்றார். மன்மதன் எரியுண்ட இடம் இதுவே.

## 4. திருவழுவூர்:- [வழுவூர் வீரட்டம்]

இறைவன் :- வீரட்டேசுவரர், கிருத்திவாசன்
இறைவி :- இளங்கிளைநாயகி

மயிலாடுதுறை - திருவாரூர் பேருந்து சாலையில் மங்கநல்லூருக்கு முன்னால் "வழுவூர்" என உள்ள இடத்தில் திரும்பி 2கி.மீ. சென்றால் இக்கோயிலை அடையலாம்.

நட்பு உண்டாவதற்கு அன்பு மட்டும் போதாது.

அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று. இதிகாசங்களில் குறிப்பிட்ட தாருகாவனம் இங்குதான் உள்ளது. சிவபெருமான் பிட்சாடனராகவும், திருமால் மோகினியாகவும் வந்து ஸ்ரீ அய்யனாரை (ஐயப்பன்) தோற்றுவித்த இடம். 48000 ரிஷிகள் ஏவிய யானையைக் கிழித்து போர்த்தி வீரநடனம் ஆடிய தலமாகும். கஜசம்ஹார மூர்த்தியின் ஊர்த்துவ நடனம் (நவ தாண்டவத்தில் ஒன்று) உள்ளங்கால் தெரியும் வண்ணம் தூக்கி இருப்பது வேறு எங்கும் காணமுடியாதது. தாருகாவனத்து ரிஷிகளின் ஆணவத்தைப் போக்கி ஞான உபதேசம் செய்த தலம் இது.

## 5. திருப்பறியலூர் (பரசலூர்):- (பறியல் வீரட்டம்)

அரவுற்ற நாணா அனல்அம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே.

-ஞானசம்பந்தர்

இறைவன் :- வீரட்டேஸ்வரர்
இறைவி :- இளங்கொம்பனையாள்

மயிலாடுதுறை - தரங்கம்பாடி பாதையில் செம்பொன்னார் கோயிலையடைந்து அவ்வூர் பிரதான சாலையில் "நல்லாடை" என்று கைகாட்டி காட்டும் பாதையில் வலதுபுறம் திரும்பி சிறிதுதூரம் சென்றால் "பரசலூர்" என்ற கைகாட்டி வரும். அங்கே பிரியும் சாலையில் வலதுபுறமாகத் திரும்பி 2கி.மீ. சென்றால் இக்கோயில் உள்ளது.

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம். அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. வீரபத்திரரை ஏவித் தக்கனைச் சம்ஹரித்த தலம். தக்கன் யாகம் செய்த தலமாதலின் "தக்ஷபுரம்" என்றும் தேவர்களுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தண்டனை மூலம் பறித்ததால் "பறியலூர்" என்றும் பெயர்கள் உண்டு.

## 6. திருக்கடையூர்:- (கடவூர் வீரட்டம்)

மையார் கண்டத்தினாய்
மதமாவுரி போர்த்தவனே
பொய்யா தென்உயிருட்
புகுந்தாயின்னம் போந்தறியாய்
கையார் ஆடரவா
கடவூர் தனுள் வீரட்டத்தெம்
ஐயா என் அமுதே
என்க்கார் துணை நீயலதே.

-சுந்தரர்

இறைவன்: அமிர்தகடேஸ்வரர், அமிர்தலிங்கேஸ்வரர்
இறைவி : அபிராமி

மதிக்காத இடத்தில் புத்திமதி கூறக்கூடாது.

மயிலாடுதுறை தரங்கம்பாடி பேருந்து சாலையில் இத்தலம் உள்ளது. மூவராலும் பாடல் பெற்ற தலம். அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று. மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்தருளிய தலம். காரி நாயனார், குங்குலியக்கலய நாயனார் ஆகியோர் வாழ்ந்து தொண்டாற்றி முத்தியடைந்த தலம். உள்ளம் உருகப் பாராயணம் செய்யப்படும் "அபிராமி அந்தாதி" பாடப்பெற்ற அற்புதப்பதி.

திருக்கடவூர் திருக்கோவில் யமபயம் நீக்கவல்லது. இங்குள்ள காலசம்ஹார மூர்த்தி, காலனைச் சம்ஹரித்த மூர்த்தியாகும். கம்பீரமான தோற்றம் கொண்ட மிகப் பெரிய மூர்த்தி. திருமேனியில் எமன் வீசிய பாசக்கயிற்றின் தழும்பு உள்ளது. காலசம்ஹார மூர்த்தி - பாலாம்பிகையுடன் காட்சி தருகிறார்.

இம்மூர்த்தியின் திருவடிக்குக் கீழ் மார்க்கண்டேயர் கைகூப்பிய நிலையில் இருப்பது, எமன் உதைபட்டுக் கீழே கிடப்பது ஆகிய இக்காட்சி பீடத்தின் அடியில் வெள்ளித்தகட்டால் மறைக்கப்பட்டுள்ளது. தீபாராதனை வேளையில் - வெள்ளித்தகடு அகற்றப்படும்போது இதனைத் தரிசிக்கலாம்.

## 7. திருவிற்குடி: - [விற்குடி வீரட்டம்]

வடிகொள்ள மேனியர் வானமா மதியினர்
நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியினர்
உடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறும்எம் மானமர்ந் தினிதுறை
விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை
அருவினை யடையாவே.

-ஞானசம்பந்தர்

**இறைவன் : வீரட்டானேஸ்வரர்**
**இறைவி : ஏலவார்குழலி, பரிமளநாயகி**

நாகூர் - நாகபட்டினம் சாலையில் காரைக்கால் வழியாகத் திருவாரூர் செல்லும் பேருந்தில் விற்குடியில் இறங்கி 1கி.மீ.தூரம் சென்றால் கோயிலை அடையலாம்.

அட்டவீரட்டத்தலங்களுள் ஒன்று சலந்தராசூரனை சம்ஹரித்த தலம். சலந்தரனின் மனைவியான பிருந்தயை திருமால் "துளசி"யாக (தலவிருட்சமாக) ஏற்றுக்கொண்ட ஸ்தலம். சலந்தராசூரனை சம்ஹரித்த மூர்த்தியாதலால் "ஜலந்த்ரவத மூர்த்தி" எனும் திருநாமத்தையுடையவர். கோயிலின் உற்சவத் திருமேனி தரிசித்து மகிழ வேண்டிய அழகான ஐம்பொன் திருமேனி. வலது உள்ளங்கையில் சக்கரம் ஏந்தியுள்ளார். ஏனைய கரங்களில் மான், மழு ஏந்தி ஒரு கை ஆயுத முத்திரை தாங்கியுள்ளது.

அம்பாள் சந்நிதியின் எதிரில் மண்டபத்தின் மேற்புறத்தில் சோதிடத்திலுள்ள பன்னிரு ராசிகளும் உரிய கட்டமைப்பில் அமைக்கப்பட்டுள்ளன. அபிஷேக நீர் வெளிவரும் கோமுகம் ஒரு பெண் தாங்குவது போன்ற அமைப்பில் உள்ளது.

## 8. திருக்கண்டியூர்:- (கண்டிவீரட்டம்)

உள்ள வாறெனக் குரைசெய் மின்னுயிர்
வாய மாதவம் பேணுவீர்
கள்ள விம்பொழில் சூழுங் கண்டியூர்
வீரட் டத்துறை காதலான்
பிள்ளை வான்பிறை செஞ்ச டைம்மிசை
வைத்த தும்பெரு நீரொலி
வெள்ளந் தாங்கிய தென்கொ லோமிகு
மங்கை யாளுட னாகவே.

-ஞானசம்பந்தர்

**இறைவன் :** பிரம சிரக்கண்டீஸ்வரர், பிரமநாதர், வீரட்டேஸ்வரர்

**இறைவி :** மங்களநாயகி

தஞ்சாவூரிலிருந்து 10கி.மீ. தூரத்திலும், திருவையாற்றிலிருந்து 3கி.மீ. தொலைவிலும் உள்ளது இத்திருத்தலம். சம்பந்தர், அப்பர் இருவராலும் பாடப்பெற்ற ஸ்தலம். அட்டவீரட்டத் தலங்களுள் பிரமனை சிரம் கிள்ளிய தலம். இறைவன் தன் சூலத்தால் பிரம்மனின் தலையைக் கண்டம் (கொய்த) காரணத்தால் இத்தலத்திற்கு இப்பெயர் வந்தது. சப்தஸ்தானத் தலங்களுள் இதுவும் ஒன்று.

## சந்நிதி வேலா காத்திட வருவாயே

தகமை இல்லாத சிறியேன் மனம் ஆற
பதங்கள் தொழுதிட நின்றருள்வாயே
பகையை வென்றுன்தன் படிகள் தினம் காண
பக்தியை எனக்கும் புரிவாயே
குறமகளை மணம் புணர்ந்த குமரேசா
பரமற் குபதேசித்த குருநாதா
உறவோ பகையோ உன்தாழ் பணிவேனே
சந்நிதி வேலா காத்திட வருவாயே.



-சி. தனபாலசிங்கம்-

# பங்குனிமாத வாராந்த நிகழ்வுகள்

**01.03.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கீதை காட்டும் பாதை"

வழங்குபவர் :- ஜாக்கிரத் சைதன்யா சுவாமிகள் (சின்மஜா மிஷன்)

**08.03.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "கந்த விரதங்களும் சைவ வாழ்வியலும்"

வழங்குபவர் :- சுழவூர் சைவப்புலவர் குமாரசாமி சுமுகலிங்கம் J.P

**15.03.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "ஆறுமுகமான பொருள்"

வழங்குபவர் :- திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

[ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி , யாழ்ப்பாணம்]

**22.03.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

**29.03.2013 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

## ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

[இளை. அதிபர்]

மதிப்பீட்டுரை :- திரு க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள்

[இளை. அதிபர்]

**183ஆவது மலர்**

பதிவு இல. QD/25/NEWS/2013

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

